


மொழி ஓர் ஆயுதம் 07



நேர்காணல்:
பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன்

# மீள்பார்வை

මීල්පාර්වෙ
Registered as a Newspaper in Sri Lanka
GPO-QD/75/NEWS/2017 - ISSN 2012-5038
Meelparvai Fortnightly
meelparvai.net
සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்
இதழ் - 382 • 24 நவம்பர் 2017 வெள்ளிக்கிழமை • ரபீஉல் அவ்வல் 1439 • விலை 40.00




# வர்த்தமானி அறிவித்தலுக்கு இடைக்காலத் தடை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தாமதமாகலாம்

(எமது செய்தியாளர்)

எல்லை நிர்ணய மீளாய்வுக் குழுவினால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலுக்கு இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த 22 ஆம் திகதி இவ்வுத்தரவை பிறப்பித்துள்ளது. இதற்கமைய எதிர்வரும் டிசம்பர் 04 ஆம் திகதி வரை இந்தத் தடை அமுலில் இருக்கும் என நீதிமன்றம் தெரிவிக்கின்றது. இதன் காரணமாக எதிர்வரும் ஜனவரி மாத இறுதியில் இடம்பெறவிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிற்படுத்தப்படும் என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.



எல்லை நிர்ணய மீளாய்வுக் குழுவினால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் குறைபாடுகள் இருப்பதாகவும், இவ்வர்த்தமானி அமுலாவதை ரத்துச்செய்யுமாறு கோரியும் 6 உள்ளூராட்சி சபைகளின் வாக்காளர்களினால் தாக்கல் செய்யப்பட்ட மனு, கடந்த 22 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதியரசர்களான எல்.டி.டி. தெஹிதெனிய, ஷிரான் குணரத்ன மற்றும் குமுதினி விக்ரமசிங்க ஆகியோர் கொண்ட நீதியரசர் குழாத்தினரால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே இவ்வர்த்தமானி அறிவித்தலுக்கு இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இத்தீர்ப்பின் மூலம் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிற்படுத்தப்படுமா என தேர்தல்கள் ஆணைக்குழுவை வினவிய போது, இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு எந்தவிதமான முடிவுகளையும் எடுக்கவில்லை என்றும் எதிர்வரும் 4ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்ற தீர்ப்பு வெளியானதன் பின்பே அது பற்றிய முடிவுகள் எடுக்கப்படும் என்றும் தெரிவித்தது.

## பொதுநலவாய விளையாட்டு போட்டிக்கென திரட்டப்பட்ட 70 கோடி ரூபா மாயம்



### ஆணைக்குழு அமைக்குமாறு கபீர் வேண்டுகோள்

2018 ஆம் ஆண்டு பொதுநலவாய விளையாட்டு விழாவை இந்நாட்டிற்கு பெற்றுக்கொள்வதற்கு கடந்த அரசாங்கம் ஆரம்பித்த ''சீ.டபிள்யு.பீ. ஹம்பாந்தோட்டை 2018 பிரைவட் லிமிடட்'' மூலம் நடாத்திச் செல்லப்பட்டுள்ள கணக்கில் நிதி பயன்படுத்தப்பட்டுள்ள முறை தொடர்பில் ஆராய்வதற்கு ஆணைக்குழுவொன்றை நியமிக்குமாறு அரசாங்க தொழில் முயற்சி அமைச்சர் கபீர் ஹாஷிம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்வங்கிக் கணக்கில் 190 மில்லியன் ரூபா அரச நிதியும் தனியார் நிறுவனங்களிலிருந்து 708 மில்லியன் ரூபா நிதியும் வைப்புச்செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியான போதும் அதைப் பயன்படுத்தியவர்கள் மற்றும் பயன்படுத்திய (பக்.14)

## சுஜீவ முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களை தேடிப் பார்க்க வேண்டும்

**-இடதுசாரிகள் அமைப்பின் செயலாளர் சமீர பெரேரா-**



பொலிஸ், இரகசிய பொலிஸ் உள்ளடங்கும் சட்டம், ஒழுங்கு அமைச்சும் சட்டமா அதிபர் உள்ளடங்கும் நீதியமைச்சும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்களின் கீழ் இருப்பதனால், இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க குறிப்பிடும் குற்றங்களையெல்லாம் விரைவாக தேடிப் பார்க்க முடியும் என இடதுசாரிகள் அமைப்பின் செயலாளர் சமீர பெரேரா தெரிவித்துள்ளார்.

மருதானை சமூக ஐக்கிய கேந்திர நிலையத்தில் கடந்த தினம் நடைபெற்ற சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சிம்பாப்வே ஜனாதிபதி ரொபட் முகாபேவுக்கு நடந்தது போன்று மஹிந்த ராஜபக்ஷவுக்கு நடக்கவில்லை என்பது தொடர்பில் அவர் ஜனவரி 08 ஆட்சி மாற்றத்திற்கு பங்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும். மஹிந்த ராஜபக்ஷவுக்கு நடக்கவிருந்த விடயத்திற்கு ரொபட் முகாபே உதாரண புருஷராக உள்ளார். சிம்பாபே ஜனாதிபதி அவரைத் தொடர்ந்து

## கியாஸ் ஹுஸைன் 'கசிப்பு,' ஹுஸைன் என அழைக்கப்பட்டமைக்கு மன்னிப்பு கோரியது தெரண

காலி, கிந்தோட்ட சம்பவத்தில் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள போபே பொத்தல பிரதேச சபையின் முன்னாள் எதிர்க் கட்சித் தலைவர் முஹம்மத் கியாஸ் (ஸைப் ஹுஸைன்) என்பவரை கசிப்பு ஹுஸைன் என அழைத்தமைக்கு எதிராக முஸ்லிம் மீடியா போரம் தெரண தொலைக்காட்சியின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து தெரண தொலைக்காட்சி பகிரங்க மன்னிப்புக் கோரியுள்ளது.

கடந்த 20 ஆம் திகதி தெரண அருண பத்திரிகை கண்ணோட்ட நிகழ்ச்சியின் போது சிங்களப் பத்திரிகையொன்றில் வெளியான செய்தியை குறிப்பிடும் போதே விமர்சகர் சதுர சேனாரத்ன (ஸைப்) என்பதை கசிப்பு எனக் குறிப்பிட்டு விமர்சித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம். அமீன் இந்த விடயத்தை தெரண தொலைக்காட்சியின் பொது முகாமையாளர் மாதவ மடவளவின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளார். இது தொடர்பாக பகிரங்க மன்னிப்பு கோரப்படும் என உறுதியளித்திருந்த நிலையில் கடந்த 22ஆம் திகதி ஒளிபரப்பான பத்திரிகை கண்ணோட்ட நிகழ்ச்சியின் போது விமர்சகர் பகிரங்க மன்னிப்பு கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SLTRC எச்சரிக்கை

- முஜீப் இப்றாஹீம்


Sri Lanka Telecommunication Regulation Commission

NOTICE TO THE PUBLIC

Freedom of expression is a fundamental right; however, it should be used in a manner that does not harm social values.

It is the responsibility of every citizen to enjoy freedom of expression while upholding the values of responsible communication.

Sri Lanka Telecommunication Regulation Commission

No 276, Elvitigala Mawatha, Colombo 08.

SLTRC என்கிற Sri Lanka Telecom munications Regulatory Commission ஒரு எச்சரிக்கையினை விடுத்துள்ளது.

உங்களது கருத்து வெளியிடும் உரிமையானது ஒருவரை கேலி செய்ய, வெறுப்பை உமிழ, அபாண்டம் சொல்ல, பண்புகளை படுகொலை செய்ய பயன்படுத்தப்படக் கூடாது! சமூக வலைத் தளங்கள், தொலைபேசி, குறுந் தகவல் என எந்த ஊடகத்தில் அது நிகழ்ந்தாலும் அது பாரிய குற்றமாகும். அதனால் நீங்கள் சிறை செல்ல வேண்டியும் வரும்!

ஆனால் இந்த fake ID களின் அட்டகாசம் மற்றும் வெளிநாடுகளிலிருந்து caller ID இன்றி வரும் அழைப்புகள், unanimous messages இவற்றுக்கெல்லாம் TRC யோ அரசாங்கமோ என்ன செய்யப் போகிறது என்று கேட்டுக் கொண்டு...

இது அரசாங்கத்தை விமர்சிக்கின்ற ஊடகங்கள் மற்றும் தனி நபர்களை இலக்கு வைத்து விடுக்கப்படும் ஒரு வகை பயம் உடுத் தாட்டல் என்பதையும் புரிந்து கொள்ள முடிகிறது.

Right to expression should not be used to insult, slander, promote hatred or commit character assassinations by using social media, telephones, SMS'' TRC warns, says imprisonment possible.




அனஸ் அப்பாஸ்

- ரிஷாத் நஜ்முதீன்

யூஸுப் நபியின் கதையை பலமுறை மீட்டியிருக்கிறேன். எத்தனையோ படிப்பினைகள் எம்முன்னால் காட்சியளிக்கின்றன. பொருளாதாரம் பற்றிய தனது திட்டமிடலை அரசாங்கத்தை பகைத்துக் கொண்டு தனியாக முன்நகர்த்தவில்லை. தனிக் கட்சி ஆரம்பிக்கவில்லை. இணக்கப்பாட்டு அரசியலுக்குள் நுழைகிறார். அரசாங்க அங்கத்தவராகி மிகப்பெரும் அழிவிலிருந்து சமூகத்தை பாதுகாக்கிறார்.

இக்கருத்துடன் இலங்கை நோக்கி வருகிறோம். முடியுமான எல்லாப் பகுதிகளிலும் ஏன் நாம் அரச அலகுகளுடன் இணைந்து 'நலவை அதிகரித்தல், தீங்கை குறைத்தல்' எனும் இஸ்லாமிய சட்டங்களின் அடிப்படை இலக்கை நோக்கி நகரக் கூடாது!. கிராமத்தை கட்டியெழுப்பும் திட்டங்கள் அரச மட்டத்தில் இருக்க நாம் ஏன் ஒதுங்கிச் சென்று புதிய அமைப்புக்களாக இயங்க வேண்டும்!. எமது தூது ஒட்டுமொத்த மனிதர்களுக்குமானது. தனித்து இயங்குவது தூதின் பரப்பை மிகவுமே சுருக்கி விடுகிறது.

# சவால்களை எதிர்கொள்ளும் வழியென்ன?

நாட்டு நிலைமை நமக்கு உணர்த்துவது என்ன? நமது ஊர் எப்போது இலக்கு வைக்கப்படும்? நாம் எவ்வாறு நிலைமைகளை கையாளுவது?

அடித்தால் நாங்களும் அடிப்போம் எனும் நப்பாசையா? அல்லது அடிக்க மாட்டார்கள் எனும் மூட நம்பிக்கையா?

நாம் ஏன் நிலைமைகளை ஆராய்ந்து அதற்கான வழிமுறைகளைக் கையாளாமல் இருக்கிறோம்? என்ன செய்வது? ஆயுத பயிற்சியா? தற்காப்புக் கலையா?

இதற்கான தீர்வு என்னவென்று நாம் எத்தனை பேர் யோசிக்கிறோம்?

காலங்கள் மாறுகின்றது. நம்மோடு பழகிய சகோதர இன மக்கள் நம்மில் இருந்து தூரமாக்கப்படுகிறார்கள். நாமும் அவர்களுடன் பழகும் நேரம் குறைந்து விட்டது. நல்ல விடயங்கள் அவர்களோடு பகிர்வதற்கும் சந்தர்ப்பங்கள் இல்லை. நாளாந்தம் பழகும் சகோதர மொழி பேசுவோர்களுக்கு நமது வரவு என்ன செலவு என்ன என்று ஊகித்து அறிந்து கொள்ளக் கூட முடியும் என்ற நிலைமை இருக்கிறது.

நாம் எங்கு போகிறோம், எங்கிருந்து வருகிறோம் என்று அவர்கள் அக்கு வேறு ஆணி வேறாக அறிந்து வைத்து இருக்கிறார்கள். எங்கள் வீட்டில் எத்தனை பேர் வெளிநாட்டில் சம்பாதிக்கிறார்கள், வீட்டில் எத்தனை பேர் வசிக்கிறார்கள், எமக்கு எத்தனை கடை, காணி என்றும் என்ன வாகனம் இருக்கிறது என்றும் அனைத்தும் தெரியும்.

சிலர் கேட்கலாம் தெரிந்தால் நமக்கு என்ன என்று... அங்குதான் பிரச்சினையின் ஆரம்பமே இருக்கிறது. சோனகன் நன்றாக வாழ்கிறான் என்கிற பொறாமை.

இந்த பிரச்சினை காலி, கிந்தோட்டையோடு நின்று விடாது. நச்சு விதைகள் தூவப்பட்டு விட்டது.

சோனகனால் தவறு ஏற்பட்டால் மூன்று, நான்கு நாட்களுக்கு பிறகு தேடி வந்து தாக்குவார்கள், இது புதிய ட்ரெண்ட் (Trend)..

இதற்கு என்ன செய்யலாம், மார்க்க அடிப்படையில் தீர்வுள்ளதா, சமூகம் இதற்கான வழிகளை தேட நேரம் ஒதுக்கக் கூடாதா?

நமது வாழ்க்கை முறையில் மாற்றம் கட்டாயம் வேண்டும். எமக்கும் அவர்களுக்கும் இடையில் இருக்கும் இடைவெளியைத் தகர்ப்பது எமது கடமை. தன் உடலுக்குத் தீங்கிழைக்கும் குடிகாரனுடன் சேர்ந்து குடிக்க வேண்டும் என்று சொல்வதல்ல இது.

எமது ஊர்கள் செய்ய வேண்டியவை சில இதோ..!!

நாம் எமது சமூகத்துக்கு சிங்கள மொழியை கற்பிப்போம். எமது இளம் பிள்ளைகளுக்கு அதனை கற்பிப்பதில் கரிசனை செலுத்துவோம்.

அவர்களை வீட்டு கட்டுமான வேலை, அல்லது பயணம் (ஹயர்) போவதற்கு மட்டும் அழைக்காமல், சாதாரணமாக கலந்து பேசுவதற்கும் அழையுங்கள், அழைத்து மனதார பேசி, நல்ல எண்ணங்களைப் பரப்புங்கள். ஒருவருக்குப் பரப்பினால் பத்துப் பேருக்கு அவர் சொல்லுவார்.

குறிப்பாக, ஒவ்வொரு ஊரிலும் 'திறந்த பள்ளிவாசல் தினம்' வைத்து அவர்களுக்கு நாம் என்ன செய்கிறோம் என்று காட்டப்பட வேண்டும்.

வருடாந்த விளையாட்டு ஒன்று ஏற்பாடு செய்து பெரியவர்களின் உதவியோடு அவர்களையும் அழைத்து, விளையாடி, முக்கியமாக எமது பண்புகளை வெளிப்படுத்த வேண்டும். நாம் தோற்றாலும் பரவாயில்லை. நமது குணங்கள் தோற்கக்கூடாது.

இரண்டு ஊர்களும் சேர்ந்து பெரிய சிரமதான வேலை ஒன்று வருடா வருடம் நடாத்தினால் மிகவும் சிறப்பாக இருக்கும்..

முக்கியமாக நாங்கள் விட்ட பிழைகள்தான் தான் இவ்வளவு தூரம் வரக் காரணம். இது மீண்டும் தொடராமல் இருக்க நாம்தான் முன்வர வேண்டும்..

நாங்கள் கோழைகள் அல்ல என்பதை உடனே நிரூபிக்க முன்பு எமது வீடுகளில் பட்டப் பகலில் தனியே வசிக்கும் எங்கள் தாய்மார்கள், பெண் பிள்ளைகள் பிரச்சினை இன்றி வாழ இரண்டு நிமிடங்கள் யோசிப்போம்.


சுருக்கம்:- எமக்கும் அவர்களுக்கும் இடையில் இருக்கும் இடைவெளி குறைந்தால் பாதி பிரச்சினை சும்மாவே குறைந்து விடும் ..

சமூக நலன் கொண்ட பிரஜை..
நன்றி:- Binth Jameel




2020 ஆம் ஆண்டு நூற்றாண்டு காணப்போகும் நீர்கொழும்பு அல்-ஹிலால் மத்திய கல்லூரி, அதற்கான தயார்படுத்தல்களில் தன்னை அண்மைக் காலமாக ஈடுபடுத்தி வருகின்றது. அதன் தொடரில், மாபெரும் ஒன்றுகூடல் நிகழ்வொன்றை கல்லூரி வளாகத்தில் Hilalians Centernery Committee அண்மையில் ஏற்பாடு செய்திருந்தது.

இதில் கல்லூரியின் பழைய மாணவர்கள், மாணவர்களின் பெற்றோர், பாடசாலை ஆசிரியர்கள், விஷேட பிரமுகர்கள், நலன்விரும்பிகள், ஊர்மக்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர். எதிர்கால திட்டங்கள் குறித்த தெளிவை அஜ்மல் ஆசிரியர் மேற்கொண்டார். விஷேட உரைகளால் நிகழ்வை அலங்கரிக்க Mr. M.U. பதியுஸ் ஸமான் (SLAS) மற்றும் விஷேட அதிதி தென்கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் Dr. A.G. ஹுஸைன் இஸ்மாயீல் ஆகியோர் வருகை தந்தனர். கல்லூரி அதிபர் இர்ஷாட் அவர்களின் உரை மற்றும் தரம் 10 மாணவன் அமானத் மும்தாஸின் முயற்சியில் உருவாக்கப்பட்ட கல்லூரிக்கான இணையதளம் உள்ளிட்ட சமூக வலைதள கணக்குகளின் தொடக்க நிகழ்வு, பாடசாலை மாணவர் பாடல் என்பனவும் நிகழ்வை மேலும் மெருகூட்டியது. பிரதி அதிபர் பஹ்மி ஆசிரியரின் நன்றியுரையுடன் இரவு போஷன பரிமாறலுடன் நிகழ்வு நிறைவுற்றது.



திஹாரி தர்பிய்யா இஸ்லாமிய்யா நிறுவனத்தினால் 18-11-2017 அன்று நடாத்தப்பட்ட கலைவிழாவில் பெருந்தொகையானோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். நிட்டம்புவ பொலிஸ் அதிகாரிகள் பிரதம அதிதிகளாகவும் பல்வேறு நிறுவனங்களின் தலைவர்கள் சிறப்பதிதிகளாகவும் கலந்துகொண்ட இந்நிகழ்வில் கவிதை, பாடல், விர்து வில்லுப்பாட்டு, நாடகம் போன்ற பல்வேறு கலைநிகழ்ச்சிகள் லப்ஸன் கேட்போர் கூடத்தில் அரங்கேற்றப்பட்டன. சகவாழ்வும் பன்மைத்துவமும் எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற இக்கலைவிழாவில் ஜாமிஆ நளீமிய்யா, பாதிஹ் நிறுவனம், திஹாரிய அங்கவீனர் நிலையம், தன்வீர் எகடமி மற்றும் உம்முல் குரா குர்ஆன் மத்ரஸா மாணவ மாணவிகள் கலைநிகழ்ச்சிகளில் பங்குகொண்டிருந்தனர். அஷ்ஷெய்க் முனீர் முளப்பர் சிங்களத்தில் சிறப்புரையாற்றினார். தர்பிய்யா இஸ்லாமிய்யா நிறுவனத்தின் தலைவர் அஷ்ஷெய்க் மிஹ்ழார் எம். ரஷீத் (நளீமி) இன் தலைமையில் நிகழ்வு நெறிப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



குவைத் நாட்டின் தனவந்தர் தாரி அல் ஆதில் இப்ராஹிம் அல்ஜனாஹி அவர்களின் நிதி உதவியினால் நிர்மாணிக்கப்பட்ட கஹட்டோவிட்டா அல் பத்ரியா மகா வித்தியாலத்தின் புதிய இரு மாடிக்கட்டிடம் இலங்கைக்கான குவைத் நாட்டுத் தூதுவர் கலாப் பூதைர் தனவந்தர் தாரி ஆகியோரினால் திறந்து வைக்கப்பட்டது. பாடசாலை அதிபர் காதர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், முன்னாள் ஜனாதிபதியும் தேசிய நல்லிணக்க குழுவின் தலைவியுமான சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி, மக்கள் விடுதலை முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், அஜித் மானப்பெரும எம்.பி, இஷாக் ரஹ்மான் எம்.பி, மாகாண சபை உறுப்பினர் ஷாபி ரஹீம், கம்பஹா கல்வி [illegible] கலந்து சிறப்பித்தனர். (பயாஸா பாஸில் - கஹட்டோவிட)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலமைப்பு

## சில அடிப்படைகள்

• முமீர்




இலங்கையின் அரசியலமைப்பு நகல் வரைவு முன்வைக்கப்படவுள்ளது. அது பற்றிய வாதப் பிரதிவாதங்கள் எழுந்துள்ளன. நகல் அரசிலலமைப்பைப் புரிந்துகொள்ள முன்னர் விளங்கி வைத்திருக்க வேண்டிய அரசியலமைப்பு பற்றிய சில அடிப்படைகளும் தற்போதைய அரசியலமைப்பின் கோளாறுகளும் இங்கு விவரிக்கப்படுகின்றன. சட்டத்துறையில் உள்ள சொற்களைத் தவிர்த்து அனைவருக்கும் விளங்கும் பொது மொழியில் கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

12 ஆம் நூற்றாண்டு வரை இருந்த ஐரோப்பிய மன்னர்கள் 'சர்வ வல்லமை' பொருந்தியவர்களாக இருந்தார்கள். அவர்கள் எந்த சட்டத்துக்கும் கட்டுப்பட்டவர்களாக இருக்கவில்லை. சிலுவை யுத்தங்களின்போது கண்ட நாகரிகமடைந்த உலகு ஐரோப்பியர்களை நல்லாட்சிக்காக போராடத் தூண்டியது.

1215 இல் ஆங்கிலேய மன்னன் ஜோன் 'மக்னா கார்ட்டா'வில் கையொப்பமிட நிர்ப்பந்திக்கப்பட்டான். ஹேபியஸ் கோபஸ் (Habeas Corpus) என்ற (இன்று வரை நடைமுறையில் உள்ள) சட்டத்துக்கு மன்னன் கட்டுப்பட வேண்டிய தேவை ஏற்பட்டது. பின்னர் படிப்படியாக நடைமுறைக்கு வந்த சீர்திருத்தங்கள் ஊடாக ஆட்சியாளனின் எல்லையற்ற அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டது. ஆக, ஜனநாயக சீர்திருத்தங்களின் இறுதி இலக்கே ஆட்சியாளனின் அதிகாரத்தை மட்டுப்படுத்தி நல்லாட்சியை வழங்குவது ஆகும்.

நல்லாட்சியை உறுதிப்படுத்துவதற்காக ஆட்சியின் மூன்று கூறுகளும் ஒரே அதிகார மையத்தில் குவிவதைத் தடுப்பது ஒரு அடிப்படையாகக் கொள்ளப்படுகின்றது. அந்த மூன்று கூறுகளும்

1. நிறைவேற்று அதிகாரம்
2. சட்டவாக்கம்
3. நீதி

என்பனவாகும். இந்த மூன்றும், ஒன்று மற்றொன்றின் மீது அதிகாரம் செலுத்த முடியாதவாறு இருத்தல் வேண்டும். இது 'வலு வேறாக்கம்' எனப்படும். வலு வேறாக்கம் அதிகரிக்கும்போது ஜனநாயகத் தன்மை அதிகரிக்கும்.

### நிறைவேற்று அதிகாரம்

நாட்டை நேரடியாக நிர்வகிப்பதை இது குறிக்கின்றது. அமைச்சரவையிடமும் அதன் தலைவரிடமும் இப்பொறுப்பு ஒப்படைக்கப்படும்.

### சட்டவாக்கம்

நாட்டை நிர்வகிப்பதற்குத் தேவையான சட்டங்கள், கொள்கைகளை வகுத்தலையும், அனைத்து விதமான நிதிக் கையாளுகைகள் பற்றி முடிவெடுத்தலையும் இது குறிக்கின்றது. இப்பொறுப்பு பாராளுமன்றத்திடம் ஒப்படைக்கப்படும்.

### நீதி

சட்டரீதியான பிணக்குகளுக்கு தீர்வு வழங்குவதையும் சட்டம் மீறப்படும்போது தண்டனை விதிப்பதையும் இது குறிக்கும். இப்பொறுப்பு நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்படும்.

நிறைவேற்று அதிகாரத்தையும் சட்டவாக்கத்தையும் சமநிலையில் வைத்திருப்பதற்கு மூன்று வேறுபட்ட ஆட்சி முறைகள் நடைமுறையில் உள்ளன.

1. பாராளுமன்ற ஆட்சி முறை
2. ஜனாதிபதி ஆட்சி முறை
3. கலப்பு ஆட்சி முறை

### பாராளுமன்ற ஆட்சி முறை

பாராளுமன்றம் ஒன்றுகூடி தமக்குள் ஒருவரை (பிரதமர்) தெரிவு செய்வார்கள். அவர், நிறைவேற்று அதிகாரத்தின் (அதாவது அமைச்சரவையின்) தலைவராக இருப்பார். பாராளுமன்றத்தில் இருந்து ஏனைய அமைச்சர்கள் நியமிக்கப்படுவார்கள். பாராளுமன்றக் கூட்டங்களுக்கு முழு அமைச்சரவையும் கலந்துகொள்ளும். பாராளுமன்றம் இவர்களது ஆட்சியை கேள்விகேட்கும். இவ்வாட்சிமுறை பிரித்தானியா, இந்தியா போன்ற நாடுகளில் நடைமுறையில் உள்ளது.

### ஜனாதிபதி ஆட்சி முறை

பாராளுமன்றத்திற்கு வெளியிலுள்ள ஒருவரை மக்கள் தெரிவுசெய்து (ஜனாதிபதி) நிறைவேற்று அதிகாரத்தின் தலைவராக நியமிப்பார்கள். அவர், பாராளுமன்றத்திற்கு வெளியில் உள்ள சிலரை அமைச்சர்களாக நியமிப்பார். தேவைப்படும்போது பாராளுமன்றம் அமைச்சர்களை பாராளுமன்றத்திற்கு அழைத்து விசாரிக்கும். இவ்வாட்சி முறை அமெரிக்காவில் நடைமுறையில் உள்ளது.

### கலப்பு ஆட்சி முறை

பாராளுமன்றத்திற்கு வெளியிலுள்ள ஒருவரை மக்கள் தெரிவுசெய்து (ஜனாதிபதி) நிறைவேற்று அதிகாரத்தின் தலைவராக நியமிப்பார்கள். அவர், பாராளுமன்றத்தில் உள்ள சிலரை அமைச்சர்களாக நியமிப்பார். பாராளுமன்றக் கூட்டங்களுக்கு ஜனாதிபதி தவிர்ந்த அமைச்சரவை கலந்துகொள்ளும். பாராளுமன்றம் இவர்களது ஆட்சியை கேள்வி கேட்கும். தேவைப்படும்போது பாராளுமன்றம் ஜனாதிபதியை பாராளுமன்றத்திற்கு அழைத்து விசாரிக்கும்.

இவ்வாட்சி முறை இலங்கையில் நடைமுறையில் உள்ளது. இலங்கையின் தற்போதைய யாப்பில் (1978 ஆம் ஆண்டு குடியரசு யாப்பு) வலுச்சமநிலை பேணப்படவில்லை. கடந்த 39 வருடங்களாக இதன் பின் விளைவுகளையே அனுபவித்து வருகிறோம்.

### தற்போதைய இலங்கை யாப்பின் கோளாறுகள்

#### நிறைவேற்று அதிகாரம்

1. ஜனாதிபதியை பாராளுமன்றத்திற்கு அழைத்து கேள்வி கேட்கும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு இல்லை.
2. பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது. (19 ஆம் திருத்தத்தின் மூலம் இவ்வதிகாரத்தில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன)
3. அமைச்சர்களின் எண்ணிக்கை வரையறுக்கப்படவில்லை. 225 பாராளுமன்ற உறுப்பினர்களுள் 113 பேருக்கு அமைச்சர் பதவி வழங்கப்படால் நேரடியாக பாராளுமன்றத்தை (அதாவது சட்டவாக்க நிறுவனத்தை) மிகைக்கும் அதிகாரம் நிறைவேற்று அதிகாரத்தின் கையில் கிடைத்துவிடும்.
4. ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தொடர வேண்டுமெனில் பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மையுடன் நம்பிக்கையில்லாப் பிரேரணை அங்கீகரிக்கப்பட வேண்டும். (பாராளுமன்றம் ஜனாதிபதியால் கட்டுப்படுத்தப்படும் சூழலில் இது சாத்தியமற்றது.)
5. மேல் நீதிமன்றங்களின் (உயர் நீதிமன்றங்கள், மேன்முறையீட்டு நீதிமன்றம், உச்ச நீதிமன்றம்) நீதிபதிகளை ஜனாதிபதியே தன் விருப்பப்படி நியமிப்பார்.
6. நிறைவேற்று அதிகாரத்தின் சட்ட ஆலோசகராகவும் (Legal Adviser of the Executive Branch) அரசாங்கத்தின் பிரதம வழக்குத் தொடுனராகவும் (Chief Prosecutor) சட்டமா அதிபர் (Attorney General) தொழிற்படுவார். அமைச்சரவை தவறிழைத்தால் அவர் வழக்குத் தொடரும் கடமை அவர் மீது சுமத்தப்பட்டுள்ள அதேநேரம், வழக்கில் அமைச்சரவைக்கு சட்ட உதவி வழங்கும் பணியும் அவர் மீதே சுமத்தப்பட்டுள்ளது. எனவே குற்றமிழைத்த அமைச்சர்கள் மீது அவர் வழக்குத் தாக்கல் செய்ய மாட்டார்.

இப்படியான கோளாறுகள் நிறைவேற்று அதிகாரத்திற்கு அனாவசியமான அதிகாரங்களை வழங்கும். ஏனைய இரண்டு கூறுகளையும் நிறைவேற்று அதிகாரம் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும். மொத்த முழு யாப்பும் ஜனநாயகம் அற்றதாக மாறும்.

#### சட்டவாக்கம்

1. அபிவிருத்திப் பணிகளுக்காக (நிறைவேற்று அதிகாரத்திற்கு உரிய பணி) பாராளுமன்ற உறுப்பினர்கள் தமக்குத் தாமே நிதி ஒதுக்கிக் கொள்கின்றனர்.

i) நிதிபற்றிய முடிவை எடுப்பவர்கள் கையில் நிதியைக் கொடுப்பது நேர்மையற்ற செயற்பாடுகளைத் தூண்டும்.

ii) அடுத்து வரும் தேர்தல்களில் மக்கள் வாக்களிக்கும்போது பாராளுமன்ற உறுப்பினர்களின் கொள்கைகளுக்காக வாக்களிக்காமல், அவர்களது அபிவிருத்திப் பணிகளுக்காக வாக்களிப்பார்கள். இது பிழையான கொள்கைகளை உடைய மனிதர்களை பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்பட வழிவகுக்கும்.

2. முறையற்ற நடத்தைகளில் ஈடுபடும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவியை ரத்து செய்வதற்கான முறைமைகள் இல்லை.

#### நீதி

முறையற்ற நடத்தைகளில் ஈடுபடும் மேல் நீதிமன்ற நீதிபதிகளின் பதவியை ரத்து செய்வதற்கான முறைமைகள் இல்லை. (ஷிராணி பண்டாரநாயக்கவின் பதவி ரத்து செய்யப்பட்ட முறைமை பிழையானது)

இந்தக் கோளாறுகளைப் புரிந்துகொள்ளாதவர்களே, எல்லாத் தவறுகளையும் ஜனாதிபதி முறைமையின் தவறுகளாகவும் விகிதாசாரத் தேர்தல் முறையின் தவறுகளாகவும் சுருக்கிப் பார்க்கின்றார்கள்.

---

# 382 ஆவது இதழில் வீறுநடைபோடும் மீள்பார்வை




இலங்கை முஸ்லிம்களின் சமகாலப் பிரச்சினைகள் பற்றிப் பேச அவர்களுக்கென்று ஒரு பத்திரிகை இல்லாமை மிக நீண்டகாலக் குறைபாடாகவே இருந்து வந்துள்ளது. முஸ்லிம்களின் தனித்த குரலாக நின்று அவார்களது அரசியல், பொருளாதார, கல்வி, சமூகவியல், தேவைகளைப் பக்கச் சார்பின்றியும் நேர்மையுடனும் இதய சுத்தியுடனும் பேச எவருமே முன்வரவில்லை.

எந்தவொரு பத்திரிகையும் தனது சமூகத்தை முற்படுத்திப் பேசுவது தவிர்க்க முடியாதது. அந்த வகையில் முஸ்லிம்கள் அடுத்த பத்திரிகைகளை நம்பியிருப்பதில் அர்த்தமில்லை. 'மீள்பார்வை'க்கு இத்தேவையை நிறைவு செய்ய வேண்டிய பாரிய பொறுப்பு உள்ளது.

முஸ்லிம் சமூகத்தின் சிந்தனையை அவர்களது கலாசாரத்தை, அவர்களது வாழ்வுப் போக்கை இந்த நாட்டின் ஏனைய மக்கள் மிகச் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். பரஸ்பரப் புரிந்துணர்வின்மை சமூக மோதல்களுக்கு ஒரு முக்கிய காரணியாய் அமைவதால் அப்புரிந்துணர்வினை வளர்ப்பதில் இப்பத்திரிகை இயன்றளவு முயற்சி செய்யும்.

முஸ்லிம் சமூகத்திற்கு மத்தியில் அநேக விடயங்களில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. அவர்களிடையே பல்வேறு இயக்கங்களும் கட்சிகளும் அமைப்புக்களும் காணப்படுகின்றன. இவற்றிடையேயுள்ள கருத்து வேறுபாடுகள் அபாயமானவை எனக் கருதுவதை விட, அவற்றின் மூலம் பயன்பெற முயல்வதே நடைமுறைச் சாத்தியமான தொழிற்பாடு.

அத்தோடு அனைவரையும் சில பொது உடன்பாடுகளுக்கு வரவிடுவது பயன் தரும் வேலைத் திட்டமாகும். அதற்கானதொரு களத்தை அமைத்துக் கொடுப்பது 'மீள்பார்வை'யின் கடமையாகும். முஸ்லிம் சமூகத்தின் எப்பிரிவினரும் எக்கருத்து சார்ந்தோரும் முழுச் சுதந்திரத்தோடு பேச 'மீள்பார்வை' அனுமதிக்கும்.

முஸ்லிம் என்பவன் சர்வதேச சமூகத்தின் அங்கத்தவன். சர்வதேச முஸ்லிம்களது பிரச்சினைகள் அவனது சொந்தப் பிரச்சினைகள். கஃபத்துல்லாஹ்வையும் மஸ்ஜிதுன் நபவியையும், பைத்துல் முகத்தஸையும் மறந்து அவன் வாழ முடியாது. இந்த வகையில் உலகளாவிய முஸ்லிம் உம்மாவின் செய்திகளும் 'மீள்பார்வை'யில் முக்கிய இடத்தைப் பெறும்.

முஸ்லிம்கள் ஒரு மூடிய, இறுக்கமான சமூக அமைப்பன்று. சக மனிதர்களோடு நட்புடனும் நீதியுடனும் பழகுவது அவர்களது மார்க்கக் கடமை. இந்த வகையில் தனது நாட்டின் சக சிங்கள, தமிழ் மக்களின் பிரச்சினைகளிலும் முழு நாட்டையுமே பாதிக்கும் தேசியப் பிரச்சினைகளின்போதும் அவன் கைகட்டி வாய் மூடியிருப்பது பாரிய குற்றமாகும். இந்த அடிப்படையில் நீதிக்கும் நியாயத்துக்குமாகப் பேசுவதும், அநீதிக்கெதிராகக் குரலெழுப்புவதும் அனைத்துப் பத்திரிகைகளினதும் தார்மீகக் கடமையாகும். இந்த வகையில் 'மீள்பார்வை' இலங்கையின் மாற்றுப் பத்திரிகை இயக்கத்தோடு ஒத்துச் செல்லும்.

எமக்கென்று ஓர் அரசியல், கல்வி, வரலாறு இந்த நாட்டிலுள்ளது. வரலாறு நெடுகிலும் நாம் எந்தச் சிந்தனையின், கொள்கையின் அடிப்படையில் வந்திருக்கிறோம்? மத்ரஸா ஒழுங்குகளும் அரசாங்கப் பாடசாலை ஒழுங்குகளும் எமது சமூகத்தில் வளர்ந்து வந்துள்ளன. நாம் நடந்து வந்த இந்த வரலாற்றுப் பாதையை மீளாய்வு செய்ய வேண்டிய தேவை எமக்குள்ளது.

ஒரு மாற்றுப் பத்திரிகை என்ற வகையில், மீள்பார்வை கடந்த இரு தசாப்த காலமாக இலங்கை முஸ்லிம்களது சமூக, ஆன்மீக, பொருளாதார, அரசியல், கலாச்சார களத்தில் கணிப்புக்குரிய ஒரு குரலாக இருந்து வந்திருக்கிறது.

மீள்பார்வையைத் தொடங்கிய காலங்களில், இலங்கை முஸ்லிம்களது அனைத்து அபிலாஷைகளையும் வெளிக்கொணர்வதற்கு காலாய் அமையும் ஒரு மாற்றுப் பத்திரிகைக்கான வெற்றிடம் இருந்தது. இருக்கின்ற பத்திரிகைகள் ஒன்றில் சமூக, பொருளாதார, அரசியல் விடயங்களில் அக்கறை கொண்டிருந்தன அல்லது சமய, ஆன்மீக விடயங்களில் அக்கறையைக் குவித்திருந்தன. இந்த அனைத்து அம்சங்களையும் ஒரே தளத்தில் இணைத்து நோக்க வேண்டிய அவசியம் நன்கு உணரப்பட்டது. அதன் வெளிப்பாடே மீள்பார்வையாய் வடிவம் கொண்டது.

இந்த வகையில் ஒரு பத்திரிகை என்பதற்கு அப்பாலும், மீள்பார்வையின் தளங்களும் பார்வையும் விரிவுகொள்கின்றன என்பதை தேர்ந்த வாசகர்கள் நன்கு உணர்ந்திருப்பர். மீள்பார்வை பல பத்திரிகைகள் தோன்றுவதற்கு உந்துதலாக அமைந்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான ஒரு மாற்றுப் பத்திரிகை இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் ஒருபோதும் சாத்தியமில்லை என்ற குரல்கள் ஆரம்ப காலங்களில் எழுந்தன. மீள்பார்வையின் மொழிநடை, உள்ளடக்கம், விற்பனைச் சாத்தியம் பற்றிய கடுமையான வாதப் பிரதிவாதங்கள் நிகழ்ந்தன. ஆனால் இன்று நிலைமைகள் பாரியளவு மாறியுள்ளன. அன்று எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுகள் பல இன்று முக்கியத்தும் இழந்துள்ளன. மக்களும் நமது வாசகர்களும் நாமும் இணைந்து படிமுறையான வளர்ச்சியை நோக்கி நகர்ந்திருப்பதை இது நிரூபிக்கிறது.

நமது சமூக, ஆன்மீக, அரசியல், கலாச்சார நிகழ்களங்களில் இன்று ஏற்பட்டு வரும் மாற்றங்கள் பலவற்றை முன்னுணர்ந்து, அவை குறித்து நமது மக்களது கவனத்தை நீண்ட காலமாக மீள்பார்வை ஈர்த்தே வந்திருக்கிறது. இந்த வகையில் நமது பார்வை கணிப்புக்குரிய ஒன்றாக இருந்து வந்திருப்பது எமக்கு மனநிறைவைத் தருகிறது.

தொடர்ச்சியாக 382 இதழ்களை வெளியிடுவது என்பது, நமது சமூக அரங்கில் மிக முக்கியமான ஓர் அடைவாகும். எனினும் இது மட்டும் போதாது. இன்னும் செய்வதற்கு எவ்வளவோ பணிகள் மீதமுள்ளன. நம் முன்னுள்ள பொறுப்புகளால் நமது தோள்கள் சுமை நிறைந்தனவாய் உள்ளன.

ஒரு அலுவலகமோ ஒரு மேசையோ கூட இல்லாத நிலையில்தான் இதைத் தொடங்கினோம். முதலாவது ஆசிரியர் பீட அமர்வு ஒரு பாயை விரித்துக் கொண்டுதான் நடந்தது. சொந்தமாக ஒரு கொம்பியூட்டர் இல்லாமல் அலைந்த காலங்கள், அச்சுக் கோர்ப்பதற்கும் வடிவமைப்பதற்கும் அங்குமிங்குமாய் ஆலாய்ப் பறந்த நாட்கள், அச்சக முதலாளிமாரோடு ஏற்பட்ட முரண்பாடுகள், முழு வேலையும் முடிந்த பின் தொழில்நுட்பக் கோளாறால் பத்திரிகை விடயங்கள் முற்றாக அழிந்து போய், மீண்டும் ஆரம்பத்திலிருந்து வேலையைத் தொடங்க வேண்டி வந்தமை... என்று எத்தனை ஏமாற்றங்கள்... எத்தனை சகப்பான அனுபவங்கள்...?

இவை எல்லாவற்றுக்கும் இன்றைய வளர்ச்சியொன்றே பதிலாய் அமைகிறது. அது ஒன்று தரும் மகிழ்ச்சியும் திருப்தியும் போதும்.

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## EDITORIAL

49, St. Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258 077 222 7569
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

# ஊடகம் 21ம் நூற்றாண்டின் பாரிய சக்தி

ஊடகம் ஒரு பாரிய சக்தி. அது இருமுனைகள் கொண்ட ஒரு கூர்வாள். ஆவதும் அழிவதும் அதனால்தான் நடைபெறுகிறது. ஊடகம் ஒரு பலமிக்க சக்தி என்பதை முன்னாள் மலேசியப் பிரதமர் மஹாதிர் முஹம்மத் அவர்கள்: ''யாரிடம் கடல் வழிப் பாதை ஆதிக்கம் இருந்ததோ அவர்கள்தான் 19 ஆம் நூற்றாண்டின் சக்தியாக விளங்கினார்கள். விமானப் படை பலம் யார் வசமிருந்ததோ அவர்கள் தான் 20 ஆம் நூற்றாண்டின் சக்தியாகத் திகழ்ந்தார்கள். 21 ஆம் நூற்றாண்டில் யாரிடம் ஊடகம் இருக்கின்றதோ அவர்கள் தான் வலிமையுடன் போராடும் சக்தி கொண்டவர்களாக விளங்குவர்'' எனக் கூறினார்கள்.

உலக மாந்தர்களுக்காக இறங்கிய இறுதித் தூதின் முதல் வசனமே 'வாசிப்பீராக!' என்றும் தூதின் ஆரம்ப கால வசனங்கள் ஊடகத் துறையின் குறியீடான எழுது கோலைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளமை ஊடகத் துறைக்கு இஸ்லாம் வழங்கும் கனதியை மதிப்பிட போதுமானதாகும். ஆனால் துரதிஷ்டவசமாக அது இன்று எமது கைகளில் இல்லை.

நபிகளார் அகிலத்துக்கு முன்வைத்த தூது மனித குலத்திற்கோர் அருட்கொடை. அது மனித நேயத்தின் முழு வடிவம். மனித நாகரிகத்திற்கான ஊற்றுக் கண். முழுக்க முழுக்க நலனை மாத்திரம் அடிப்படையாகக் கொண்ட இஸ்லாத்தின் தூது பாலைவனத்தில் துளிர் விட்டபோது அதன் ஆழ அகலம் தெரியாமல் அந்த சமூகம் எதிர்த்தது. அது கொழுந்து விட்டெரியும் தீயாய் பரவ ஆரம்பித்த போது அதனை எதிர்த்துப் போராட முடியாது என்று கருதிய போது சமரசப் பேச்சுவார்த்தைக்கு முன்வந்தார்கள்.

ஆனால் எதிர்ப்பிரசாரம் பகிரங்கமாகவே தொடர்ந்தது. இருந்தும் கூட சத்தியத்தின் தூது 23 வருட காலத்தில் அனைத்துக் கொள்கைகளையும், சிந்தனைகளையும் மிகைத்து வெற்றிவாகை சூடியது.

நீதி, நேர்மை, சமத்துவம், சமாதானம், சுதந்திரம், மனித நேயம், மக்கள் நலன் என அலகிலத்துக்கே அருட்கொடையாய் வந்த இஸ்லாத்தின் தூதை சுயநலம் மற்றும் அறியாமை காரணமாக சிலர் எதிர்த்தே வந்தனர். எனவே கொழுந்து விட்டெரியும் சத்தியத்திற்கு எதிராக கடுமையான எதிர்ப் பிரச்சாரம் தொடர்ந்தது.

சத்தியத்திற்கு என்றும் எதிர்பிரச்சாரம் தொடர்ந்து இருக்கும். அது நீண்டதொரு உழைப்பை வேண்டி நிற்கும் போராட்டமாகும். எனவே ஊடகப் பயங்கரவாதத்திற்கு ஒரு குறியீடாக அபூ லஹபும் அவனது மனைவியும் அல்குர்ஆன் அடையாளப்படுத்துகிறது. சத்தியத்தின் பிரச்சாரப் பாதையில் எதிர்ப்பு ஊடகங்களின் அபாயம் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதே படைத்த இரட்சகனின் வழிகாட்டலாகும்.

எனவே உறுதியோடும், தூய்மையோடும், ஊடகப் பணியில் காத்திரமாக உழைக்கும்போது வெற்றி நிச்சயம் என்பதை குர்ஆனிய சிந்தனை போதிக்கிறது. இது ஊடகத்தின் முக்கியத்துவத்தை இஸ்லாம் சுட்டிக்காட்டும் ஒழுங்காகும். அவ்வாறே ஊடகப் பணியை காத்திரமான ஒரு சேவையாகவே இஸ்லாம் நோக்குகிறது.

இந்தப் பின்னணியில்தான் ஊடகங்கள் வாயிலான உழைப்பே இன்றைய காலத்தின் முதன்மை தேவையாகும் என இஸ்லாமிய அறிஞர்கள் அழுத்தமாக கூறி வருகின்றனர்.

உலக மக்கள் யாவருக்கும் மனித நேயத் தூதை எத்திவைப்பதுடன் அவர்களை சிந்தனா ரீதியான, கலாச்சார ரீதியான ஆக்கிரமிப்பிலிருந்து காப்பாற்றி சுதந்திர மனிதனாக வாழவைப்பதே இறைத் தூதின் இலக்காகும். உயர்ந்த இந்தத் தூதின் பக்கம் அழைக்கும் சமூகமாக இருக்கும் முஸ்லிம்களுக்கு ஊடகம் உயிர் நாடியாகும்.

இன்று உலகளவில் நாம் காணும் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம், தீவிரவாதத்திற்கு எதிரான யுத்தம் ஊடகத்தினுடாகவே மேற்கொள்ளப்படுகின்றன. ஐஎஸ், அல்காயிதா போன்ற பல பயங்கரவாதக் குழுக்களை உருவாக்கி, பொய்ப் பிரசாரங்கள் மூலம் இஸ்லாம் பற்றிய பீதியை ஏற்படுத்துவதும் ஊடகத்தினூடாகவே நடைபெறுகின்றன. இதனை எதிர்கொள்ளும் ஊடகச் சக்தி முஸ்லிம் சமூகத்திடம் வறுமையாகவே உள்ளது.

இலங்கையிலும் இத்தகைய முஸ்லிம் ஊடக வறுமையை நாம் ஆண்டாண்டு காலமாகக் கண்டு வருகின்றோம். முஸ்லிம் சமூகம் பல்வேறு சவால்களை எதிர்கொண்டிருந்த ஒரு காலப்பகுதியில் முஸ்லிம் சமூகத்தின் உணர்வுகளையும் எதிர்பார்ப்புகளையும் பிரச்சினைகளையும் வெளிக்கொணர ஓர் ஊடகமின்றி சமூகமே வாயடைத்து மௌனமாய் கிடந்த ஓர் சூழலில் 'தளிர்' ஆக துளிர்த்த 'மீள்பார்வை' மாதாந்தப் பத்திரிகையாகி, இன்று மாதம் இரு முறை வெளிவரும் உங்கள் மீள்பார்வை இலங்கையின் இஸ்லாமிய இதழியல் வரலாற்றில் தனக்கென ஒரு தனி இடத்தைப் பெற்றுள்ளது.

இரண்டு தசாப்தத்தை கடந்து பயணிக்கும் மீள்பார்வை ஊடகம் வருடா வருடம் நவம்பர் மாதத்தில் மீள்பார்வை வாரத்தை அனுஷ்டிப்பதன் ஊடாக நிலையான ஊடகத்தை நோக்கிய பிரக்ஞையை மக்கள் மத்தியில் ஊட்டிவருகிறது.

இப்பத்திரிக்கையானது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

வாசகர் உரிமை

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

தொலைபேசி 011-5353635
பெக்ஸ் 011-5335500

# தொகுதி நிர்ணயமும் முஸ்லிம் சமூகமும்

• முஹம்மத் பாதுஷா

இப்போது, நமது நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற தொகுதி நிர்ணயத்துக்கும், சிறுபான்மை மக்கள் அதிலும் குறிப்பாக முஸ்லிம்கள், சமூக, அரசியல், பொருளாதார விடயங்களில் முக்கியத்துவத்தை கொடுக்க வேண்டியிருக்கின்றது. மாகாண சபைத் தேர்தல்கள் திருத்தச் சட்ட மூலத்தை, இவ்வருடம் செப்டெம்பர் 20 ஆம் திகதி, அரசாங்கம் நிறைவேற்றியது. அரசியலமைப்பில் 20 ஆவது திருத்தத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியாமல் போன வெஞ்சினத்தில், அரசாங்கம் இச்சட்டத்தை அவசர அவசரமாக நிறைவேற்றியது.

இந்த அடிப்படையில், கலப்பு முறை என்று சொல்லப்படும் 'விகிதாசாரத்துக்குள் தொகுதி' அடிப்படையிலான தேர்தல் முறைமையின் கீழ், மாகாண சபைத் தேர்தலும் நடைபெறவிருப்பதால், மாகாணங்களின் தொகுதிகளை வரையறை செய்ய வேண்டிய, சட்டத் தேவைப்பாடு எழுந்திருக்கின்றது.



அந்தவகையில், ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட எல்லை மீள்நிர்ணயக் குழுவுக்கு எழுத்து மூலம் யோசனைகள், கருத்துரைகளை முன்வைப்பதற்கான காலம், இம்மாதம் இரண்டாம் திகதியுடன் நிறைவடைந்துள்ள நிலையில், இப்போது வாய்மொழி மூலம் அல்லது எல்லை மீள்நிர்ணயக் குழுவின் முன் நேரடியாக ஆஜராகி, கருத்துகளைச் சமர்ப்பிக்கும் பணிகள் பிராந்திய ரீதியாக நடைபெற்று வருகின்றன. இக்குழுவின் அறிக்கை கிடைக்கப் பெற்றதும், தமிழ், சிங்களப் புதுவருடம் வருவதற்கிடையில் அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தலை ஒரே தினத்தில் நடாத்துவதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

அரசாங்கத்தின் உயர் பதவிகளுக்கு உரித்தானவர்கள் பலர், எதிர்கொண்டுள்ள விசாரணைசார் நெருக்கடிகள், ஆட்சிக் கட்டமைப்பில் பெரிய பிரளயங்களை நிகழ்த்தவில்லை என்றால், இன்னும் சில மாதங்களுக்குள் மாகாண சபைத் தேர்தல் நடைபெறுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே, புதிய தேர்தல் முறைமையின் கீழ், வாக்கெடுப்பு இடம்பெறவிருக்கின்ற ஒரு சூழலில், தொகுதி நிர்ணய விடயத்தில் முஸ்லிம்கள் அதீத அக்கறை செலுத்த வேண்டியிருக்கின்றது. முன்னதாக, உள்ளூராட்சி சபைகளின் தேர்தலை நடாத்துவதற்கு முன்னோடியாக, ஒவ்வொரு உள்ளூர் அதிகார சபைகளின் கீழும் இருக்கின்ற வட்டாரங்களின் எல்லைகள், கடந்த சில மாதங்களுக்கு முன்னர், மீள்வரையறை செய்யப்பட்டன.

ஆனால், முஸ்லிம் அரசியல் கட்சிகளோ, மக்களோ இதில் பெரிதாக அக்கறை காட்டவில்லை. அதேபோன்று, உள்ளூர் அதிகார சபைகள் திருத்தச் சட்ட மூலம், நாடாளுமன்றத்துக்கு கொண்டு வரப்பட்ட வேளையிலும் அரசியல் தலைவர்கள் எனத் தம்பட்டம் அடித்துக் கொள்வோர், அதிலுள்ள முஸ்லிம்களுக்கு பாதகமாக விடயங்களை நீக்குவதில் ஒற்றைக் காலில் உறுதியாக நிற்காமல், 'நான் முந்தியா நீ முந்தியா' எனப் போட்டி போட்டுக் கொண்டு அச்சட்டத்துக்கு ஆதரவளித்து, பெருந் தேசியத்துக்குத் தமது விசுவாசத்தைக் காட்டினார்கள்.

இலங்கையில் முதன் முதலாக அரசமைப்பின் 76(2) பிரிவுக்கு அமைவாக, 1947 ஆம் ஆண்டு தேர்தல் தொகுதிகள் நிர்ணயம் செய்யப்பட்டன. அப்போது, நாட்டின் சனத்தொகை சுமார் 65 இலட்சமாக இருந்தது. இதன்படி, 89 தேர்தல் தொகுதிகள் உருவாக்கப்பட்டதுடன், இதில் 25 தொகுதிகள் 1,000 சதுர மைல் பரப்பையும் 64 தொகுதிகள் 75,000 மக்களுக்கு ஓர் உறுப்பினர் என்ற வகையிலும் நிர்ணயிக்கப்பட்டன. பல உறுப்பினர் தெரிவுத் தொகுதிகளாக கொழும்பு மத்தி, கடுகண்ணாவை, அம்பலாங்கொட, பலப்பிட்டிய மற்றும் பலாங்கொடை தொகுதிகள் உள்ளிட்டவை காணப்பட்டன.

அதன் பின்னர், 1959 ஆம் ஆண்டின் அரசமைப்பில் திருத்தம் கொண்டுவரப்பட்டு, இன்னுமொரு எல்லை மீள்நிர்ணயம் மேற்கொள்ளப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. அப்போது, இலங்கையில் மாகாண சபைகள் முறை அமுலில் இல்லை என்பதால், மாகாண சபைத் தேர்தலில் தொகுதிவாரியான பிரதிநிதித்துவம் தாக்கம் செலுத்தவில்லை. எவ்வாறிருப்பினும் இனக்குழுமங்களின் அடிப்படையில், ஓரளவுக்குப் பிரதிநிதித்துவங்களை உறுதிப்படுத்திக் கொள்ள, இந்த இரண்டாவது தொகுதி நிர்ணயம் வழிசெய்தது எனலாம்.

இதில், பல உறுப்பினர் தெரிவுத் தொகுதியாக, கொழும்பு மத்தி, கொழும்பு தெற்கு, அக்மீமன, மூதூர், பொத்துவில் மற்றும் மட்டக்களப்பு உள்ளிட்ட தொகுதிகள் வரையறை செய்யப்பட்டன. சுமார் 10 இலட்சம் மக்கள் வாக்குரிமை அற்றவர்களாக இருந்த காலப்பகுதியில், மூன்றாவது எல்லை நிர்ணயம் 1976 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. 1971 ஆம் ஆண்டிருந்த 13 மில்லியனுக்கு குறைவான சனத்தொகை மதிப்பீட்டின் அடிப்படையில் 160 தொகுதிகள் உருவாக்கப்பட்டன. இத்தேர்தல் தொகுதிகளில் இருந்து, 168 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

பல கண்துடைப்பான நகர்வுகளை வரலாற்றில் மேற்கொண்ட ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் அறுதிப் பெரும்பான்மை அரசாங்கம், அடுத்த எல்லை நிர்ணயத்தை, சூட்சுமமான முறையில் நிகழ்த்திக் காட்டியது என்றே சொல்ல வேண்டியிருக்கின்றது. ஏனெனில், 1976 இல் நிர்ணயிக்கப்பட்ட தொகுதிகள் அவ்வாறே இருக்கத்தக்கதாக, ஒன்பது மாகாணங்களுக்கும் தலா நான்கு உறுப்பினர்கள் என்ற ரீதியில் அதிகரிக்கப்பட்டதுடன் மேலும் 29 தேசியப் பட்டியல் (எம்.பி) ஆசனங்களும் உள்வாங்கப்பட்டு மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 225 ஆக அதிகரிக்கப்பட்டது.

அதன் பின், மாகாண சபை முறைமை அறிமுகமான போதும், விகிதாசாரத் தேர்தல் முறைமை நடைமுறைக்கு வந்ததால், தொகுதிகள் இவ்விடயத்தில் பெரிய செல்வாக்கை செலுத்தவில்லை என்றே கூற வேண்டும். அப்படியாயின், அவ்வாறான முதலாவது தேர்தலாக அடுத்த மாகாண சபைத் தேர்தல் இருக்கும். இலங்கையில், தொகுதிவாரித் தேர்தல் முறைமை அமுலில் இருந்த காலத்திலும், அதற்குப் பின்னரும் தொகுதிகளைப் பிரிக்கின்றபோது, பொதுவாக இனக்குழுமங்களுக்கும் குறிப்பிட்ட பிரதேச மக்களுக்கும் பாரிய அநீதிகள் இழைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த எல்லை நிர்ணயங்களின்போது, கிழக்கு மாகாணத்தில் பிரதேச வாரியாக, ஊர்வாரியாக வரலாற்றுத் தவறுகள் நிகழ்த்தப்பட்டன. நிந்தவூர் தொகுதி இல்லாமலாக்கப்பட்டு, பொத்துவில் தொகுதி உருவாக்கப்பட்டது. இவ்வேளையில், தனது நாடாளுமன்ற உறுப்புரிமைக்கு அதிக சனத்தொகை கொண்ட ஊரான அக்கரைப்பற்று சவாலாகி விடக்கூடாது என்பதற்காக, நிந்தவூரைச் சேர்ந்த எம்.எம். முஸ்தபா எம்.பி, அக்கரைப்பற்று என்ற ஒரு தனி ஊரை, பொத்துவில், சம்மாந்துறை என இரு தொகுதிகளாக ஆக்கியதாக இன்றுவரையும் அவர் மீது பெரும் பழிச்சொல் இருக்கின்றது. இவ்வாறு இன்னும் எத்தனையோ தவறுகள், நாடெங்கும் இடம்பெற்றிருக்கின்றன.

எனவே, இந்த உதாரணங்களின் மூலமும் அனுபவங்களின் மூலமும் கடந்த காலத் தொகுதி நிர்ணயத்தில் ஏற்பட்ட தவறுகளும் அதனால் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட இழப்புகளையும் உணர்ந்து கொள்ள முடியுமாக இருந்தால், இதைச் சரிசெய்வதற்கான ஒரு சந்தர்ப்பமாக இம்முறை மேற்கொள்ளப்படும் தொகுதி மீள்நிர்ணயத்தைப் பயன்படுத்த வேண்டும். ஆனால், சில சிவில் அமைப்புகளும் சில அரசியல்வாதிகளும் எல்லை மீள்நிர்ணயக் குழுவுக்குப் பரிந்துரைகளை முன்வைத்த போதும், பல அரசியல்வாதிகள் வழக்கம்போல, சுரணையற்று இருப்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

கிழக்கு மாகாணம் உட்பட, நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் இப்போது இருக்கின்ற தொகுதிகளில், பாரிய மாறுதல்கள் இன்றி, அதேபோன்றே எல்லையிடப்படுமாக இருந்தால், அத்தொகுதிகளில் புதிய கலப்பு முறையில் தேர்தல் நடைபெறுமாக இருந்தால், முஸ்லிம்களின் மாகாண சபை, நாடாளுமன்றப் பிரதிநிதித்துவங்கள் கணிசமாகக் குறைவடைவதற்கே அதிக வாய்ப்புகள் இருக்கின்றன.

கிழக்கில் கூட முஸ்லிம்கள், மாகாண சபைத் தேர்தலில் ஒருமித்து, ஒரு கட்சியில் போட்டியிட்டாலேயே கணிசமான உறுப்பினர்களை பெற்றுக் கொள்வது சாத்தியமாகும்.

இப்புதிய தேர்தல் முறைமை தொடர்பாக, முஸ்லிம் அரசியல் தலைவர்கள் மார்தட்டிக் கொண்டாலும், நடைமுறைச் சூழலில் 50:50 என்கின்ற விகித சமன்பாடு, முஸ்லிம்களுக்குச் சாதகமானதல்ல என்று அரசியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். விகிதாசாரத் தேர்தல் முறைமையில் கிடைத்த உறுப்பினர்களைக் கூட, முஸ்லிம்கள் உறுதிப்படுத்திக் கொள்ள இயலாத நிலைமைகளே ஏற்படலாம்.

இதேவேளை 50 சதவீத பட்டியலில் இருந்து தெரிவு செய்யப்படுபவரை விட, தொகுதிவாரியாகத் தெரிவு செய்யப்படும் வேட்பாளரே, இனம் கடந்த மக்கள் ஆணையைப் பெற்றிருப்பார் என்ற அடிப்படையில், இந்த 50இற்கு 50 பொருந்தாது எனக் கூறுவோரும் இருக்கின்றனர். எது எப்படியிருந்தாலும், பிரதிநிதித்துவம் குறையப் போகின்றது என்பதில் இரு வேறு அனுமானங்கள் இல்லை.

தொகுதிகளைச் சரியாக வகுப்பதன் ஊடாக, இந்நிலை ஏற்படாமல் தடுக்கலாம் என்பது உண்மையே. ஆனால், கிழக்கில் கூட முஸ்லிம்களின் இன விகிதாசாரத்துக்கு ஏற்ப நிலங்கள் கிடையாது. ஒரு தொகுதிக்குரிய மக்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் நிலத்தையோ ஏனைய வளங்களையோ ஆதாரமாகக் கொண்டு, ஒரு தொகுதியைப் பெறக்கூடிய வாய்ப்பு தமிழ், சிங்கள மக்களுக்கு கிடைக்குமென்றாலும் முஸ்லிம்களுக்கு கிடைக்காது.

ஓர் அணியில் போட்டியிட்டு, அந்த அணியின் வேட்பாளருக்கே தொகுதியில் இருக்கின்ற எல்லா முஸ்லிம்களும் வாக்களித்து, வெற்றியை உறுதிசெய்யப் போவதும் இல்லை என்பதை வைத்துப் பார்க்கின்றபோது, நிலைமைகள் இன்னும் மோசமடையும் என்ற அச்சமே மேலெழுகின்றது. தென்னிலங்கையில் முஸ்லிம்கள் சிதறி வாழ்கின்ற நிலையில் தனி முஸ்லிம் தொகுதிகள் புதிதாக உருவாக்கப்படுவதற்கு சாத்தியங்களே இல்லை. முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட தொகுதிகளையும் ஏனைய சமூகங்களுக்கு மத்தியில் செல்வாக்குடன் வாழும் முஸ்லிம்கள் பிரதேசங்களின் புதிய தொகுதிகளையும் நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்கலாம். இனரீதியாகத் தொகுதிகளை உருவாக்க முடியாத பகுதிகளில், ஏனைய இனங்களுடன் நல்லுறவைப் பேணி, எல்லா இனங்களையும் சமமாக மதிக்கும் எந்த இனத்தைச் சேர்ந்த ஒரு வேட்பாளருக்காவது வாக்களிப்பதே சிறந்தது எனத் தோன்றுகின்றது.

தேர்தல்த் தொகுதிகளை நிர்ணயம் செய்யும் போது, பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுகின்றன. நீண்டகாலம் புரையோடிப்போன காணி, எல்லைப் பிரச்சினைகளும் பிரதேசவாதங்களும் இதில் கடுமையான செல்வாக்கைச் செலுத்தும்.

அத்துடன்,கிராமசேவகர் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு தொகுதிகளை நிர்ணயிப்பது மிகவும் சிக்கலானதும் சாத்தியமற்றதும் என்றும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். (பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓநாய் அழுகிறது?

## அழிக்கப் பிறந்தவர்களும் ஆளப் பிறந்தவர்களும்



றவூப் ஸெய்ன்

ஆடுகள் நனைகிறதென்று ஓநாய் அழுத கதைதான் இன்றைய நமது சமூக சூழலில் நிகழ்ந்து வருகிறது. கல்கிஸ்ஸையில் தங்கியிருந்த ரோஹிங்ய அகதிகளை பயங்கரவாதிகள் என்றும், மியன்மாரில் பௌத்தர்களைக் கொன்றொழிக்கின்றவர்கள் என்றும் கூறிக் கொண்டு அகதிகள் என்றும் பாராமல் அவர்கள் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்தவர்களில் சில பிக்குகளும் உள்ளடங்குவர்.

அச்சத்தில் உறைந்திருந்த அகதிகளை அவமானப்படுத்தி, தாக்குதல் நடத்திய கும்பலை ஞானசாரர் நியாயப்படுத்தவில்லை. அகதிகள் விவகாரத்தில் அப்படி நடந்திருக்கக் கூடாது என்று போட்டார் ஒரு குண்டை. எப்படி இந்தத் திடீர் மாற்றம். உண்மையில் இது மாற்றமல்ல. பிள்ளையைக் கிள்ளி தொட்டிலையும் ஆட்டும் கயமைத் தனம்.

கிந்தொட்டை வன்முறையின் போது களவிஜயம் செய்த ஞானசாரர், அங்கு நடந்த அமைதிக் கூட்டத்தில் பங்கு கொண்டிருந்தார். வழமையான அவரது ஆவேசக் குரல் அங்கு ஒலிக்காத போதும், ''உங்கள் இளைஞர்களை கட்டுப்படுத்தாவிட்டால் எங்கள் இளைஞர்களையும் கட்டுப்படுத்த முடியாது'' என்று கூறியிருந்தார்.

ஞானசாரரின் இந்த பெல்டி எல்லாம் எதற்காக என்பது ஒவ்வொரு சராசரி மனிதனுக்கும் பட்டென்று புரிந்துவிடும். ஆனால் அசாத் சாலிக்கும் சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபாவுக்கும் ஏன் புரியவில்லை என்பதுதான் வியப்பாகவும் வேதனையாகவும் உள்ளது.

ஜம்இய்யதுல் உலமாவின் முப்திகளுக்குக் கூட இது புரியவில்லையா என்பது ஆச்சரியமான கேள்விதான். ஹலால் சான்றிதழை வாபஸ் பெற வைப்பதற்கு ஞானசாரர் கிளப்பிய புரளிகளும் பொய்க் குற்றச்சாட்டுகளும் இனவாதத்தின் மீது எண்ணெய் ஊற்றியதை அவ்வளவு சுலபமாக மறக்க முடியுமா என்ன?

அநகாரிகவின் வாரிசாக வந்துதித்து அளுத்கமையிலும் கிந்தொட்டையிலும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் முஸ்லிம் கடைகளையும் பள்ளிவாயல்களையும் அழித்து நாசப்படுத்திய ஒரு நாசகாரக் கும்பலுக்கு தலைமை வகிக்கும் பிக்குவுடன் ஜம்இய்யதுல் உலமா பேரம் பேசுவதன் பின்னணி என்ன?

அளுத்கம கலவரத்தில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட மொத்த சொத்தழிப்பின் பெறுமானம் 450 கோடி என்று மதிப்பிடப்பட்டிருந்தது. பெஷன் பக், நோலிமிட் உள்ளிட்டு நாட்டின் நாலா புறங்களிலும் இனவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் இழக்கப்பட்ட முஸ்லிம்களின் சொத்து 1000 கோடி ரூபாவைத் தாண்டியிருக்கும் இது 1915 இல் கம்பளைக் கலவரம் முஸ்லிம்களுக்கு ஏற்படுத்திய இழப்பை விட பன்மடங்கு அதிகம்.

நூற்றுக்கணக்கான பள்ளிவாயல்கள் தாக்கப்பட்டு முஸ்லிம்கள் செறிவாக வாழும் இடங்களில் புத்தர் சிலை திட்டமிட்டு வைக்கப்படும் காட்சிகளும் அமைதியாக நடந்த வண்ணமே உள்ளன. கடந்த ஐந்தாண்டுகளாக முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான பகை உணர்வையும் இனக் குரோதத்தையும் ஊட்டி வளர்த்ததில் ஞானசாரர்தான் முன்னணிப் பங்கு வகித்தவர். இவர் மீதான குற்றச்சாட்டுக்களை வாபஸ் வாங்கவும் வழக்குகளை திருப்பிப் பெறவுமே ஜம்இய்யதுல் உலமா பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதாக சமூக ஊடகங்களிலும் வலைத்தளங்களிலும் எக்கச்சக்கமான விமர்சனங்களும் விவாதங்களும் நடந்த வண்ணமுள்ளன.

பொறுப்பு வாய்ந்த ஜம்இய்யதுல் உலமாவோ இது குறித்து உத்தியோகபூர்வமான ஊடக சந்திப்பை நடத்துவதிலிருந்தும் சிவில் சமூகத்திற்குத் தெளிவுபடுத்துவதிலிருந்தும் ஒதுங்கியிருப்பது அதன் நம்பகத் தன்மையில் பெருத்த சந்தேகத்தை உண்டுபண்ணியுள்ளது.


ஞானசாரரின் மனநிலையில் எந்த மாற்றமும் நிகழவில்லை என்பதற்கு அவரது சமீபத்திய நகர்வுகளே ஆதாரமாக உள்ளது. சாரரும் அவரது நிறைவேற்றுப் பணிப்பாளர் டிலந்தவும் மியன்மாருக்கு சமீபத்தில் மேற்கொண்ட விஜயத்தின்போது அங்கு 8 இலட்சம் முஸ்லிம்களைத் துரத்தியடிப்பதற்கு பின்னணியில் இருந்து வரும் விராது தேருடன் நடத்திய பேச்சுவார்த்தை ஊடகங்களில் கசிந்து நம்மைத் திடுக்கிட வைத்தது.

சாரரின் விஜயத்திற்கு முன்னர் ரோஹிங்ய முஸ்லிம்களின் பிரச்சினை குறித்து சம்பந்தப்பட்ட மியன்மார் தரப்புகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று கொழும்பில் கூறிவிட்டே அவர் பறந்தார். ஆனால், விராதுடன் நடத்திய பேச்சுவார்த்தையோ முஸ்லிம்களுக்கு எதிரான கொலை வெறியிலிருந்து அவர் மீளவில்லை என்பதை உறுதி செய்தது.

இன்று ஞானசார தேரர் முஸ்லிம் எதிர்ப்பைக் கைவிட்டு விட்டார் என்றும் அவரது மனோநிலை மாறிவிட்டது என்றும் மியன்மார் முஸ்லிம்களுக்கு அவர்தான் குரல் கொடுக்கிறார் என்றும் அசாத் சாலி தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கூறிக் கொண்டிருந்தபோதே விராதுவுடன் அவர் மற்றொரு சதித் திட்டம் குறித்து பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்தார்.

ஞானசாரருடன் சில முஸ்லிம் அரசியல்வாதிகளும் சட்டத்தரணிகளும் ஜம்இய்யதுல் உலமாவும் இணைந்து சமரசம் பேசுவதன் பின்னணி என்ன? இது குறித்து முஸ்லிம்கள் விழிப்படைய வேண்டும். உச்சநீதிமன்றத்தில் சாரருக்கெதிரான சீரியஸான பல வழக்குகள் நிலுவையில் இருந்து வருகின்றன. இறைத்தூதரை அவமானப்படுத்தியமை, அல்குர்ஆனை அவமானப்படுத்தியமை, அல்லாஹ்வை அவமானப்படுத்தியமை உள்ளிட்டு, நீதிமன்றத்தை அவமானப்படுத்தியமை தொடர்பாகவும் குறித்த விசாரணைகள் முடிவடையும் தறுவாயில் உள்ளன. ஞானசாரரை குறைந்தது 3 ஆண்டுகள் சிறையில் தள்ளும் தீர்ப்பொன்றை நீதிமன்றம் வழங்கவுள்ளது என்ற எதிர்பார்ப்பு கூர்மையடைந்துள்ளது.

இந் நிலையில் ஞானசாரரின் தொடர்ச்சியான இருப்பும் இனவாத செயற்பாடுகளும் அரசாங்கத்திற்குப் பெரிய அச்சுறுத்த லாக அமையும் எனக் கருதிய ஜனாதிபதி தனிப்பிட்ட வகையில் அவரை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.



> ஐந்தாண்டு காலமாக முஸ்லிம் விரோத பிரச்சாரத்தைத் திட்டமிட்டு சிங்கள இளைஞர்கள் உள்ளத்தில் வளர்த்து வெறியூட்டியுள்ள ஞானசாரரை வழக்கிலிருந்து விடுவித்தால் இனவாதம் ஒழிந்து விடுமா? அதற்கென்ன உத்தரவாதம்? ஒருக்கப்பட்ட ஒரு சமூகம் இறுதியாக நம்பிக்கை வைக்கும் ஒரே இடம் நீதிமன்றங்களே. நீதிமன் றத்தின் பிடியிலிருந்து அல்லது சட்டத்தின் பிடியிலிருந்து ஞானசாரரை விடுவிப்பதற்கு ஜம்இய்யா சோரம் போவது மிகப் பெரிய அநியாயமாகும்.

வெளிநாடொன்றுக்குச் சென்று பௌத்த ஆலயமொன்றில் தங்கிப் பணியாற்றுமாறு ஜனாதிபதி விடுத்த கோரிக்கையை சாரர் நிபந்தனைகளுடன் ஏற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிகிறது. அதன்படி ஜப்பானிலுள்ள பௌத்த ஆலயமொன்றின் பிரதான மதகுருவாக ஞானசாரர் சில ஆண்டுகளுக்குத் தங்கியிருக்கப் போகின்றார். ஆனால், அவர் மீதான நீதிமன்ற வழக்குகளை வாபஸ் பெற வேண்டும் என்று நிபந்தனை விதித்துள்ளார்.

வழக்குகளின் இறுதித் தீர்ப்பு வெளிவரவுள்ள நிலையில், நிறைவேற்று அதிகார முறையைப் பயன்படுத்தி ஜனாதிபதி அவரை மன்னிப்பதன் மூலம் சிறைத் தண்டனையிலிருந்து அவரை விடுவிக்கலாம். ஒரு வழக்கில் மாத்திரமே இது சாத்தியம். நிலுவையிலுள்ள சீரியஸான பல வழக்குகளிலிருந்து அவரை விடுவிப்பது ஜனாதிபதிக்கும் முடியாத காரியம்.

வழக்குத் தொடுத்தவர்கள் அவற்றை வாபஸ் வாங்கிவிட்டால் ஞானசாரர் சுத்தவாளியாகவே ஜப்பான் சென்று விடுவார். திரும்பி வரும்போது மீண்டும் தனது இனவாதப் புரளியை கிளப்பி விடுவார். எனவே, அவர் மீதான வழக்குகள் வாபஸ் பெறப்பட்டால் முஸ்லிம் எதிர்ப்புப் பிரச்சாரத்தைக் கைவிடுவதாக ஜம்இய்யதுல் உலமாவுடன் சமரசம் பேசப்படுகின்றது.

ஐந்தாண்டு காலமாக முஸ்லிம் விரோத பிரச்சாரத்தைத் திட்டமிட்டு சிங்கள இளைஞர்கள் உள்ளத்தில் வளர்த்து வெறியூட்டியுள்ள ஞானசாரரை வழக்கிலிருந்து விடுவித்தால் இனவாதம் ஒழிந்து விடுமா? அதற்கென்ன உத்தர வாதம்? ஒடுக்கப்பட்ட ஒரு சமூகம் இறுதியாக நம்பிக்கை வைக்கும் ஒரே இடம் நீதிமன்றங்களே. நீதிமன்றத்தின் பிடியிலிருந்து அல்லது சட்டத்தின் பிடியிலிருந்து ஞானசாரரை விடுவிப்பதற்கு ஜம்இய்யா சோரம் போவது மிகப் பெரிய அநியாயமாகும்.

சீரியஸான வழக்குகளில் கடுமையான தீர்ப்பையோ அடைக்கலம் வழங்கக் காத்திருக்கும் சிறைக் கம்பியோ சாரரை ஒன்றும் பயமுறுத்தவில்லை போலவே கிந்தோட்டையில் அவரது கொட்டம் உயர்கின்றது. உங்கள் இளைஞர்களைக் கட்டுப்படுத்தாவிட்டால் எங்கள் இளைஞர்களையும் கட்டுப்படுத்த முடியாது என்கிறார் ஞானசாரர்.

''குண்டர்கள் தாக்கியபோது பாதுகாப்புத் தரப்பினர் வேடிக்கை பார்த்தனர். படையினர் மீது எங்களுக்கு நம்பிக்கையில்லை'' என்று முஸ்லிம்கள் குற்றம் சாட்டும் ஒரு தருணத்தில் முப்படையினர் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றார் சாரர். அதன் மூலம் வேட்டைக் களத்தைத் தயார் செய்கிறார் அவர்.

அளுத்கமை வன்முறையில் பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு தருவோம் என்று பாராளுமன்றத்தில் பசப்பு வார்த்தை கூறிய அரசாங்கம் கிந்தோட்டை வன்முறைக்கு முன்னாலும் வாய் வீரமாக நான்கு வார்த்தைகளைப் பேசி அடங்கிப் போயுள்ளது.

இத்தகையதோர் கொதிப்பான சூழலில் தமது சொந்த அரசியல் நலன்களுக்காகவும் அதிகாரத்தைத் தக்கவைப்பதற்காகவும் ஞானசாரருடன் பேரம் பேசுவது எவ்வளவு துரோகம். அரசியல்வாதிகளின் அழுத்தங்களுக்குப் பணிந்தோ பணியாமலோ உலமா சபை இப்படியொரு முடிவுக்குச் சென்றமை மிகப் பெரிய சமூகத் துரோகமாகும் முஸ்லிம்கள் இது குறித்து விழிப்பாக இருக்க வேண்டும். ■

# கிந்தோட்டையில் வன்முறைக்குத் தூண்டியோரை சமாதானக் குழுவில் இணைத்துள்ள அரசாங்கம்

காலி, கிந்தோட்டை வன்முறைகளைத் தொடர்ந்து அப்பிரதேசத்தில் அமைதியை ஏற்படுத்த நிறுவப்பட்ட சமாதானக் குழுவில் வன்முறைகள் ஏற்பட தூண்டுதலாகக் செயற்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் கிந்தோட்டை தூபரராம விகாரையின் தேரர் ஒருவர் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. நரியின் கையில் குடலை கழுவக் கொடுத்த கதையே இது என்று அச்சம் தெரிவிக்கப்படுகின்றது,

வன்முறை ஏற்படக் காரணமான தரப்பு, இடத்திலிருந்து ஒருவர் சமாதானத்தை ஏற்படுத்த என நியமிக்கப்பட்ட குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டமை எந்த வகையில் தீர்வை பெற்றுக்கொடுக்கும் என கெபே மற்றும் இலங்கை மனித உரிமைகள் கேந்திய நிலையம் என்பவற்றின் பிரதான நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் கேள்வியெழுப்பியுள்ளார்.

அமைச்சர் வஜிர அபேவர்த்தன மற்றும் காலி மாவட்ட செயலாளர் ஆகியோரிடம் தென்னகோன் இக்கேள்வியை முன்வைத்தார். இது தொடர்பில் கெபே அறிக்கையொன்றை வெளியிட்டது.

வன்முறைகள் வெடிக்கும் அபாயத்திலிருந்த பகுதியிலிருந்து அதிரடிப் படையினரை வெளியேற்றி, 17 ஆம் திகதி இரவு வன்முறைகள் இடம்பெற ஏதுவான சூழலை ஏற்படுததியமையானது பேருவலை, தர்கா நகர் பகுதியில் இடம்பெற்ற வன்முறைகளின் தன்மையைக் காட்டுகின்றது. அதிரடிப் படையினரை திட்டமிட்டு வெளியெற்றியதன் பின்னரே பேருவலையிலும் தர்கா நகரிலும் இனவாதத் தாக்குதல் கூர்மையடைந்தது. இதுபோன்ற காட்சியே 17 ஆம் திகதி கிந்தோட்டையில் நடந்தது.

இதன் பின்னணியில் அரசியல் இலக்குகளும் அடிப்படைவாத இலக்குகளும் இருப்பதாக கீர்த்தி தென்னகோன் சுட்டிகாட்டியுள்ளார்.

ஐதே.க. சார்பில் இம்முறை பிரதேச சபைக்குப் போட்டியிடஎதிர்பார்த்துள்ள கியாஸ் மற்றும் அமில நுவன் ஆகியோருக்கிடையிலான அரசியல் போட்டியும் ஐ.தே.க.வின் வேட்புமனுப் பட்டியலில் இடம்பிடிக்கும் போட்டியும் கூட இந்த வன்முறையின் பின்னணில் இருப்பதாகக் கூறபபடுகின்றது.





இதற்கு மேலாக தூபராம விகாரையில் வைத்து அங்கு கூடிய சிங்கள இளைஞர்களை இனவாதக் கருத்துக்களைக் கூறி வன்முறைக்குத் தூண்டியதாக சந்தேகிக்கக்ப்படும் அம்பலாங்கொடை சுதேநாந்த தேரர், தங்காலை அநுராத்த தேரர் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்ததாகத் தெரிய வருகிறது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் சிறப்புப் பொலிஸ் குழுவின் உயர் அதிகாரி ஒருவரின் நேரடி வழிநடாத்தலில் இது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அறிக்கைகள் கோருவதும் விசாரணை கள் முன்னெடுக்கப்படுவதும் அரசாங்கத்திற்கு நன்கு பழக்கப்பட்டுப் போன செயல்பாடுகளே. தேவை, உருப்படியான சட்ட நடவடிக்கைகளே. பாதிக்கப்பட்டவர்களை தற்காலிகமாக ஆறுதல் படுத்தும் அறிக்கைப் போரை அரசாங்கம் நிறுத்த வேண்டும். குற்றவாளிகளைத் தண்டிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்

## நாட்டிற்கு பெருமை சேர்க்கும் பேருவளை மாணிக்க கல் வியாபாரிகள்

வரலாறு முழுவதிலும் பேருவளை மாணிக்கக் கற்களுக்கு புகழ்பெற்றதொரு நகரமாக உள்ளது. பேருவளையில் மாணிக்கக் கல் அகழப்படுவதில்லை. ஆனால் பேருவளை நகர் உள்நாட்டு, வெளிநாட்டு மாணிக்கக் கல் வியாபாரிகள் சங்கமிக்கும் நகரமாக புகழ்பெற்றுள்ளது. வரலாறு நெடுகிலும் வெளிநாட்டு வியாபாரிகள் இங்கு வந்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்கான வரலாறுக்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன.

பேருவளை மண்ணில் மாணிக்கக்கல் அகழ்ந்தெடுக்கப்படாவிடினும் நாட்டின் ஏனைய பகுதிகளில் அகழ்ந்தெடுக்கப்படுகின்ற மாணிக்கக் கற்களுக்கு பெறுமதியூட்டும் பணி பேருவளை மாணிக்கக் கல் பட்டை தீட்டும் தொழிலாளர்களினால் மேற்கொள்ளப்படுகிறது. வரலாறு முழுவதிலும் மாணிக்கக் கல் பட்டை தீட்டும் கலையை மேம்படுத்திய பேருவளை மக்கள் இலங்கை மாணிக்கத்திற்கு உலகளவில் பெறுமதியை பெற்றுக் கொடுத்துள்ளார்கள்.

எனது தந்தையின் காலத்தில் பேருவளை பிரதேசத்தைச் சேர்ந்த கலைஞரும் ஊடகவியலாளருமான சமன் சந்திரனாத் வீரசிங்க பேருவளை தொடர்பில் ஒரு பாடலை எழுதியிருந்தார். அது பின்வருமாறு உள்ளது.

"மினி கெட மதுவென சிறிலக்தொனே
திதுலன ரெஸ் கலபய்
ஜன ஹத அபிமன்
ஜய கத நங்வய்"

இலங்கை மண்ணில் தோன்றும் மாணிக்கக் கற்கள், பிரகாசிக்கும் வகையில் பேருவளை மண்ணிலேயே பட்டை தீட்டப்படுகிறது. அது மக்கள் உள்ளங்களில் அபிமானத்தை ஏற்படுத்தும் விடயமாகவும் உள்ளது என் கின்ற கருத்தை மேற்படி பாடல் வரிகள் சுட்டிநிற்கிறது.

ஆரம்ப காலம் முதல் எனது தாயாரது சொந்தங்கள் மாணிக்கக் கல் வியாபாரத்தில் ஈடுபாட்டு வந்தார்கள். இரத்தினபுரியில் அவர்களிடம் ஒரு கடை சொந்தமாகக் காணப்பட்டது. அக்கட்டிடத்திற்கு எனது மாமனாரின் பெயர் சூட்டப்பட்டிருந்தது. அது ஹம்ஸா கட்டிடம் என அழைக்கப்பட்டது. பலம்பொருந்திய ஐக்கிய தேசிய கட்சி ஆதரவாளரான எனது மாமனார் அக்கட்டிடத்தில் ஒரு அறையை ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி அலுவலகத்தை நடத்திச் செல்ல வழங்கியிருந்தார்.

அக்காலத்தில் பேருவளையைச் சேர்ந்தவர்களுக்கும் இரத்தினபுரியை சேர்ந்தவர்களுக்குமிடையில் மாணிக் கல் வியாபாரத்தின் மூலம் சிறந்த உறவுகள் பேணப் பட்டு வந்தன. எனது மாமனார் முன்னாள் அமைச்சர் சந்திரா கன்கந்த அவர்களின் தந்தையுடன் அப்போது மாணிக்கக் கல் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளார். அக்காலப்பகுதியில் இவ்விடயம் பெருமையாகப் பேசப் பட்டு வந்தது.

தற்போது இரத்திரபுரி பகுதியில் மாணிக்கக் கல் குறைவாக கிடைப்பதனால் பேருவளைப் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் மாணிக்கக் கற்களை தேடி வெளிநாடுகளுக்குப் பயணிக்க ஆரம்பித்தார்கள். விஷேடமாக தன்சானியா, மடகஸ்கார், மொசம்பிக் போன்ற ஆபிரிக்க நாடுகளுக்குச் சென்றார்கள்.

அரசாங்கத்திற்குச் சுமையை ஏற்படுத்தாமல் ஆபத்துக்களுக்கு முகம்கொடுத்து, தமது பிள்ளைகளை சிறந்த முறையில் வாழ வைக்கும் நோக்கில் இம்மக்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் சகலருக்கும் முன்மாதிரியை ஏற்படுத்துவதாக உள்ளது. எனது தாயாரது சகோதரியின் புதல்வர் யாழ்ப்பாண பல்கலைக்கத்தில் பட்டம் பெற்று அதை வீட்டில் மாட்டி விட்டு மாணிக்கக் கற்களை கொள்வனவு செய்ய மடகஸ்கார் சென்றார். அப்போது 1990 தசாப்த காலப் பகுதி. சட்டபூர்வமான முறையில் கொள்வனவு செய்த மாணிக்கக் கற்களை அரசாங்க அதிகாரிகளுக்கு காண்பித்து உரிய கட்டணங்களையும் செலுத்திய பின்னர் விமானத்திற்கு ஏற முற்பட்டபோது அங்குள்ள அதிகாரிகள் மாணிக்கக் கற்களை வழங்குவதை நிராகரித்தார்கள்.

எமது நாட்டை சேர்ந்தவர்களுக்கு மாணிக்கக் கல் கொள்வனவின் போது வெளிநாடுகளில் இலஞ்சம், ஊழல் மோசடிகளுக்கு அகப்பட நேரிடுகிறது. மாணிக்கக் கல் பொதியை பெறாமல் விமானத்தில் ஏறமாட்டேன் எனக் கூறி விமானத்தின் முன்னால் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டார். இவ்விடயம் அப்போது பத்திரிகைகளில் முன்பக்கத்தில் பிரசுரமானது.

அக்காலப் பகுதியில் அந்நாடுகளுடன் இலங்கை தூதரக உறவுகளை பேணியிருக்கவில்லை. நான் வீடமைப்பு அமைச்சராக இருந்தபோது வியாபார நோக்கில் ஆபிரிக்க நாடுகளுக்குச் செல்வோரின் நலன் கருதி கொன்சில் அலுவலகங்களை உருவாக்குமாறு நான் பாராளுமன்றில் வேண்டுகோள் விடுத்தேன். அதனை ஏற்று அப்போதைய பிரதமர் ரணில் விக்ரமசிங்க அங்கு கொன்சில் அலுவலக மொன்றை அமைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டார்.

பேருவளை பிரதேசத்தை சேர்ந்த வியாபாரிகள் மிகுந்த கஷ்டங்களை எதிர்கொண்டு ஆபிரிக்க நாடுகளுக்கு சென்று மாணிக்கக் கற்களை பெற்று வருகிறார்கள். ஒரு தடவை எனது தந்தை பாடசாலையில் வைத்து கூறிய விடயம் இங்கு நினைகூரத்தக்கது. "நாம் நாட்டிற்கு சுமையாக இருக்கக் கூடாது. நாட்டிற்கு கடன்படவும் கூடாது. நாம் நாட்டிற்கு சுமையாகும் நோயாளியாகவும் இருக்கக் கூடாது. நாட்டிற்கு பிரயோசனமளிக்கும் பிரஜையாக மாற வேண்டும். சொந்தக் காலில் எழுந்து நிற்கும் மனிதர்களாக உருப்பெற வேண்டும்" என்றார்.

நாட்டில் மாணிக்கக் கற்களைப் பெறுவதற்கான மூலங்கள் இல்லாதபோது அரசாங்கத்தைக் குறை கூறாமல் மிகுந்த கஷ்டங்களை எதிர்கொண்டு ஆபிரிக்க நாடுகளுக்கு சென்று மாணிக்கக் கற்களைப் பெற்று வரும் முயற்சிகரமான இவ்வியாபாரிகளை இன்னும் ஊக்கப்படுத்தி அவர்களுக்கு உதவியளிப்பது அதிகாரிகளின் கடமையாகும்.

# மறுமலர்ச்சி இயக்கத்தின் அபிலாஷைகள்




முன்னைய கட்டுரைகள் மூலம் மறுமலர்ச்சி இயக்கத்தை பிரதேச மட்டத்தில் முன்னெடுத்தல் பற்றியும், கலந்துரையாடல் வழிமுறை பற்றியும், அதன் மூலம் எதிர்பார்க்கும் அபிலாஷைகள் பற்றியும் தெளிவுபடுத்தினோம். இக்கட்டுரை மூலம் மறுமலர்ச்சி இயக்கம் பணியாற்றும் செயல்முறை பற்றியும் அது அடைய எண்ணியுள்ள இலக்குகளை வெற்றிகொள்வதற்கு அனுசரிக்கும் உபாய மார்க்கங்களையும், கோட்பாடுகளையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

### சாந்தியும் ஞானமும்

பல்வேறு பிரதேசங்களில் கிளைகளை உருவாக்கிய மாத்திரத்தில் மேற்படி கிளைகள் செயற்பட்டுக் கொண்டிருக்குமென நாம் எதிர்பார்க்கவில்லை. சில கிளைகள் வேலை செய்யும் நிலைக்கு மாறலாம். மேலும் சில கிளைகள் ஒரே இடத்தில் தேங்கி நிற்கும் நிலை ஏற்படலாம். இக்கிளைகளின் கமிட்டிகளைக் கூட்டி அவற்றை உயிரூட்டுவதற்குக் காரணமான மேற்பார்வை நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்த எதிர்பார்க்கின்றோம்.

அதேசமயம், மறுமலர்ச்சி இயக்கக் கிளைகளின் உறுப்பினர்களை ஒரு கற்கை நிகழ்ச்சித் திட்டத்தில் ஈடுபடுத்தவும் எதிர்பார்க்கிறோம். மேற்படி கற்கை நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கும் முதலாவது குறிக்கோள்: அவர்கள் அனைவரையும் ஆத்மீக ரீதியில் குணப்படுத்தி, அவர்களை உற்சாகமான நிலைமைக்கு மேம்படுத்துவதற்கு, அதற்கேயுரித்தான அவர்களது காயங்களில் உள்ள அழுக்குகளை நீக்கி, மேற்படி காயங்களை குணப்படுத்துவதாகும்.

கல்வி நிகழ்ச்சித் திட்டத்தின் இரண்டாவது குறிக்கோள் : அவர்கள் அனைவருக்கும் ஞானத்தை வழங்குவதாகும். நாட்டில் ஏற்பட்டுள்ள சீரழிவு பற்றியும், அதற்கான காரணிகள் தொடர்பாகவும் மிகக் கூர்மையான புரிதலை ஏற்படுத்துவது அதன் எதிர்பார்ப்பாகும். இவற்றின் மூலம், அவர்கள் மத்தியில் வேரூன்றியுள்ள சாதி - இன - மத தப்பெண்ணங்களை இல்லாதொழித்து, நியாயமாகவும், தர்க்க ரீதியாகவும் விடயங்களை ஆய்வு செய்யும் ஆற்றல் கொண்ட தனிநபர்களை உருவாக்குவதே எதிர்பார்ப்பாகும்.

மேற்படி கற்கை நடவடிக்கைகளின் பின்னர், இதில் ஈடுபாடு கொண்டோரை மறுமலர்ச்சி இயக்கத்தை வியாபிக்கச் செய்வதற்கு மிகவும் சக்தி வாய்ந்த முறையில் செயற்படுத்தும் நிலைக்கு ஈடுபடுத்த முடியுமென எதிர்பார்க்கின்றோம். அதே சமயம், இவர்கள் அனைவரும் சாதாரண மனிதர்களை விட வித்தியாசமான, நற்பண்பு கொண்ட மனிதர்களாக, குடும்ப உறுப்பினர்களும், அயலவர்களும் காண்பார்கள். இந்நிலைமை மறுமலர்ச்சி இயக்கத்தின் விரிவுபடுத்தலை துரித்தப் படுத்தும் காரணியாக அமையும்.

### குடும்ப அமைப்பு

அதே சமயம் மறுமலர்ச்சி இயக்கத்தின் உறுப்பினர்கள் ஊடாக அவர்களின் குடும்பங்கள் மீதும் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு எதிர்பார்க்கிறோம். நாட்டில் நீண்டகாலமாக நிலவிய பயங்கரமான, அநாகரிகமான சுற்றாடல் தனிநபர்களை விகாரமடையச் செய்வதற்கும், அந்நபர்களின் குடும்பங்களை விகாரமடையச் செய்யவும் காரணமாக அமைந்தது. குடும்பத்திற்குள் கணவன் மனைவி இடையேயும், பெற்றோர்கள் பிள்ளைகளுக்கிடையும் இருக்க வேண்டிய புரிந்துணர்வு விகாரமடைவதற்குக் காரணமாக அமைந்தது.

நிகழ்காலத்தில் குடும்பத்திற்குள் புலமைசார் கலந்துரையாடல் இல்லவேயில்லை. அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த கலந்துரையாடலில் வெகு அபூர்வமாக குடும்பத்தின் தந்தை மாத்திரமே ஈடுபடுவார். பாடசாலைக் கல்விக்கும், ரியூஷன் கல்விக்கும் தமது முழு நேரத்தையும் செலவு செய்ய பிள்ளைகள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

மனைவி தனது நேரத்தில் கூடுதலான நேரத்தை வீட்டு வேலைகளுக்கு செலவிடுகின்றார். மனைவி தனது அறிவையும், பொழுதுபோக்கையும் தொலைக்காட்சி மூலமோ அல்லது மதத் தலங்களில் இடம்பெறும் சமய நிகழ்ச்சிகள் மூலமோ பெறுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார். இதன் இறுதிப் பெறுபேறாக தாய்மார் மூடநம்பிக்கைகளின் பிறப்பிடமாக மாற்றப்பட்டுள்ளனர்.

பிள்ளைகளின் வாழ்க்கை மிகவும் சோகமயமானது. அதிக சுமைகள் காரணமாக பிள்ளைகளுக்கு பிள்ளைப் பருவமோ இளைஞர்களுக்கு இளைஞர் பருவமோ கிடையவே கிடையாது. அவர்களில் அதிகமானோர் கையடக்க தொலைபேசிகளுடனேயே தமது வாழ்க்கையை கழித்து வருகின்றனர். அறிவை மேம்படுத்துவதற்காக அவர்கள் இணையத்தளங்களுக்குச் செல்வதில்லை. வம்புக் கதைகளை (Gossip) வாசிப்பதற்கும் அவற்றிற்கு ஆழமற்ற பிரதிபலிப்புகளை எழுதுவதற்கும் அல்லது பாலியல் ஆர்வத்தைத் தீர்த்துக் கொள்வதற்கான, எதுவித பிரயோசனமுமற்ற நடவடிக்கைகளிலேயே அவர்கள் ஈடுபட்டுள்ளனர். தம்மீது சுமத்தப்பட்டுள்ள அதிக சுமையை இலகுபடுத்துவதற்கு போதைவஸ்துக்களுக்கு அடிமையாகி உள்ளனர். சில குடும்பங்களில் தந்தைக்கும் தாய்க்குமிடையே மோதல் நிலவுகிறது. இந்த மோதல் நிலைமை பிள்ளைகளையும் பாதிக்கிறது. பிள்ளைகளை போதைவஸ்துக்களுக்கு அடிமையாக்கும் மற்றுமொரு காரணம் இதுவாகும்.

பிள்ளைகளின் கல்விக்கான இலக்குகளை எடுத்துக் கூறுவது பெற்றோராவர். அநேகமான பெற்றோருக்கு அது பற்றி சரியான புரிதல் கிடையாது. சரியான புரிதலை ஏற்படுத்துவதற்கான வழிமுறையும் கிடையாது. இலக்குகளை நிர்ணயிக்கும்போது பிள்ளைகளுடைய விருப்பங்கள், திறமைகள் என்பன கவனத்திற் கொள்ளப்படுவதில்லை. பெற்றோர் ஒப்படைக்கும் சிலுவையை தோளில் சுமந்து செல்ல பிள்ளைகள் பழக்கப்பட்டுள்ளனர். இலக்குகளை பூர்த்தி செய்ய முடியாது மனநோயாளர்களாக மாறும் பிள்ளைகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது.

முக்கிய பரீட்சைத் தடைகளை வெற்றி கொள்வதில் தோல்வியுறும் பிள்ளைகள், பயனற்ற பிள்ளைகளாகக் கருதப்படுகிறார்கள். புலமைக் கல்வியை விரும்பாத, திறமையற்ற பிள்ளைகள் தொழில்நுட்ப அல்லது தொழில் கல்வியில் ஈடுபடுத்தப்படுவதில்லை. தொழில்நுட்ப, கைத்தொழில் கல்விக்காக அரசு பராமரித்து வரும் நிறுவனங்கள் உண்டாயினும், அநேகமான நிறுவனங்களில் போதியளவு மாணவர்கள் கிடையாது. புலமைசார் கல்வியை விரும்பாத அல்லது திறமையற்ற பாடசாலை மாணவர்களுக்கு தொழில்நுட்ப அல்லது கைத்தொழில் நிறுவனங்களில் ஈடுபடுத்துவதற்கு முறைசார் வழிமுறையும் கிடையாது.

### குடும்பத்திற்கான மறுமலர்ச்சி

குடும்பத்திற்குள் ஏற்பட்டுள்ள இந்த துர்பாக்கிய நிலையை இல்லாதொழித்து, அவற்றை இயல்பு நிலைக்குக் கொண்டுவருவதற்கும் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதும் முக்கிய நிபந்தனையாகுமென மறுமலர்ச்சி இயக்கம் கருதுகிறது. மறுமலர்ச்சி இயக்கத்தின் உறுப்பினர்கள் ஊடாக மறுமலர்ச்சி தர்மத்தின் மூலம் அதனை அவர்களின் குடும்பங்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டுமென மறுமலர்ச்சி இயக்கம் எதிர்பார்க்கிறது.

இதன்போது குடும்பங்களில் நிலவும் விகாரமான நிலைமைகளை தடுத்து நிறுத்தி, குடும்பங்களில் உள்ள அனைவரும் பரஸ்பர புரிந்துணர்வுடனும், விழிப்புடனும் செயற்படும் நிலைக்கு இட்டுச் செல்ல, மறுமலர்ச்சி இயக்கம் எதிர்பார்க்கிறது. இதற்கான விசேட நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தவும் எதிர்பார்க்கின்றோம்.

காலத்திற்குக் காலம் குடும்ப அங்கத்தவர்கள் ஒன்றுகூடி தமது பிரச்சினைகளை மாத்திரமல்லாமல், சமூகப் பிரச்சினைகளையும் கலந்தாலோசிக்கும் ஒரு மரபை ஏற்படுத்த வேண்டும். மூடநம்பிக்கைகளின் அர்த்தமற்ற தன்மையை அவர்களுக்கு எடுத்துக் கூற முடியும். பிள்ளைகளுக்கு கல்வியூட்டுவதில் பெற்றோருக்கு ஆலோசனை கூறும் ஆலோசகர்களின் கடமையை மறுமலர்ச்சி இயக்கம் மேற்கொள்ள இயலும். குடும்பத்தின் மனநலத்தை மேம்படுத்துவதற்கு அவசியமான ஆலோசனைகளை வழங்கும் ஒரு வழிமுறையையும் ஏற்படுத்த முடியும்.

கல்விக்கு முழுமையான சக்தியைப் பயன்படுத்தி செயற்படும் நிலைமையின் கீழ் பிள்ளைகளுக்கு ஏற்பட்டுள்ள அழுத்தத்தின் சுமையை இலகுபடுத்துவதற்கு பயன்படுத்தக்கூடிய வழிமுறைகளை அவர்களுக்கு எடுத்துக் கூற முடியும்.



### மூடநம்பிக்கைகள்

அநாகரிகம் தலைவிரித்தாடிய பயங்கரமான காலகட்டத்திலேயே குடும்பத்திற்குள் மூடநம்பிக்கைகள் அதிக அளவில் அதிகரித்தன. அது முழு சமூகத்திலும் பாரிய துணையற்ற நிலைக்குத் தள்ளியுள்ளது. இக்கால கட்டம் மிகவும் பயங்கரமானது. இத்தகைய சூழமைவில் செய்வதறியாதோர் மூடநம்பிக்கைகள் மீது அதிக ஈடுபாடு கொண்டுள்ளனர். இது சாதாரண நிலைமையாக உள்ளது.

மரணித்த பிள்ளையின் பிரேதத்தைக் காண முடியாதபோது, சாதாரணமாக, தாய்மார் தமது பிள்ளை இறந்ததை நம்பமாட்டார்கள். அதற்குப் பதிலாக பிள்ளை எங்கோ உயிரோடு இருப்பதாக நம்புவர். அத்தகைய தாய்மார் சாத்திரிமாரையோ, கடவுளையோ தேடிச் சென்று நேர்த்திக் கடன்களில் ஈடுபாடு கொள்வர். இது இயல்பானது. இத்தகைய சூழலில் மூடநம்பிக்கைகளுக்கான கோரிக்கை அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

இவ்வாறு அதிகரிக்கும் மூடநம்பிக்கைகளுக்கான சந்தை பன்மடங்கு கூடியுள்ளது. இச்சந்தையை சுருங்கச் செய்யாது முன்னெடுக்கும் பணியை ஊடகங்களே பொறுப்பேற்றுள்ளன. குடும்பத்தின் அனைத்து நடவடிக்கைகளும் ராசிப் பலனுக்கு அமைய இடம்பெறுகின்றன. பிள்ளைகளின் பரீட்சைகளின்போதும் நேர்த்திக் கடனில் ஈடுபடுவது ஒரு சாதாரண நிகழ்வாக மாறியுள்ளது. பரீட்சை கால அட்டவணையை சுப நேரங்களில் நடத்துவதற்கு பரீட்சை ஆணையாளரும் விஷேட ஆர்வத்தைக் காட்டி வருகிறார்.

பிள்ளைகளின் திருமணமும் சாதகப்படியே நடத்தப்படுகின்றன. பொருத்தமான துணைவர்கள் சாதகப் பொருத்தத்தின்படி தேடப்பட்டு திருமணங்கள் நடத்தி வைக்கப்படுகின்றன. திருமணத்திற்கு தகுதியான தகுதியற்ற பெண் பிள்ளைகள் சாதகத்தின்படி சிறுவயதிலேயே அடையாளப் படுத்தப்படுகின்றனர். கணவனுக்கு மரணத்தை விளைவிக்கக் கூடிய பெண் பிள்ளைகள் திருமணத்திற்கு தகுதியற்ற பிள்ளைகளென பெற்றோர் நிச்சயிக்கின்றனர். இதன் காரணமாக திருமணமாகாது தனிக்கட்டையாக வாழ நிர்ப்பந்திக்கப் பட்ட பெண்களின் விகிதாசாரம் மிக அதிகமாகும்.

புலமைசார் கல்வியை விரும்பாத அல்லது திறமையற்ற பிள்ளைகளை தொழில்நுட்ப அல்லது தொழிற் கல்வியில் ஈடுபடுத்துவதன் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுவதோடு, அதன்போது தெரிவுசெய்ய வேண்டிய கற்கை நெறிகளையும் அறிமுகப்படுத்த முடியும். பிள்ளைகளின் முன்னேற்றத்திற்குக் காரணமான பல்வேறு கல்வி நடவடிக்கைகளை உயர்த்தும் செஸ் (Chess) விளையாட்டை அவர்களுக்கு அறிமுகப்படுத்தி, அதனை பிள்ளைகள் மத்தியில் பிரபல்யமாக்க முடியும்.

பிள்ளைகளுக்குத் திருமண ஏற்பாடுகளைச் செய்யும்போது ஜாதகத்திற்கு கூடிய கவனம் செலுத்தும் செயல்முறை அர்த்தமற்றது என்றும், அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும் என்பதையும் பிள்ளைகளுக்கு எடுத்துக் கூற முடியும். பிள்ளைகளுக்கான திருமண வைபவங்களின்போது ஆடம்பரமான விழாவாக அதனை நடத்தி முடிப்பதற்கு, தம்வசம் இருக்கும் அனைத்துச் செல்வங்களையும் செலவு செய்யும் ஒரு நடைமுறை இலங்கையில் உள்ளது. அதற்குப் பதிலாக குறைந்த செலவில் மனங்கவர் அழகிய திருமண விழாக்களை நடத்தும் முறையை பிள்ளைகளுக்குப் புகட்ட முடியும்.

வீடுகளை நிர்மாணிக்கும்போது முறைசார் வழிமுறையை அனுசரிப்பதன் மூலம் குறைந்த செலவில், சிறந்த வீடுகளை நிர்மாணிக்கக் கூடிய வகையில் அவர்களுக்கு வழிகாட்ட முடியும். விவசாயத்தை முக்கிய வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள மக்களுக்கு விவசாயத்தின் மூலம் கூடிய வருமானத்தைப் பெறக்கூடிய வழிவகைகளை போதிக்க வேண்டும். புதிதாகப் பொருளாதார மாற்றங்களை உருவாக்கும்போதும், சுயதொழில் வாய்ப்புக்களை அவர்களுக்குப் போதித்து வழி காட்ட முடியும்.

குடும்பங்களில் வயோதிபர்கள் மிகத் திருப்தியற்ற முறையிலேயே வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கு மரண பயத்தை ஏற்படுத்தி, அவர்களுடைய சேமிப்புக்களை சூறையாடும் ஸ்தாபன ரீதியான இயக்கங்கள் செயற்பட்டு வருகின்றன. அவர்கள் மத்தியில் நிலவும் மரண பயத்தை நீக்கி மரணம்வரை சந்தோஷமான வாழ்க்கையை நடத்தக் கூடிய வழிவகைகளை அவர்களுக்கு எடுத்துக் கூற வேண்டும். (அபிலாஷைகள் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நேர்காணல்- ஹெட்டி ரம்ஸி**


# மொழி ஓர் ஆயுதம்

## சிங்கள மொழியால் பெரும்பான்மை சமூகத்திற்குள் ஊடுருவ முடியும்

**முனீருல் மில்லத் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன்**
தேசிய தலைவர், இந்திய யூனியன் முஸ்லிம் லீக்

பேராசிரியர் காதர் மொகிதீன் அவர்கள் தமிழ் நாடு புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள திருவல்லூரைப் பிறப்பிடமாக் கொண்டவர். இவர் தனது ஆரம்பக் கல்வியை திருச்சிராப் பள்ளி வரகனேரி பகுதியிலுள்ள ஸ்ரீ ராம் மத்திய பள்ளியிலும், இரண்டாம் நிலை மற்றும் உயர் நிலைக் கல்வியை திருச்சி புனித வளனார் உயர்நிலைப் பள்ளியிலும் கற்றுள்ளார். திருச்சிராப் பள்ளி தூய வளனார் கல்லூரியில் இளங்கலை வரலாற்றுப் பட்டத்தையும், சென்னை மாநிலக் கல்லூரியில் முதுகலை வரலாற்றுப் பட்டத்தையும், சென்னைப் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்தையும் பூர்த்திசெய்துள்ளார்.

1965 இல் திருச்சி ஜமால் முஹம்மத் கல்லூரியில் விரிவுரையாளராக இணைந்த இவர், 1980 வரை வரலாற்றுத் துறையில் பேராசிரியராகவும், பின்பு துறைத் தலைவராகவும் பதவி உயர்வு பெற்றுள்ளார். அதன் பிறகு கல்லூரி வேலையை இராஜினாமா செய்து விட்டு பொது வாழ்வில் இணைந்துள்ளார்.



மாணவர் பருவத்திலேயே காயிதே மில்லத் முஹம்மத் இஸ்மாயில் சாகிப் அவர்களது கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியுடன் தன்னை இணைத்துக் கொண்டார். பள்ளியில் மாணவர் அணி அமைப்பாளராகவும், இளைஞர் அணி அமைப்பாளராகவும், கல்வி மற்றும் கலாசார அமைப்புச் செயலாளராகவும், கட்சிப் பொதுச் செயலாளராகவும், தமிழ் நாடு IUML இயக்கத் தலைவராகவும் பதவிகளை வகித்துள்ள இவர், தற்போது இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் அகில இந்தியத் (தேசிய) தலைவராக உள்ளார்.

பேராசிரியர் காதர் மொகிதீன் கடந்த 16.11.2017 அன்று விஷேட அழைப் பொன்றின் பேரில் இலங்கை வந்திருந்தார். அவர் மீள்பார்வை பத்திரிகைக்கு வழங்கிய சிறப்பு நேர்காணல் இங்கு தரப்படுகின்றது.

- ***இலங்கையில் 30 வருட கால யுத்தம் நடைபெற்றது. அக்காலப் பகுதிகளில் தமிழ் போராளிகளுக்காக வேண்டி தமிழகம் குரல் கொடுத்த அளவுக்கு பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் தொடர்பில் தமிழகம் ஏன் வாய் திறக்கவில்லை?***

விடுதலைப் புலிகள் விவகாரம் தமிழ் நாட்டு அரசியலில் ஒரு பகுதியாகவே மாறியிருந்தது. தமிழ் நாட்டிலுள்ள சில அரசியல் கட்சிகள் LTTE யினரை அவர்களது சொந்தக் கொள்கையில் ஒன்றாக ஆக்கிக் கொண்டார்கள். இந்தியாவில் உள்ள அரசியல் கட்சிக்கு எந்தக் கொள்கை இருக்கக் கூடாதோ அந்தக் கொள்கையை தங்களது கொள்கையாக ஆரத் தழுவிக்கொண்டார்கள்.

இலங்கையை பிரிக்க வேண்டும் என்பதில் இந்திய முஸ்லிம்களுக்கோ இந்திய முஸ்லிம் லீக் கட்சிக்கோ எவ்வித தேவைகளும் உடன்பாடுகளும் கிடையாது. ஒன்றை அழித்து ஒன்றை உருவாக்குவதென்பது முட்டாள்தனம்.

தமிழ் நாட்டில் புலிகள் பிரச்சினையை தமிழ் பிரச்சினை, தமிழ் ஈழப் பிரச்சினை, தமிழர்களுடைய எழுச்சி, உலகத் தமிழர்களுடைய எழுச்சி என்பதாக பிரச்சாரப்படுத்தினார்கள். இதற்கான முக்கியத்துவங்கள் அதிகம் வழங்கப்பட்டன. மாநாடுகளில் நாம் பேசும்போது இந்த வித்தியாசத்தை விளங்கிக் கொண்டோம். எமக்கு ஆதரவில்லாமல் போனது.

இலங்கையில் போர் இடம்பெற்று வந்த காலப்பகுதியில் ஒரு மாநாட்டில் வைத்து, 'இலங்கையில் இரு தரப்புக்குமிடையில் உடன்பாடு எட்டப்பட வேண்டும். ஆயுதம் ஏந்தி இதற்கு தீர்வு காண முடியாது. புலிகள் ஆயுதம் ஏந்திப் போராடி வெற்றி பெற்றால் அது இலங்கையை மாத்திரமல்ல இந்தியாவையும் பாதிக்கும்' என்பதாகக் கூறினோம். இதனால் எமக்கு பல விமர்சனங்களை சந்திக்க நேரிட்டது.

இந்தியாவில் சகல கட்சிகளும் இவ்விடயத்தை பேசி வந்தமையினால் இலங்கையில் அகதிகளான முஸ்லிம் மக்களது விவகாரங்கள் எமக்கு மறக்கடிக்கப்பட்டன. அப்போது இலங்கை அகதி முஸ்லிம்கள் தொடர்பில் பத்திரிகைகளில் ஒரு வரி கூட பிரசுரமாகாது. அவ்விடயத்தை நாங்களாகவே எடுத்துப் பேச வேண்டும் என்றொரு நிலை இருந்தது. உலகில் சோனகத் தமிழர்கள் என தங்களை பெயர் வைத்துள்ள ஒரேயொரு சமூகம் இலங்கை முஸ்லிம்கள். அப்படிப்பட்ட இலங்கை முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள், அதைப் பற்றிய கண்டனங்கள், ஆர்ப்பாட்டங்களை ஏன் நீங்கள் மேற்கொள்ளவில்லை என ராமதாஸிடமும் அடிக்கடி கேள்விகளைத் தொடுத்துள்ளோம்.

இந்தியாவில் எமக்கான எல்லை வரையறுக்கப்பட்டது. அதற்குரிய முறையில் நாம் குரல் கொடுத்துள்ளோம். பொது மேடைகளில் பேசியுள்ளோம். சம்பந்தப்பட்டவர்களிடம் நியாயம் கேட்டுள்ளோம். தீர்மானங்களையும் நிறைவேற்றியுள்ளோம்.

- ***ரோஹிங்கிய அகதிகள் இந்திய முகாம்களில் மிகுந்த கஷ்டங்களை எதிர்கொண்டு வருவதாக கேள்விப்படுகிறோம். இது விடயத்தில் இந்தியா எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது?***

மியன்மார் ஒரு பௌத்த நாடு. பௌத்தத் தலைவராக கருதப்படுகின்ற தலைலாமாவினை இந்திய முஸ்லிம் லீக் சார்பில் நாம் நேரடியாக டில்லியல் வைத்து சந்தித்து அவரிடம் மகஜரொன்றை கையளித்தோம். தற்பொழுது தலைலாமா அதை கண்டித்து அறிக்கை விடுத்துள்ளார்.

பாதிக்கப்பட்ட அகதிகளுக்காக வேண்டி நிறைய பண உதவிகளை செய்வதாகவும் அவர் வாக்குறுதியளித்தார். எனவே பௌத்த நாடொன்றில் நடக்கின்ற தவறொன்றுக்கு பௌத்த தலைவர் ஒருவரே முன்வந்து இது மிகப்பெரும் அநியாயம் எனக் கூறியுள்ளார்.

இதுபோன்று பௌத்த மதத்திலுள்ள பெரியவர்கள், ஆன்மீகத் தலைவர்கள் அநியாயங்கள் இடம்பெறும் போது அதை மதவாத நோக்கில் பார்க்காமல் மனிதாபிமானத்துடன் பார்க்க வேண்டும். ரோஹிங்கியாவில் ஏற்பட்டுள்ள விவகாரத்தை நாம் மனித சமூகத்திற்கு ஏற்பட்டுள்ள பாதகமாகவே நோக்குகிறோம். இலங்கையிலுள்ள பௌத்த மத தலைவர்கள் இவ்விடயத்தை எச்சரித்து 'மியன்மார் மனிதாபிமானத்துடன் நடந்துகொள்ள வேண்டும்' என அறிக்கை விட்டிருந்தால் இந்த நேரத்தில் அது மிகப்பெரிய வரவேற்புக்குரிய விடயமாக இருந்திருக்கும்.

தமிழ் நாட்டில் தற்போது 92,000 ரோஹிங்கிய முஸ்லிம் அகதிகள் உள்ளார்கள். தமிழ்நாடு அரசு சில ஏற்பாடுகளை செய்துகொடுத்துள்ளது. முஸ்லிம் லீக் கட்சிக்கு வெளிப்படையாக சென்று சில விடயங்களை செய்ய முடியவில்லை. முஸ்லிம் லீக் கட்சி எம்.எல்.ஏ. முஹம்மத் அபூ பக்கர் உள்ளார். அவர் மூலமாக சில விடயங்களை செய்து வருகின்றோம். மேலதிகமாக என்னென்ன செய்யலாம் என்ற விடயத்தில் எமக்கு அனுமதி வழங்கினால் நாம் செய்கிறோம் என அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளோம். அதற்கான அறிவித்தல் இன்னும் எமக்கு வழங்கப்படவில்லை.

தற்போது இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பாக ரோஹிங்கிய அகதிகளுக்காக வேண்டி நிவாரண நிதி திரட்டப்பட்டு வருகின்றது. அதை நேரடியாக அரசிடம் கையளிக்கவுள்ளோம். ரோஹிங்கிய அகதிகள் பிரச்சினையை ஒரு முஸ்லிம் பிரச்சினையாகப் பார்க்காமல் மனிதாபிமான முறையில் பார்க்க வேண்டும் என்பதே எமது வேண்டுகோள்.

- ***நரேந்திர மோடியின் ஆட்சியின் கீழ் இந்திய முஸ்லிம்களது நிலை எவ்வகையில் உள்ளது?***

சிறியதொரு கூட்டமே அவர்களது ஆட்சிக்கு ஆதரவு தெரிவிக்கின்றது. பசுவைக் கொல்லாதே என்பது அவர் சார்புடைய RSS உடைய கொள்கையாக இருக்கலாம். அதேநேரம் இறைச்சி சாப்பிடாதே எனக் கூறினால் அது மக்கள் எதிர்ப்புக்கே காரணமாக அமையும். இந்தியாவில் 85 வீதமானவர்கள் இறைச்சி சாப்பிடுபவர்கள். இந்நிலையில் இறைச்சி சாப்பிடக் கூடாது எனக் கூறினால் எப்படியிருக்கும்? இது போன்றே அவர்களது செயற்பாடுகள் உள்ளன.

ஒரு வருடத்திற்கு முன்னர் பண மதிப்பு நீக்கத்தை கொண்டு வந்தார். இதனால் பெரும்பாலான மக்கள் பாதிக்கப்பட்டார்கள். இந்தியாவில் இது மோடி எதிர்ப்பலை வலுப்பெற காரணமாக அமைந்தது. GST (Goods Service Tax) வரியை கொண்டு வந்தார். இதனாலும் மக்கள் பாதிக்கப்பட்டார்கள். பி.ஜே.பி கட்சிக்குள்ளேயே இதற்கு பாரிய எதிர்ப்புகள் கிளம்பியது. இவ்வாறு பிழையான கொள்கைகளை அமுல்படுத்தப் போய் மோடியின் ஆட்சிக்கு எதிராக மக்கள் எதிர்ப்பலை மேலோங்கிக் கொண்டுள்ளது.

- ***இலங்கை முஸ்லிம்கள் தொடர்பில் உங்களது மனப்பதிவு என்ன?***

இந்திய தமிழ் நாடு முஸ்லிம்களுக்கும் இலங்கை முஸ்லிம்களுக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் கிடையாது. இரு நாடுகளினதும் கலாசார விடயங்கள் ஒன்றாகவே உள்ளன. இந்திய முஸ்லிம்களை பொதுவாக நோக்கினால் மத வழிபாடுகளில் அதிக கவனமுடையோராக இருப்பார்கள். இலங்கையிலும் அவ்வாறான நிலைமையே உள்ளது. அரசியல் கட்சி ரீதியாக பார்த்தால் இந்தியாவில் முஸ்லிம் லீக் என்ற அமைப்புள்ளது. இலங்கையில் முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் இன்னும் பல கட்சிகள் உள்ளன.

சமூகம் மற்றும் மத விவகாரங்களில் கவனமாக இருக்குமாறு நான் இலங்கை முஸ்லிம்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன். ஜனநாயக மரபுகளை பேணிச் செயற்பட வேண்டும் என்றும், தீவிரமான விடயங்களில் ஈடுபட வேண்டாம் என்றும், ஆர்ப்பாட்டங்கள் செய்வதில் மிகக் கவனமாக செயற்படுமாறும் நான் ஆலோசனை பகர்கின்றேன்.

- ***இலங்கை விஜயம் குறித்து முஸ்லிம் சமூகத்திற்கு என்னென்ன விடயங்களை சொல்லப் போகிறீர்கள்?***

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான தொடர்புகள் மிக இறுக்கமானது. இந்தியாவிலும் இலங்கையிலும் முஸ்லிம்கள் சிறுபான்மையினராகவே வாழ்கிறார்கள். அதனால் ஏனைய இன மக்களுடன் நல்லிணக்கமான முறையில் தொன்மை தொட்டு வாழ்ந்து வரக்கூடிய வரலாற்றுப் பின்னணியை நாம் பார்க்கின்றோம். சமூக நல்லிணக்கத்தை இஸ்லாம் வலியுறுத்துகிறது. அதற்கு எடுத்துக் காட்டாக இருக்கக்கூடிய முன்மாதிரி வாழ்க்கையை இலங்கை முஸ்லிம்கள் பெற்றுள்ளார்கள். இலங்கை ஒரு தொன்மையான பூமி. இலங்கையின் இயற்கைத் தன்மை அமைதி ஆகும்.

எனவே இங்கு அமைதி நிலவ வேண்டும். இங்குள்ள சகல மக்களும் ஒன்றிணைந்து வாழ வேண்டும் என்பதே எமது அவா. இது ஜனநாயக பூமி. இங்கு ஜனநாயகம் தழைக்க வேண்டும். அதாவது சட்டப்படி வாழ வேண்டும். ஒவ்வொரு விடயமும் சட்ட ரீதியாகவே நடக்க வேண்டும் என முஸ்லிம் லீக் கட்சியின் ஸ்தாபர் காயிதே மில்லத் முஹம்மத் இஸ்மாயீல் அவர்கள் எமக்கு சொல்லிக் கொடுத்துள்ளார்கள். இலங்கையில் ஒரு புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படுவதாக இருந்தால் அதில் சொல்லப்படுகின்ற நியதிகளுக்கு உட்பட்டு நடக்கத் தயாராக வேண்டும்.

அப்போதே நாடு எழுச்சி பெறும். சிங்கப்பூர் இலங்கையை விட சிறிய நாடு. அங்கு டொலரின் பெறுமதி அதிகம். அதுபோன்று இங்குள்ள டொலரின் பெறுமதியும் கூட வேண்டும். அதற்கு அரசியலமைப்பு ஸ்திரமடைய வேண்டும். இலங்கை நாணயத்தின் பெறுமதி அதிகரிக்கப்பட வேண்டும். அதுவே இலங்கைக்கு பெருமை சேர்க்கும் விடயம்.

- ***இஸ்லாம் மற்றும் முஸ்லிம்கள் குறித்து பிற சமூகத்தவர்களிடம் உள்ள பிழையான மனப்பதிவுகளை போக்க இலங்கை முஸ்லிம்களாகிய நாம் எவ்வாறான விடயங்களை செய்ய வேண்டும்?***

முஸ்லிம் சமூகத்தின் பெயரால் இன்று உலகம் முழுவதும் அபாண்டமான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. (பக்.14)




முஸ்லிம் சமூகத்தின் அறிவு நிலை பரிதாபமாகவேயுள்ளது. சூழ என்ன நடக்கிறது என்பது பற்றிய எந்த அறிவுமில்லாமல் அது வட்ஸ் அப்பிலும் பேஸ்புக்கிலும் மூழ்கிப் போயிருக்கிறது. இன்றைய இளைஞர்கள் இவற்றுக்கூடாக தங்களது அறிவைப் பெருக்கி வருகிறார்கள் என்று புதிய தலைமுறையைத் தாண்டிச் செல்கின்ற தலைமுறையினர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் அறிவை வளர்த்துக் கொள்வதை விட தமது ஆசுவாசங்களை பரிமாறிக் கொள்வதற்கே இந்தத் தலைமுறையினர் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பது, அன்றாட அரசியல் நிகழ்வுகளின் முன்னே அவர்கள் முழிக்கின்ற ஆந்தை முழியிலேயே தெரிகிறது.

சாய்ந்தமருது-கல்முனைப் பிரச்சினையில் அமைச்சர் பைஸர் முஸ்தபாவின் ஈடுபாடு பற்றியோ, 17 வருடங்களின் பின்னர் அஷ்ரபின் மறைவு பற்றி பஷீர் ஷேகுதாவூத் அக்கறை காட்டுவது பற்றியோ, பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பாராளுமன்ற உறுப்பினரல்லாத அரசியல் கட்சியின் தலைவர் ஒருவர் ஜனாதிபதியுடைய கத்தார் விஜயத்தில் பங்கேற்றதன் மர்மம் பற்றியோ இங்கு யாரும் சிந்தித்ததாகத் தெரியவில்லை. கண்முன்னால் நடப்பவைகளை நம்பிக் கெட்டவர்கள் தாம் நமக்குள்ளே அதிகமே தவிர நிகழ்வுகளை அறிவுபூர்வமாக பகுப்பாய்வு செய்து விளங்கிக் கொள்ளும் தரத்தில் புதிய தலைமுறை இல்லை என்பதைத்தான் அண்மைய செல்நெறிகள் எடுத்துக் காட்டுகின்றன.

இவை பற்றியெல்லாம் எழுதுபவர்கள் குறைவாக இருப்பதற்குக் காரணம் வாசிப்பவர்கள் குறைவாக இருப்பது தான். வாசிப்பதுதான் ஒருவனை எழுதுவதற்குத் தூண்டுகிறது. வாசிப்பு இல்லாத பொழுது அவனிடம் அடுத்தவர்களுக்குக் கொடுப்பதற்கு எதுவுமே இருப்பதில்லை. வாசிக்காத ஒரு சமூகம் சுவாசிக்காத மையத்தாகத்தான் இருக்கும். இலங்கையில் வாசிப்புப் பழக்கம் அதிகரித்துள்ள சமூகங்கள் முன்னேற்றமடைந்திருப்பதையும் வாசிப்புக் குறைந்த சமூகங்கள் பின்னடைந்திருப்பதையும் தகவல்களின் ஊடாக அறிந்து கொள்ளலாம்.

உலக அரங்கில் பத்திரிகை விற்பனை குறைவடைந்தாலும் இலங்கையில் அது வளர்ச்சிப் போக்கைக் காட்டுகிறது. வருடாந்த பத்திரிகை விற்பனை 2015 இல் காணப்பட்ட 383.13 மில்லியனில் இருந்து 2016 இல் 411.76 மில்லியனாக அதிகரித்திருப்பதாக இலங்கை மத்திய வங்கி அறிக்கை குறிப்பிட்டுக் காட்டுகிறது. சிங்களப் பத்திரிகைகளின் எண்ணிக்கை 226.49 மில்லியனில் இருந்து 259 மில்லியனாகவும், ஆங்கிலப் பத்திரிகைகளின் எண்ணிக்கை 80.73 மில்லியனில் இருந்து 91.8 மில்லியனாகவும் வருடாந்த அதிகரிப்பைக் காட்டியுள்ளது. ஆனால் தமிழ்ப் பத்திரிகைகளின் எண்ணிக்கை 75.91 மில்லியனில் இருந்து 60.97 மில்லியனாக வீழ்ச்சி அடைந்திருக்கிறது. அதிலும் வாரப் பத்திரிகைகளின் எண்ணிக்கை 21.65 மில்லியனில் இருந்து 19.32 மில்லியனாக சரிந்திருக்கிறது.

உலகில் இணையப் பாவனை நாடுகளில் இலங்கை 37 ஆவது இடத்தில் இருக்கின்றது என்ற வகையில் அச்சு ஊடகங்களில் இருந்து இலத்திரனியல் ஊடகங்களுக்கு மாறியதனால் இந்த விளைவு ஏற்பட்டதாகவும் சொல்லிக் கொள்ள முடியும். (ஒரு எடுகோளாக தமிழ்பேசும் மக்கள் தான் அப்படி மாறியவர்கள் என்றும் கருதிக் கொள்ள முடியும்) ஆனாலும் இணைய வழியிலாவது மக்கள் செய்தித் தாள்களை நாடுகிறார்களா என்பது ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டிய விடயமே. ஒவ்வொருவரதும் துறை சார்ந்த விடயங்களை வாசிப்பதற்கு மேலாக அன்றாட நிகழ்வுகளை அறிந்து கொள்வதற்கு செய்தி மடல்களே உபயோகமாகின்றன. இலத்திரனியலை ஊடகமாகக் கொண்டேனும் எம்மவர்கள் செய்தி மடல்களை வாசிக்கின்றார்களா என்பது இன்னும் புரியாத புதிராகவே இருக்கின்றது.

புதிய தேர்தல் முறை, அரசியலமைப்பின் இடைக்கால அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள், முன்வைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் சாதக பாதகங்கள் என அன்றாடம் நம்மைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகள் தொடர்பில் பல்வேறு ஆக்கங்கள் செய்தி ஊடகங்களில் வெளிவந்த வண்ணமே இருக்கின்றன. ஆனாலும் இவை தொடர்பில் சமூகத்தின் அறியாமையும் இருந்தது இருந்தவாறே இருக்கிறது என்பதில் இருந்து சமூகம் இவற்றை வாசிக்கவில்லை என்ற பலவீனம் வெளிப்படுகிறது. இதனால் யாரும் ஏமாற்றி விட்டுச் செல்லக் கூடிய ஒரு மைய சமூகமாக இலங்கை முஸ்லிம் சமூகம் மாறிவருவது வேதனைக்குரியது.

இந்த சமூகத்தில் வாசிப்புப் பழக்கத்தை உயிர்ப்பிக்கா விட்டால் இந்த சமூகத்தின் சுவாசிப்புப் பழக்கத்தை மறந்து விட வேண்டித் தான் இருக்கும். அறிவைப் பெருக்கி முன்னே செல்லும் சமூகங்களுக்கு மத்தியில் இலங்கை முஸ்லிம் சமூகம் நசுங்கிச் சின்னாபின்னமடைய நேரிடும். எந்தக் காரணத்தைச் சொல்லி தனது இருப்பு பிடுங்கி எடுக்கப்பட்டாலும் கூட அதற்கு நியாயம் கேட்டு அழுவதற்கும் திராணியற்று அது வலுவிழந்து போய்விடும்.

இந்த நிலையில் இருந்து சமூகத்தை மீட்பதற்கு அதனுடைய சுவாசிப்பாக வாசிப்பை மாற்றாதவரை வெற்றி அடைய முடியாது. மக்களுடைய இந்தத் தேவையை கருதித் தான் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறையேனும் மீள்பார்வை மக்களது வீடுகளைத் தட்டுகிறது. வீடு தேடி வந்து, விழிப்படையுங்கள்'' என்று சொல்கிறது. வருடந்தோறும் மீள்பார்வை வாரம் ஒன்றை நிர்ணயித்து மக்களின் காலடிக்கு இந்த விழிப்புணர்வை கொண்டு செல்கிறது. இவ்வருடத்துக்கான மீள்பார்வை வாரம் நவம்பர் 24 – டிசம்பர் 03 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படுகிறது. இந்தக் காலப்பிரிவில் மக்களை வாசிக்கத் தூண்டுங்கள். எழுவாய், எழுந்திருக்கப் பயமிலை என்று அவர்களின் காதுகளில் ஊதுங்கள்.

(சு)வாசிப்புக்களால் உயிர் பெறுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யெமனில் இழைக்கப்பட்டிருப்பது தெளிவான போர்க் குற்றங்களே!



யெமனில் இழைக்கப்பட்டிருப்பது தெளிவான போர்க் குற்றங்களே என்று பிரிட்டன் பத்திரிகையாளரும் லிபரல் ஜனநாயகக் கட்சியின் தலைவருமான ஏஷ்டோன் தெரிவித்துள்ளார். middleast monitor செய்தி நிறுவனம் சமீபத்தில் நடத்திய மாநாடு ஒன்றிலேயே ஏஷ்டோன் இதனைத் தெரிவித்தார்.

சவூதி அரேபியாவின் நெருக்கடி: போர், பதவி மாற்றம் மற்றும் எதிர்காலம் எனும் தலைப்பில் இம்மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

எம்மைப் பாதிக்காத பிரச்சினைகள் எதையும் நாம் பொருட்படுத்தத் தேவையில்லை என்ற மேற்கத்தேய கண்ணோட்டம் மாற வேண்டும். 400 ஆண்டுகளாக இதே கண்ணோட்டத்தையே மேற்கு நாடுகள் பின்பற்றுகின்றன. சிரியாவிலும், லிபியாவிலும் ஆப்கானிஸ்தானிலும், ஈராக்கிலும் இன்று பாரிய மனித அழிவுகள் ஏற்பட்டு வருகின்றன. ஷீஆ-சுன்னி மோதல் பிராந்தியத்தில் பெரும் அழிவை உருவாக்கியுள்ளது.

யெமனில் இன்று போர்க் குற்றங்களில் ஈடுபட்டுள்ள அறபு நாடுகள் இவற்றை உடனடியாக நிறுத்த வேண்டும். இப்போர்க் குற்றங்களில் ஈடுபட்டுள்ள நாடுகள் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் ஏஷ்டோன் அங்கு வலியுறுத்தினார்.

யெமனில் இதுவரை 10,000 பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளதோடு, இலட்சக்கணக்கான மக்கள் ஊனமுற்றுள்ளனர். தொடர்ந்தும் இரண்டரை ஆண்டுகளுக்கு மேலாக யெமன் அறபு நாடுகளின் வான்வழித் தாக்குதல்களுக்கு இலக்காகி வருவது கவலையளிப்பதாகவும் ஏஷ்டோன் மேலும் தெரிவித்துள்ளார்.

# பிராந்திய நெருக்கடிக்கு சவூதியே காரணம்

**கட்டார் வெளிவிவகார அமைச்சர்**



இன்று நிகழும் அரசியல் மாற்றங்கள் மத்திய கிழக்கில் இருண்ட யுகங்களைப் பிறப்பிக்கப் போகின்றது. இதற்கு மூல காரணம் ஆபத்தான அதிகார விளையாட்டில் ஈடுபட்டுள்ள சவூதி அரேபியாவே என்று கட்டார் வெளிவிவகார அமைச்சர் ஷெய் முஹம்மத் பின் அப்துர்ரஹ்மான் அஸ்ஸானி தெரிவித்துள்ளார்.

பொறுப்பற்ற விதத்தில் செயல்படும் அறபு நாடுகள், குறிப்பாக பஹ்ரைன், எகிப்து, எமிரேட்ஸ், சவூதி என்பன பிராந்தியத்தில் பெரும் பதட்டத்தை உருவாக்கியுள்ள என்று அப்துர் ரஹ்மான் மேலும் தெரிவித்தார்.

ராஜாங்க செயலாளர் ரைக் டிலர்சன் மற்றும் அமெரிக்க வெளிநாட்டமைச்சரை சந்தித்த பின்னர் வொஷிங்டனில் உரையாற்றிய போதே அப்துர் ரஹ்மான் இவ்வாறு தெரிவித்தார்.

# சர்வதேசப் பார்வை

# 70 வீத சொத்துக்களை ஒப்படைத்தால் விடுதலை உறுதி



சர்வதேச புகழ்பெற்ற Financial Time சஞ்சிகை முஹம்மத் பின் ஸல்மான் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டோருடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகத் தெரிவித்துள்ளது. ஊழல் குற்றச்சாட்டின் பேரில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள சவூதி கோடீஸ்வரர்கள் தமது மொத்த சொத்தில் 70%மானவற்றை அரசாங்கத்திடம் ஒப்படைத்து விட்டால் அதற்குப் பகரமாக அவர்கள் விடுதலை செய்யப்படுவர் என்று முஹம்மத் அறிவித்துள்ளார்.

தீர்ந்து கொண்டிருக்கும் நாட்டின் திறைசேரியையும் சரிந்து கொண்டிருக்கும் பொருளாதாரத்தையும் ஈடுகட்டவே இம்முயற்சியில் அவர் ஈடுபட்டுள்ளார் என்று பைனான்ஷியல் டைம்ஸ் எழுதியுள்ளது.

இதேவேளை, வோல் ஸ்ரீட் ஜேர்னல் எனும் அமெரிக்க பத்திரிகை, முஹம்மத் பின் ஸல்மான் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளோரின் 1200 வங்கிக் கணக்குகளை முடக்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. இதன் மூலம் 800 பில்லியன் டொலர் பணம் மற்றும் சொத்துக்களை சவூதி அரசாங்கம் கைப்பற்றியுள்ளது எனவும் அப்பத்திரிகை எழுதியுள்ளது.

"செல்வங்களைத் திருப்பிக் கொடுங்கள் சுதந்திரமாக வீடு செல்லலாம்" என்பதே இப்போதைக்கு அரசாங்கம் முன்வைத்துள்ள கோரிக்கையாகும். தற்போது 100 பில்லியன் அமெரிக்க டொலர் ஊழல் மோசடிகள் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆயினும், அரசாங்கத்தின் இலக்கு 300 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

வலீத் பின் தலால், முதைப் பின் அப்துல்லாஹ் போன்றவர்கள் சவூதியின் முன்னணி கோடீஸ்வரர்கள் மட்டுமன்றி, உலகக் கோடீஸ்வரர்களின் வரிசையில் இடம்பெறுபவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# முகாபே பதவி விலகி விட்டார்



சிம்பாவெ ஜனாதிபதி முகாபே பதவி விலக வேண்டும் அல்லது நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்கொள்ள நேரிடும் என்ற எச்சரிக்கைக்கான காலக்கெடு முடிவடைந்துள்ள நிலையில், நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்கொண்டு, பதவியிலிருந்து நீங்கியுள்ளார்.

சிம்பாவேயின் அரசியல் ஸ்திரமின்மைக்கு முகாபேயை குற்றம்சாட்டியுள்ள ஆளும்கட்சி, அவர் உடனடியாகப் பதவி விலக வேண்டும் எனத் தெரிவித்திருந்தது. 37 ஆண்டுகளாக சிம்பாவேயின் ஆட்சியாளராக இருந்த முகாபே, தற்போது பதவி விலகும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். அரசியலமைப்பு அதிகாரங்களை அவரது மனைவி தவறாகக் கையாண்டுள்ளார் என்றும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

தற்போது சிம்பாவேயின் தலைவர் யார் என்ற கேள்வி எழுந்துள்ளது. தேசிய அரசியல் சபை கொண்டுவந்துள்ள தீர்மானத்தின் பிரகாரம் முகாபே பதவி விலகியுள்ளார். சிம்பாவே நீண்ட காலமாக கடும் பொருளாதாரப் பின்னடைவுக்கு உட்பட்டு வந்துள்ளது. "முகாபே இதற்கு மேல் தப்ப முடியாது. அவரது விளையாட்டு முடிந்து விட்டது. அவரும் அவரது மனைவியும் அதிகாரத்திலிருந்து இறக்கப்பட வேண்டும்" என ஆளும் கட்சி தெரிவித்திருந்தது.

நவம்பர் 15 இராணுவம் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர் முகாபே வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார். தற்போது அவர் 37 ஆண்டு எதேச்சதிகார ஆட்சியின் பின்னர் பதவி விலகிச் சென்றுள்ளார்.

# ரோஹிங்யப் பெண்கள் திட்டமிட்ட முறையில் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டுள்ளனர்



வொஷிங்டனைத் தளமாகக் கொண்ட மனித உரிமைக் கண்காணிப்பகம் ரெக்கைன் மாநிலத்தில் ரோஹிங்யப் பெண்கள் திட்டமிட்ட முறையில் பாலியல் பலாத்காரத்திற்கு உட்பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளது. வொஷிங்டனில் இது குறித்து அவ்வமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், மியன்மார் இராணுவத்தை குற்றம் சுமத்தியுள்ளது.

இராணுவம் பெண்களையும் இளம் யுவதிகளையும் கூட்டாக வன்புணர்ந்துள்ளது என்பதை நிறுவும் சாட்சியங்களை அந்த அறிக்கை பதவுசெய்துள்ளது. ரெக்கைனலிருந்த 12 இலட்சம் ரோஹிங்யர்களில் சுமார் 10 இலட்சம் பேர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். குழந்தைகள் பலர் குரூரமான வழிமுறைகளில் கொல்லப்பட்டுள்ளனர்.

தற்போது பங்களாதேஷில் அதிகளாகத் தஞ்சமடைந்துள்ள ரோஹிங்யர்கள் நாடு கடத்தப்பட்டு வருவதாகவும் பெண்கள் பாலியல் தொழிலில் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

# இஸ்ரேலும் ஐக்கிய அறபு அமீரகமும் இரு சகோதர நாடுகளாகும்

**- சிரேஷ்ட இராணுவ ஜெனரல்**



இஸ்ரேலும் அறபு அமீரகமும் இரு சகோதர நாடுகள் என்று அபுதாபியின் சிரேஷ்ட இராணுவ அதிகாரி அப்துல்லாஹ் அல் ஹாஷிமி தெரிவித்துள்ளார். ஐக்கிய அறபு அமீரகத்தின் இராணுவ கொள்ளளவு குறித்து வினா எழுப்பப்பட்ட போதே விமானப் படை உயர் அதிகாரியான அப்துல்லாஹ் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய அமீரகத்திற்கு ஆயுதம் வழங்குவது குறித்து அமெரிக்கா யோசிக்க வேண்டியதில்லை. ஏனெனில், நாம் அமெரிக்காவின் நட்பு நாடு. அதேவேளை, இஸ்ரேலும் எமது நட்பு நாடாகும். அமெரிக்கா எமது பழைய சகோதரர் என்றால், இஸ்ரேல் எமது புதிய சகோதரர். நாம் இஸ்ரேலைப் பயமுறுத்திப் பயனில்லை. அதேபோன்று எமது நாட்டுக்கும் இஸ்ரேல் அச்சுறுத்தல் இல்லை. இவ்வாறு அமீரகத்தின் முன்னணி விமானமோட்டியான அப்துல்லாஹ் ஹாஷிமி தெரிவித்தார்.

# அம்மானில் தூதகரத்தை மீளத் திறக்கவும் ஜோர்தானுக்கு இஸ்ரேல் அறிவுரை

ஜோர்தான் தலைநகர் அம்மானில் இஸ்ரேலிய தூதரகத்தை மீளத் திறப்பதற்கு ஜோர்தான் அரசு இணங்காவிட்டால் செங்கடலிலிருந்து சாக்கடலுக்கு அனுப்பப்படும் தண்ணீர் திட்டம் நிறுத்தப்படும் என இஸ்ரேல் எச்சரித்துள்ளது.

மூன்று மாதங்களுக்கு முன்பாக அம்மானில் இரு ஜோர்தானியப் பிரஜைகள் இஸ்ரேலிய அதிகாரியினால் கொல்லப்பட்டதை அடுத்து அம்மானிலிருந்த இஸ்ரேலிய தூதரகம் மூடப்பட்டது. மீளவும் அதனைத் திறக்குமாறு நெடன்யாஹூவின் அரசாங்கம் ஜோர்தான் அரசாங்கத்தை அழுத்தி வருகின்றது.



சாக்கடலை ஊடறுத்துச் செல்லும் குடிநீர்த் திட்டம் டெல்அவிவ், ராமல்லாஹ், அம்மான் மூன்றினதும் பொது நலன்களை அடிப்படையாகக் கொண்டது. அதில் சாக்கடலையும் செங்கடலையும் இணைக்கும் கால்வாய் தோன்டும் திட்டமும் உள்ளடங்குகின்றது. இக்கால்வாய் திட்டத்தினூடாக நீர்மின் உற்பத்தியை அதிகரிப்பதும் ஒரு நோக்காகும். அம்மான் அடிபணியா விட்டால் பொருளாதார ரீதியான இழப்பு ஏற்படும் என இஸ்ரேல் எச்சரித்துள்ளது.

# வொஷிங்டனில் உள்ள PLO அலுவலகம் மூடப்படுகின்றது



நீண்டகாலமாக வொஷிங்டனில் இயங்கி வந்த பலஸ்தீன் விடுதலை அமைப்பின் அலுவலகத்தை மூடுமாறு ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார். இதனால் ஆத்திரமடைந்துள்ள PLO அமெரிக்காவுடனான அனைத்து வகை உறவுகளையும் துண்டித்துக் கொள்ளப் போவதாக அறிவித்துள்ளது.

வொஷிங்டனில் தமது அலுவலகத்தை தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கு அமெரிக்கா அனுமதியளிக்கவில்லை எனின், அமெரிக்காவுடனான சகல உறவுகளையும் பலஸ்தீன் அதிகார சபை துண்டித்துக் கொள்ளும் என பலஸ்தீன் விடுதலை இயக்கத்தின் செயலாளர் ஸாஈத் அரக்கத் தெரிவித்துள்ளார். பலஸ்தீனர்களுக்கு எதிரான போர்க் குற்றங்களில் ஈடுபட்ட இஸ்ரேலிய அதிகாரிகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் வைத்து விசாரிக்க வேண்டும் என PLO வேண்டுகோள் விடுத்ததை அடுத்தே வொஷிங்டன் PLO வின் அலுவலகத்தை மூடப் போவதாக அச்சுறுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



**சிரியா குழு வாதத் தீயில் எரிகின்றது. ஈராக் ஷீஆ-சுன்னி மோதலால் அழிகின்றது. யெமன் எல்லாவற்றையும் இழந்து இன்னொரு எதியோப்பியாவாக காட்சி தருகின்றது. தனிமைப்படுத்தப்பட்ட கட்டார் சிறுகச் சிறுக சிதிலமாகி வருகின்றது. முர்ஸிக்கு எதிராக ஸீஸியை ஆட்சிக் கட்டிலில் அமர்த்தியதால் எகிப்து தொடர்ந்தும் மனிதப் படு கொலைகளின் வேட்டைக் காடாய் மாற்றப் பட்டுள்ளது. இப்போது லெபனான். அடுத்த நாடு எது?**

# ஒரு முடிவின் ஆரம்பம்

## சியோனிஸ சதிவலையில் சிக்கித் திணறும் சவூதி அறேபியா மாபெரும் அழிவை எதிர்பார்த்து நிற்கும் மத்திய கிழக்கு

லெபனான் பிரதமர் ஹரீரியின் பதவி விலகலை அடுத்து மத்திய கிழக்கில் பதட்டம் அதிகரித்துள்ளது. போர் மேகங்கள் சூழும் ஆபத்து நேர்ந்துள்ளது. முஹம்மத் பின் ஸல்மானின் ஒவ்வொரு நகர்வும் ஒட்டுமொத்த அறேபியாவுக்கும் புதைகுழி தோண்டுகின்றது. லெபனான் மீதான தாக்குதலுக்குத் தயாராகி வரும் இஸ்ரேல், முழு மத்திய கிழக்கையும் மீண்டும் ஒரு முறை வேட்டைக் காடாக மாற்றி வருகின்றது.

ஹிஸ்புல்லாஹ் மற்றும் ஈரான் முகவர்கள் தனது உயிருக்கு அச்சுறுத்தல் என்று கூறி ஹரீரி பதவி விலகியமை மத்திய கிழக்கில் ஒரு போர்ப் பீதியை உருவாக்கியுள்ளது. ஹரீரி இவ்வாறு கூறும்படி நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளார் என்ற விமர்சனங்கள் பரவலாக எழுந்துள்ளன. ஹிஸ்புல்லாஹ்வை இஸ்ரேல் இலக்கு வைப்பதற்கான களம் இதன் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது.

லெபனானில் தன்னிச்சையாகச் செயல்படும் ஹிஸ்புல்லாஹ் ஈரானின் கைக்கூலி என்பதும் சிரியாவில் மனிதப் படுகொலைகளுக்குப் பின்னணியில் உள்ளவர்கள் என்பதும் எவ்வளவு பெரிய உண்மையோ, அதுபோல சிரியாவின் ஷீஆ ஆட்சியை அகற்றும் நோக்கு சவூதிக்கு கிஞ்சிற்றும் இல்லை என்பதும் பெரிய உண்மையாகும்.

யெமனைக் கைப்பற்றியுள்ள ஹூதிகள் ஈரானின் இன்னொரு கூலிப் படை என்பது எவ்வளவு பெரிய உண்மையோ, அதே அளவுக்கு யெமனில் ஒரு ஸ்திரமான ஆட்சியை உருவாக்குவதில் சவூதிக்கு இஷ்டமில்லை என்பதும் பெரிய உண்மையாகும்.

ஏனெனில், ஏற்கனவே யெமனுக்குச் சொந்தமான பல மில்லியன் கியூபிக் அடி எண்ணெய் வயல்களை சவூதி அறேபியா ஆக்கிரமித்துள்ளது. ஸ்திரமான அரசாங்கம் யெமனில் ஏற்படுவது சவூதியின் நலன்களுக்கு எதிரானது என்பதைக் கணித்து வைத்துள்ள அது, ஒரு நீடிக்கும் அமைதிப் போரை நடாத்தி வருகின்றது. போர் முனை அனுபவம் எதுவும் அற்ற சவூதியர்கள் வெளியேறும் வழி தெரியாமல் தடுமாறி நிற்கின்றனர்.

சமீபத்தில் யெமனில் சவூதி அறேபியா மேற்கொண்ட போர்க் குற்றங்கள் குறித்த அறிக்கையொன்று தயாராகியுள்ளது. 10,000 சிவிலியன்கள் சவூதி தலைமையிலான படையினால் கொல்லப்பட்டுள்ளனர். இலட்சக் கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். யெமனுக்கான அனைத்துப் போக்குவரத்து மார்க்கங்களையும் சவூதி அறேபியா கட்டுப் படுத்தியுள்ளதால் பாரிய மனிதாபிமான நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

கடந்த மாதம் மாத்திரம் 716 மனித உரிமை மீறல் சம்பவங்கள் யெமனில் பதிவாகியுள்ளது. மத்திய கிழக்கின் சோமாலியாவாக அது மாறி வருகின்றது. இரண்டரை ஆண்டுகளுக்குப் பின்னரும் ஷீஆ ஹூதிகளிடமிருந்து குறைந்தது தலைநகரைக் கூட சவூதியால் மீட்ட முடியவில்லை.

லெபனானின் ஹிஸ்புல்லாஹ் சவூதியின் பாதுகாப்புக்கு நேரடி அச்சுறுத்தல் அல்ல. அவர்கள் இஸ்ரேலின் பாதுகாப்புக்கே அச்சுறுத்தல் என லெபனானின் அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சமீபத்தில் பட்டத்துக்குரிய இளவரசர் இஸ்ரேலுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளை அடுத்தே இத்தனை அமளிதுமளிகளும் அரசியல் புரளிகளும் மேற்கிளம்பியுள்ளன.

பிராந்தியத்தில் ஷீஆ ஆதிக்கத்தையும் அதன் அதிகார மோகத்தையும் எதிர்ப்பதாகக் கூறிக் கொள்ளும் சவூதி, ஈராக்கில் அதே ஷீஆக்களுடன் சமரசம் செய்துகின்றது. ஈராக்கின் சர்ச்சைக் குரிய ஷீஆ தலைவர் முக்ததா சத்ரை ரியாதுக்கு அழைத்து பேச்சுவார்த்தை நடத்துகின்றது.

இன்று பட்டத்துக்குரிய இளவரசர் எடுக்கும் ஒவ்வொரு அரசியல் தீர்மானமும் வொஷிங்டன் மற்றும் டெலஅவிவின் அனுசரணையோடுதான் அமுல்படுத்தப்படுகின்றது. அவரது அரண்மனையில் வீற்றிருக்கும் இரண்டு அமெரிக்கர்களும் ஒரு பிரிட்டிஷ்காரரும் சியோனிஸ ஆதரவு முகவர்கள். அவர்களே இன்று சவூதியின் பிரதான ஆலோசகர்கள்.

பெற்றோலியப் பொருளாதாரத்திலிருந்து உல்லாசக் கைத்தொழில் பொருளாதாரத்திற்கு நாட்டை நகர்த்தப் போவதாக முஹம்மத் அறிவித்துள்ளார். ஏற்கனவே சவூதிப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருந்து வருவது அரம்கோ பெற்றோலிய கம்பனியாகும். அதில் 25%மான பங்குகளை அமெரிக்காவுக்கு விற்குமாறு ட்ரம்ப் இப்னு ஸஊத் குடும்பத்தை அழுத்தியுள்ளார். இது குறித்த ஒப்பந்தங்கள் ஏற்கனவே இடம்பெற்று விட்டன.

சவூதியின் பொருளாதாரம் வேகமாகச் சரிந்து வருகிறது. 2018 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் அதன் துண்டு விழும் தொகை 32.4 பில்லியன் அமெரிக்க டொலர் என சவூதி அறிவித்துள்ளது. வேகமாகச் சரிந்து வரும் பொருளாதாரத்தை ஈடுகட்டவே பெரும் பண முதலைகளும் வணிகப் புள்ளிகளும் கோடீஸ்வரர்களும் கைதுசெய்யப்பட்டு, கம்பியெண்ணி வருகின்றனர். அவர்களிடமிருந்து 70%மான சொத்துக்களைப் பறிமுதல் செய்துகொண்டு அவர்களை விடுவிக்க முடியும் என்று முஹம்மத் பின் ஸல்மான் அறிவித்துள்ளார். இந்த 'டீலை' தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளோர் ஏற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

அதே ஆட்சிக் குடும்பத்தைச் சேர்ந்த கொள்ளையர்களால் சூறையாடப்பட்ட செல்வத்தைச் சேர்த்து பொருளாதாரத்தை ஈடு கட்டும் வங்குரோத்து நிலைக்கு அந்நாடு வந்துள்ளது. இன்னொரு புறம் பின் ஸல்மான் தனது அதிரடி நடவடிக்கை மூலம் ஊழலை ஒழிக்க விரும்புகின்றாரா அல்லது பணம் சம்பாதிக்க விரும்புகின்றாரா என்ற கேள்வியையும் ஊடகங்கள் எழுப்பியுள்ளன.

சவூதி மன்னர் குடும்பத்திற்குள் நீண்ட காலமாக உள்ளகப் பகை முரண்பாடுகள் பனிப்போராய் நீடிப்பது பரம ரகசியம். இப்போது அம்மோதல்களை இஸ்ரேல் ஆதரவு ஆலோசகர்கள் பற்றி எரிய வைத்துள்ளனர். ஒரு ஆட்சி பீடத்தில் எப்போது உள்முரண்பாடுகள் தலைதூக்குமோ அப்போதே அது ஆட்டம் காண ஆரம்பித்து விடும். இதற்கு உலக வரலாற்றில் ஒரு நூறு உதாரணங்களைக் குவிக்கலாம்.

உஸ்மானியப் பேரரசை சிதைக்க எண்ணிய யூதர்கள் இதே உத்தியைத்தான் கையாண்டனர். தமது குழியை தாமே தோண்டிக் கொள்ளும் ஒரு நாடோடிக் குடும்பத்தின் முதிர்ச்சியற்ற அரசியல் தீர்மானங்கள் நெடன்யாஹூவினாலும் ட்ரம்பினாலும் மெச்சப்படுவதை நாம் மறந்து விடக் கூடாது.

சவூதி மன்னரின் அரசியல் நகர்வுகளில் மற்றொன்று; பலஸ்தீன் தொடர்பான அவரது ஆணவமான நிலைப்பாடு. ஏழு தசாப்தங்களாக பலஸ்தீன் பிரச்சினை குறித்து ஐ.நா.வில் ஒரு வார்த்தை பேசாத ஒரே அறபு நாடு சவூதிதான். மறுதலையாக அது ஆக்கிரமிப்பு இஸ்ரேலுடன் கள்ள உறவுகளைப் பேணி வந்தது. இன்று இஸ்ரேலும் மத்திய கிழக்கில் ஒரு நாடுதான். அதனை ஏற்றுக் கொண்டு தத்தமது தலைநகர்களில் இஸ்ரேலின் தூதரகத்தைத் திறக்க வேண்டியதுதான் என்று வாய் கூசாமல் பேசுகின்றது.

இஸ்ரேலுடன் அரசியல் பொருளாதார உறவை சுமுகமாக்கும் முதல் நாடு சவூதிதான் என நெடன்யாஹூ புகழ்ந்துரைத்துள்ளார். (பார்க்க ஹாரட்ஸ் பத்திரிகை)

இன்று ஹமாஸை PLO விற்கு அடிபணிய வைத்து, அமெரிக்கா சியோனிஸத்திற்கு ஆதரவாக வரைந்துள்ள சமாதானத் திட்டத்திற்கு அப்பாஸ் ஆதரவளிக்க வேண்டும். இல்லையெனில் அவர் பதவி விலக வேண்டும் என்று ஸல்மான் எச்சரிக்கின்றார்.

இவ்வளவு கொடூரமான சியோனிஸ ஆதரவுப் போக்கை இந்நாடு ஏன் கையாள்கின்றது? ஏழு தசாப்தங்களாக தமது வாசற்படியில் அதே மொழியை, கலாசாரத்தை, மதத்தைப் பகிர்ந்து கொள்ளும் பலஸ்தீனர்களை கொத்தடிமைகளாக நடத்தி வரும் இஸ்ரேலுக்கு அறபு சியோனிஸ்டுகள் இத்தனை ஆதரவினை அளிப்பதேன்?

1967 போரின்போது ஒட்டுமொத்த பலஸ்தீனையும் இஸ்ரேல் கைப்பற்றியது. 2017 மத்திய கிழக்கின் ராஜதந்திரப் போரில் இஸ்ரேல் முழு மொத்த மத்திய கிழக்கையுமே ஆக்கிரமித்து வருகின்றது என்பதுதான் கள உண்மையாகும்.

சிரியா குழுவாதத் தீயில் எரிகின்றது. ஈராக் ஷீஆ-சுன்னி மோதலால் அழிகின்றது. யெமன் எல்லாவற்றையும் இழந்து இன்னொரு எதியோப்பியாவாக காட்சி தருகின்றது. தனிமைப்படுத்தப்பட்ட கட்டார் சிறுகச் சிறுக சிதிலமாகி வருகின்றது. முர்ஸிக்கு எதிராக ஸீஸியை ஆட்சிக் கட்டிலில் அமர்த்தியதால் எகிப்து தொடர்ந்தும் மனிதப் படுகொலைகளின் வேட்டைக் காடாய் மாற்றப்பட்டுள்ளது. இப்போது லெபனான். அடுத்த நாடு எது?

மத்திய கிழக்கை இரத்த வெள்ளத்தில் ஆழ்த்தி, வேடிக்கை பார்க்கத் துடிக்கும் இஸ்ரேலுக்கும் அமெரிக்காவுக்கும் சவூதி இத்தனை ஆதரவளிப்பதேன்? மத்திய கிழக்கு பாரிய அழிவொன்றை சந்திக்கக் காத்திருப்பது போலவே தெரிகின்றது.

இம்முறை தென்மேற்கு ஆசியாவின் அரசியல் பொருளாதார வீழ்ச்சி மிகப் பாரியதாக இருக்கும். எதிரிகள் மிக ஆழமாகவும் அகலமாகவும் அதைத் திட்டமிட்டு வருகின்றனர். அறபுலகின் ஒட்டுமொத்தத் தோல்வியினதும் இறுதி விளைவாக அமெரிக்க இஸ்ரேலிய நலன்கள் பாதுகாக்கப்படும். ஸீஸியின் எகிப்தும் பஹ்றைனும் அறபு எமிரேட்ஸும் ஏற்கனவே இஸ்லாமிய அடையாளத்தை இழந்து நிற்கின்றன. இறுதியாக பின் ஸல்மான் பிரகடனம் செய்துள்ள 'மிதவாத இஸ்லாமியக் கோசம்' வெறும் கோஷமல்ல. அதற்குப் பின்னால் பாரிய சியோனிஸத் திட்டம் உள்ளது. மத்திய கிழக்கின் ஆட்சியாளர்கள் அறபு சியோனிஸ்டுகளாய் உருமாறி, இஸ்லாத்தை நவீனமயப்படுத்தும் திட்டத்தில் வீழ்ந்துள்ளனர்.

ஒட்டுமொத்தமாக இவற்றை நோக்கும் போது மிக மோசமான முடிவொன்றின் ஆரம்பம் நிகழ்வதாகவே தெரிகின்றது. முடிவற்ற ஆரம்பங்கள் (Endless Begining) போல, எல்லா முடிவுகளுக்கும் ஆரம்பங்களும் உள்ளன. அதுதான் இன்று மத்திய கிழக்கில் நிகழ்கின்றது.

# பொஸ்பரஸ் கரையினிலே...

## துருக்கியின் வீழ்ச்சியும் எழுச்சியும் - 21

''நாம் உஸ்மானியர்களின் வாரிசுகள். எமது முன்னோர்களை யிட்டு நாம் பெருமைப்படுகின்றோம். யூதர்களை நாம் முஸ்லிம் ஸ்பெய்னில் பாதுகாத்தோம். ஆனால், இன்றோ அவர்கள் பலஸ்தீனில் சிறுவர்களையும் பெண்களையும் கொன்று குவித்து அவர்களின் வாழ்விடங்களை துவம்சம் செய்கின்றனர். அவர்கள் செய்யும் ஈவிரக்கமற்ற கொடூரங்களை நாம் இதற்கு மேலும் மௌனமாய் இருந்து பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம்.''

*(ரஜப் தையிப் அர்தூகான் 2011, ஜூன்)*

### இராணுவத்தை வெற்றி கொண்ட அரசியல் வெல்திறன்

1982 இல் துருக்கிய இராணுவ ஜெனரல்கள் ஒன்றுகூடி ஒரு புதிய அரசியலமைப்பை அவசர அவசரமாக உருவாக்கினர். ஜனநாயக மாற்றத்தை நோக்கி ஓர் எட்டுக் கூட எடுத்து வைக்க முடியாத வகையில் இராணுவத்தின் பிடியை இறுக்குவதே அதன் முழு நோக்கம்.

சுமாராக, இஸ்லாமியவாதிகளின் தலைகளின் மேலே தொங்கவிடப்பட்ட ஒரு கொலைக் கத்தியாகவே அது காட்சி தந்தது. இஸ்லாத்திற்கு ஆதரவான சீர்திருத்தம் குறித்து யாரேனும் பாராளுமன்றத்தில் குரலெழுப்பினால் இராணுவம் இந்த அரசியலமைப்பைக் காட்டியே அவர்களை அச்சுறுத்தி வந்தது.

முஸ்தபா கமால் 1930 களில் கொண்டு வந்த அரசியலமைப்பை மீளவும் பலப்படுத்துவதாகவே 1982 அரசியலமைப்பு கட்டமைக்கப்பட்டது. இராணுவமே மதச்சார்பின்மையின் காவலாளிகள். இராணுவமே தீர்மானிக்கும் சக்தி. இராணுவமே அரசாங்கத்தின் காப்பரண். கமாலிஸத்தை வாழ வைக்கும் வரலாற்றுக் கடமையைச் சுமந்த துரோகிகளின் கூடாரம்.

எதிர்க்கட்சிகளான மக்கள் குடியரசுக் கட்சி, தேசிய செயல்பாட்டுக் கட்சி போன்ற மதச்சார்பற்ற அரசியல் கட்சிகளுக்குக் கூட மோத முடியாத எதேச்சதிகார இராணுவத்திடமிருந்தது. அவர்களின் தொலைதூர இயக்கியோ (Remote Controle) பென்டகனில் இருந்தது. இதுதான் உஸ்மானிய வீழ்ச்சிக்குப் பிந்திய 8 தசாப்த துருக்கியின் அரசியல் பயணம்.

இத்தகைய நிலையில் கடந்த கால கறுப்புப் பக்கங்களை கசக்கி எறிந்து, இராணுவத்தின் எதேச்சதிகாரத்தை கீழே வீழ்த்தி, மக்களாணைப்படி இயங்கும் ஜனநாயகத்தைக் கட்டியெழுப்பல் பெரும்பாலான துருக்கியர்களுக்கு விநோதமான கனவாகவே தோன்றியது. இவ்வாறான அச்சம் நிறைந்த அரசியல் சூழமைவில் அர்தூகான் அரசியலமைப்பிலோ இராணுவக் கட்டமைப்பிலோ கை வைக்கவில்லை. பொருளாதாரத்தை முன்னேற்றுவதிலேயே அவரது கவனம் குவிந்தது.

துருக்கியின் முன்னாள் பிரதமரும் வெளிநாட்டு அமைச்சரும் புத்திஜீவியுமான அஹமத் தாவூதுக்லூ நீதிக்கும் அபிவிருத்திக்குமான அரசாங்கம் முதற் 10 ஆண்டுகளில் ஈட்டிய சாதனைகளாக மூன்றைக் குறிப்பிடுகின்றார். அதில் முதலாவது, பிரமிக்கச் செய்யும் பொருளாதார வளர்ச்சி. இரண்டாவது ஐரோப்பாவில் தலைசிறந்த ஜனநாயக மாற்றம். மூன்றாவது, யாருடனும் பகைக்காத உறுதியான ஒரு வெளிநாட்டுக் கொள்கை.

ஆட்சியைக் கையேற்று முதல் எட்டு ஆண்டுகளிலும் பொருளாதார வளர்ச்சியிலேயே AKP அரசாங்கம் முழுக் கவனம் குவித்தது. (துருக்கியின் பொருளாதார சாதனை குறித்து இன்னொரு பத்தியில் நோக்குவோம்.) குறிப்பிடத்தக்க பொருளாதார சாதனைகளை ஈட்டிய பின்னர் அர்தூகானின் கவனம் அரசியலமைப்பிலும் இராணுவக் கட்டமைப்பிலும் திரும்பியது.



வருடாந்தம் தேசிய பாதுகாப்புச் சபையின் கூட்டம் முப்படைகளின் தளபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சர், பிரதமர், ஜனாதிபதி உள்ளடங்கலான உயர் அதிகாரிகளின் கீழ் நடைபெறும். துருக்கிய இராணுவம் மிகவும் கொடியது. எகிப்திய இராணுவம் போன்று மக்களைக் கொல்வதில் அதற்குத் தனி அனுபவம் உண்டு. அல்ஜீரிய, தூனிசிய இராணுவம் போன்று அதற்குக் குறைந்தபட்ச மனிதாபிமானமும் இல்லை. இஸ்லாத்தின் எழுச்சிக்கு துருக்கியில் முதலில் முட்டுக்கட்டை போடுபவர்கள் இராணுவம்தான். அவர்களை இயக்கும் எஜமானர்கள் அவர்களுக்கிடும் முதல் கட்டளையும் அதுதான்.

இராணுவத்தின் எல்லை கடந்த அதிகாரங்களை சிறிது சிறிதாகக் குறைக்கும் ஒரு மூலோபாயம் குறித்து அர்தூகான் சிந்திக்கத் தொடங்கினார். ஒவ்வொரு வருடமும் தேசிய பாதுகாப்புச் சபை கூட்டம் நடப்பதற்கு முன்பதாகவே இந்த ஆண்டில் களையெடுக்கப்பட வேண்டியவர்கள் யார் என்பதை கவனமாகப் பட்டியல்படுத்தினார் அவர். ஓரளவு வயது சென்ற தீவிர மதச்சார்பின்மை கொண்ட, அமெரிக்க இஸ்ரேலிய ஆதரவான, இஸ்லாத்திற்கு எதிரான உயர் இராணுவ அதிகாரிகளை அர்தூகான் பட்டியலிடத் தொடங்கினார். மேஜர் ஜெனரல்கள் பலரையும் ரியர் அட்மிரல் பதவி வகித்த பலரையும் ஓய்வூதியத்தையும் அன்பளிப்புத் தொகையையும் அறிவித்து சிறிது சிறிதாக பதவி நீக்கம் செய்யத் தொடங்கினார்.

2006 ஆம் ஆண்டிலிருந்தே இந்த இராணுவக் களையெடுப்பு களைகட்டியது. 2010 இல் அதிரடியான பல நடவடிக்கைகளில் அர்தூகான் இறங்கினார். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிந்தோட்டை கலவரம்

## களத்திலிருந்து ஒரு அலசல்

• முஹம்மத் பாதுஷா

நான்கு கிராம சேவகர் பிரிவுகளில் சிங்களக் குடும்பங்கள் உட்பட சுமார் 2000 குடும்பங்கள் வாழும், கிந்தோட்டைப் பிரதேசத்தில் இடம்பெற்ற ஒரு மோட்டார் சைக்கிள் விபத்து தேசிய மட்டத்தில் பிரதான பேசுபொருளாக மாறும் அளவுக்கு ஒரு இனக்கலவரமாகவே மாறி விட்டது.

மிகவும் அபூர்வமாக ஒரு சில சம்பவங்கள் நடந்தாலும் உடனடியாக அப்பிரச்சினை தீர்க்கப்பட்டு சுமூக நிலைக்குத் திரும்பும் அளவுக்கு பக்குவப்பட்டிருந்த ஒரு ஊரில் இப்படி ஒரு பேரவலம் ஏற்பட்டது உண்மையிலே கவலைக்குரிய ஒரு விடயமாகும். இச்சிறு சம்பவம் பூதாகரமாக்கப்படுவதற்கு சமூக வலைதளங்களும், இனவாதத்தினை வெளிப்படையாகவே போதிக்கும் சில பௌத்த காவிகளுமே காரணமாகும்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற ஒரு வீதி விபத்தே இப்பிரச்சினைக்கு மூல காரணமாக இருந்தது; என்றாலும் இதற்குப் பின்னால் அரசியல் உள்நோக்கங்களும் இல்லாமல் இல்லை என்பது ஊரிலுள்ள புத்திஜீவிகளினதும், பொது மக்களினதும் அபிப்பிராயமாகும்.

பாதையில் சென்று கொண்டிருந்த ஒரு முஸ்லிம் தாயினையும், அவரது சிறிய மகளையும் மோட்டார் சைக்கிளில் வேகமாக வந்த ஒரு சிங்கள இளைஞன் முட்டி மோதியுள்ளார். குறித்த இளைஞன் அவ்வேளை சாராயம் அருந்தியிருந்ததாக சந்தர்ப்பத்தின் போது அங்கிருந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

வழமையாகவே இச்சிங்கள இளைஞன் மக்களை எரிச்சலடையச் செய்யும் வகையிலும், பிரச்சினையொன்றை வலுக்கட்டாயமாகவே உருவாக்கிக் கொள்வதற்கும் இவ்வாறு மிக வேகமாகப் பயணிப்பதனை தனது வாடிக்கையாகக் கொண்டவன். இவனைப் போலவே வம்புக்கிழுப்பதற்கென்றே சில சிங்கள இளைஞர்கள் பாதைகளில் மிகப் பயங்கர வேகத்துடன் பயணிப்பது தினமும் நடைபெறும் ஒரு விடயமானாலும் அதனை ஊரிலுள்ள முஸ்லிம்கள் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை.

மறுபக்கம், முஸ்லிம்களும் பாதைகளில் நிறைந்து கொண்டு போக்குவரத்திற்கு சில நேரங்களில் இடைஞ்சலாக நடந்து கொள்வதனையும் மறுப்பதற்கில்லை.

பொதுவாக, வாகன விபத்துக்கள் ஏற்பட்டால் பாதசாரிகளின் பக்கம் பிழை இருந்தாலும், உயிருக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து குறித்த வாகன உரிமையாளரை எச்சரிப்பது அல்லது தாக்குவதுதான் இலங்கை போன்ற மூன்றாம் மண்டல நாடுகளின் வழமை. இதனை இலங்கையில் எந்தப் பகுதியிலும் காணலாம். இப்படியான விபத்துக்களின் போது கொதித்தெழும் மக்கள் குறித்த வாகனத்தை எரியூட்டுவதையும், தன் பக்கம் பிழை இல்லை என்றாலும் வாகன சாரதி தப்பி ஒழித்து ஓடுவதும் இலங்கையில் சர்வ சாதாரணமாக நடக்கும் ஒரு விடயம்.

குறித்த சம்பவத்தில் அந்த மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞனின் மேலே முழுத் தவறும் இருந்தது. மோதுண்ட மறுகணவே அந்த சிங்கள இளைஞன் குறிப்பிட்ட இடத்திலிருந்து ஓடித் தலைமறைவாகியுள்ளதுடன் தனது நண்பனொருவனைத் தொடர்பு கொண்டு அந்த இடத்திற்குச் சென்று தனது மோட்டார் சைக்கிளை மீட்டுத் தருமாறு வேண்டியுள்ளான். அந்த இளைஞனும் வழமையாகவே முஸ்லிம்களைச் சீண்டும் பழக்கம் கொண்டவன்தான்.

தனது நண்பனின் வேண்டுகோளுக்கிணங்க அங்கு வந்த குறித்த இளைஞன் விபத்துக்குள்ளான அந்த மோட்டார் சைக்கிளை அகற்றிக் கொண்டு செல்ல முற்பட்ட வேளை அங்கிருந்த சில முஸ்லிம் இளைஞர்கள் அவர்களைத் தடுத்து சம்பந்தப்பட்ட ஓடி ஒழிந்த இளைஞனுக்கு மோதுண்ட குறித்த அப்பாவிப் பெண் விடயத்தில் நீதியாக நடந்து கொள்ளச் சொல்லுமாறு வேண்டியுள்ளனர். அதனைப் பொருட்படுத்தாத அந்த சிங்கள இளைஞன் மிக மோசமான இனவாத சொற்களைக் கொண்டு முஸ்லிம்களைத் தூற்றிக் கொண்டு செல்லவே பொறுமையிழந்த ஒரு முஸ்லிம் இளைஞன் அவனைத் தாக்கியுள்ளான். (நாட்டு நிலவரங்களைக் கருத்திற் கொண்டு முஸ்லிம் இளைஞர்கள் இங்கு கொஞ்சம் விட்டுக் கொடுத்து நடந்திருக்கலாம்.)

விடயம் பொலிஸ் வரை செல்லவே, அங்கு பாதிக்கப்பட்ட குறித்த பெண்ணுக்கு ரூ 25,000.00 நஷ்டஈடு வழங்குவது என்ற இணக்கப்பாட்டுடன் குறித்த சம்பவம் முடிவுக்கு வந்தது.

ஆனால், மறுதினம் முஸ்லிம் இளைஞர்கள் சிலர் பின்னேரம் விளையாடி விட்டு சிங்களவர்கள் செறிந்து வாழும் விதானகொட என்ற பாதையால் வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளை சிங்கள இளைஞர்கள் சிலரால் தாக்கப்பட்டுள்ளனர். அடிவாங்கிய முஸ்லிம் இளைஞர்கள் மீண்டும் தமது நண்பர்களைத் திரட்டிக் கொண்டு தம்மைத் தாக்கியவர்களை மீண்டும் தாக்க வந்துள்ளனர்.

இதன்போது அந்த சிங்கள இளைஞர்கள் அங்கிருந்த ஒரு சிங்கள வீட்டினுள் புகுந்ததால் அவ்வீட்டைச் சூழ மக்கள் திரண்டார்கள். ஆனால் மக்களை ஒன்று திரட்டுவதற்காக அவ்வீட்டாரும், குறித்த சிங்கள இளைஞர்களும் தமது கைகளாலேயே அந்த வீடு மற்றும் உபகரணங்



களை சேதப்படுத்திக் கொண்டு முஸ்லிம்கள் மீது அதனைப் பழிபோடும் கைங்கரியத்தைச் செய்தனர்.

இதற்குப் பின்னர் இந்த சம்பவத்தை முடியுமானவரை சுமூக நிலைக்குத் திருப்ப, முஸ்லிம் ஊர் தலைமைகள் கடும் முயற்சி செய்தும் பௌத்த குருமார் அதற்குத் தயாராக இருக்கவில்லை. சம்பவத்துடன் தொடர்புடைய சில முஸ்லிம் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டதோடு பௌத்த தேரர்களின் வேண்டுகோளுக்கிணங்க குறித்த பிரதேச சபை முன்னாள் உறுப்பினரும் எதிர்க்கட்சித் தலைவருமான ஹுஸைன் கியாஸ் அவர்களும் கைதுசெய்யப்பட்டார்.



இங்கு ஹுஸைன் கியாஸ் என்பவர் குறித்த முஸ்லிம் இளைஞர்களைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்காகவே குறித்த இடத்திற்கு சமூகமளித்திருந்தார் என்பதும் ஊரில் இன, மத பேதம் பாராது சேவையாற்றுபவர் என்பதும், தான் கற்ற சிங்களப் பாடசாலையான கா/கிந்தோட்டை மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க செயலாளராக சிங்கள சகோதரர்களாலேயே தெரிவு செய்யப்பட்டவர் என்பதும் குறித்த சம்பவத்திற்கு அவரும் காரணம் என்று சிங்கள இனவாத ஊடகங்களில் அவர் பற்றிய பிழையான செய்திகள் பரப்பப்பட்டு வருகின்றது என்பதும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய ஒரு விடயமாகும்.

மறுநாள் இரவு அதாவது 16.11.2017 அன்று ஊரின் ஒவ்வொரு எல்லைகளிலும் சிங்கள இளைஞர்கள் அணிதிரண்டு

கொண்டு அவ்வழியால் வரும் முஸ்லிம்களை அச்சுறுத்திக் கொண்டிருந்ததோடு ஒரு சிலரைத் தாக்கியும் உள்ளனர். அதில் முஸ்லிம்களால் மிகவும் மதிக்கப்படும் ஊரில் இன, மத பேதங்களுக்கு அப்பால் சமூகப் பணிகளில் முழுமையாக தன்னை அர்ப்பணித்து செயலாற்றும் காலி மாவட்ட ஜம்இய்யதுல் உலமா சபையின் உப தலைவரான மௌலவி ஓதுபுல் அஸீம் அவர்களும் ஒருவராவார்.

அடுத்த நாள் அதாவது 17.11.2017 அன்று காலை முதல் பொலிஸ் மற்றும் இராணுவப் பாதுகாப்பு ஊரில் பலப்படுத்தப்பட்டிருந்தாலும் முஸ்லிம்கள் பெரியளவு அச்சமோ, சந்தேகமோ கொள்ளவில்லை. இந்த சம்பவங்கள் இதற்கு முன்னாலும் நடந்திருப்பதால் பெரிய விபரீதமாக மாறும் என்று யோசிக்கும் அளவுக்கோ, அல்லது அதற்கான முன் ஆயத்தங்களுக்கோ முஸ்லிம்கள் செல்லவில்லை. மாறாக, வழமையான நாட்களைப் போன்றே அந்நாளைக் கடத்தினர்.

ஆனால், இதற்கு மாற்றமாக கிந்தோட்டையிலுள்ள தூபாராம விகாரையில் பௌத்த குருமாரின் தலைமையில் சிங்கள மக்களால் மாலை 7.30 மணிக்கு ஒரு சதி ஒன்றுகூடல் மேற்கொள்ளப்பட்டு பல தீர்மானங்களுக்கு அவர்கள் வந்துள்ளமை பின்னர் தான் முஸ்லிம்களுக்குத் தெரிய வந்தது. அவ்வேளை ஒரு சில பொலிஸாரைத் தவிர ஊரில் மேற்கொள்ளப்பட்டிருந்த பாதுகாப்பு ஏற்பாடுகளும் முற்றாக நீக்கப்பட்டிருந்தன. நிலைமைகள் விபரீதமாகும் என்ற அச்ச நிலைமை தோன்றியதன் பின் பல்வேறுபட்ட அரசியல் தலைமைகளுக்கும், பாதுகாப்புப் பிரிவினருக்கும் தகவல் வழங்கப்பட்டும் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. பல அரசியல் தலைவர்களது தொலைபேசி இணைப்புக்கள் செயற்பட வில்லை.

இந்நிலையில், ஏற்கனவே திட்டமிட்டிருந்தபடி சமூக வலைதளங்கள் ஊடாகவும், ஏனைய வழிமுறைகளூடாகவும் வெவ்வேறு பகுதியிலிருந்து பல வாகனங்களில் திரட்டப்பட்டு வந்த 300க்கும் மேற்பட்ட சிங்கள இளைஞர்கள் பல குழுக்களாகப் பிரிந்து கிந்தோட்டைக்குப் பிரவேசிக்கும் பாதைகளை எல்லாம் இடைமறித்த வண்ணம் கொஞ்சம் கொஞ்சமாக ஊருக்குள் பிரவேசித்து இரவு 9.30 மணியளவில் தமது தாக்குதல்களை ஆரம்பித்தனர்.


குறிப்பாக, அம்பிடிய தூபாராம, கினிகுருந்த, எலபடவத்த, உக்குவத்த ஆகிய கிந்தோட்டைக்குப் பிரவேசிக்கும் பாதைகளினூடாக நான்கு குழுக்களாக வந்த சிங்களக் காடையர்கள் முஸ்லிம்களின் வீடுகள் மற்றும் ஏனைய உடைமைகளைத் தாக்கிக் கொண்டும் தீயிட்டுக் கொண்டும் சென்றனர். பயங்கரமான மிகவும் மோசமான இனத்துவேச வார்த்தைகளைப் பிரயோகித்துக் கொண்டு தமது தாக்குதல்களை ஆரம்பித்த சிங்கள இளைஞர்களை வழிநடாத்தியவர்கள் சமூகங்களுக்கு மத்தியில் சுமூக நிலையினை ஏற்படுத்த வேண்டிய பௌத்த குருமார் என்பதுதான் மிகவும் கவலைக்கிடமானது.

எதிர்பாராத இத்தாக்குதல்கள் தொடரவே எந்தவித ஏற்படுகளுமின்றிருந்த முஸ்லிம்கள் நிலைகுழம்பிப் போய் வீதி விளக்குகளையும், வீட்டு விளக்குகளையும் அணைத்து விட்டு வீடுகளுக்குள் அடங்கிக் கொண்டனர். ஒரு சில முஸ்லிம் இளைஞர்களே களத்தில் நின்றாலும் அவர்களிடம் எந்தவித ஏற்பாடுகளும் இருக்கவில்லை. முடியுமான வரை அவர்களின் பிரவேசத்தினைத் தடுக்க அவர்கள் பாடுபட்டனர். அவ்விளைஞர்களும் களத்தில் இருந்திருக்காவிட்டால் சேதங்கள் இன்னும் மிகப் பயங்கரமாகவே இருந்திருக்கும்.

மூன்று மணித்தியாலங்களாகத் தொடர்ந்த இத்தாக்குதல்கள் காரணமாக சுமார் 60 இற்கு மேற்பட்ட வீடுகளும், 26 கடைகளும், 12 வாகனங்களும் இரண்டு பள்ளிவாயல்களும் சேதப்படுத்தப்பட்டன. (குறித்த புள்ளிவிபரங்கள் 18.11.2017 அன்று காலி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஒரு கூட்டமொன்றின் போது முன்வைக்கப்பட்டவை என்பதனால் அதனையே பதிந்தேன்.)

இதில் பல வீடுகள் மோசமாக சேதப்படுத்தப்பட்டிருந்ததோடு பல வாகனங்கள் முழுமையாக தீக்கிரையாக்கப்பட்டிருந்தன. பாதுகாப்புப் பிரிவினர்கள் மிகத் தாமதித்தே களத்துக்கு விரைந்ததமை சிங்களவர்கள் தாம் எதிர்பார்த்தது போலவே தாக்குதல்களை மேற்கொள்வதற்கு வசதியாக அமைந்துவிட்டது.

களத்துக்கு விரைந்த பாதுகாப்புப் பிரிவினர் மற்றும் பொலிஸார் கூட நடுநிலைமையாக இயங்காமல் மிகவும் பாரபட்சமாகவே நடந்து கொண்டனர். முஸ்லிம் இளைஞர்களைத் தடுத்து நிறுத்துவதில் அவர்கள் காட்டிய அக்கறையின் தீவிரத்தில் ஒரு சதவீதத்தைக்



கூட தாக்குதலை மேற்கொள்ள வந்த வெளியூர்காரர்களைத் தடுப்பதில் காட்டவில்லை. இக்கலவரத்தின் போது களத்தில் சிங்களக் காடையர்களுக்கு வழிகாட்டிக் கொண்டிருந்த ஒரு சிங்கள பௌத்த பிக்குவை பொலிஸார் குனிந்து கைகூப்பி வணங்கிக் கொண்டிருந்ததையும் எமது இளைஞர்கள் காணத் தவறவில்லை.

மட்டுமல்லாது, முஸ்லிம்களை அதிக வாடிக்கையாளர்களைக் கொண்ட ஒரு சிங்களக் கடை பாதுகாப்புப் பிரிவினராலேயே தீவைக்கப்பட்டமை மிக உறுதியான தகவலாக அமைந்திருந்ததோடு அதனை குறிப்பிட்ட பகுதியைச் சேர்ந்த ஒரு சிங்கள வைத்தியர் ஒருவரும் உறுதிபடக் கூறியுள்ளார்.

மூன்று மணித்தியாலங்களாக முழுத் தாக்குதலில் ஈடுபட்ட சிங்களக் காடையர்கள் தமது முயற்சியினை கைவிடாமல் தொடர்ந்தும் விடியும் வரை கலைந்து செல்லாமல் மீண்டும் மீண்டும் சந்தர்ப்பங்களை எதிர்பார்த்து ஒவ்வொரு இடங்களிலும் குழுமிக் கொண்டிருந்தனர்.

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு அடுத்த நாள் காலை 9.00 மணிக்கு ஊரடங்குச் சட்டம் நீக்கப்படும் வரை வீடுகளில் பெண்களும், சிறுவர்களும் வீடுகளின் பின்பக்கங்களிலும், கழிவறைகளிலும் நேரத்தைக் கடத்தியுள்ளனர். ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டதோடு களத்திற்கு விரைந்த முஸ்லிம் சிவில் அமைப்புக்கள் உடனடியாக சேத விபரங்களை மதிப்பிடத் தொடங்கினர்.

பல வீடுகளிலிருந்து பணங்கள் மற்றும் தங்க ஆபரணங்கள் கூட அலுமாரிகள் உடைக்கப்பட்டு களவாடப்பட்டிருந்தன. ஒரு வீட்டிலே சின்னப் பிள்ளைகளால் ஆர்வத்தோடு முட்டிகளில் சேமிக்கப்பட்டிருந்த சில்லறை நாணயங்களும் முட்டிகள் உடைக்கப்பட்டு களவாடப்பட்டிருந்தது. சேத விபரங்களை மதிப்பிடல், ஆவணப்படுத்தல் வேலைகளோடு முழு ஊர் மக்களுக்கும் தேவையான மூவேளைச் சாப்பாடுகளை ஏற்பாடு செய்வதிலும் ஊர் சிவில் சமூகங்கள் முழுமையாக ஈடுபட்டனர்.

மீண்டும் மாலை 6.30 (18.11.2017) முதல் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு முழுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த நிலையிலும் இரவு 10.00 மணியளவில் சிங்களப் பகுதியை அண்டிய மிகவுமே வறிய நிலையிலுள்ள ஒரு ஏழை முஸ்லிமின் வீடு தீக்கிரையாக்கப்பட்டது. குறித்த சந்தர்ப்பத்தில் அவ்வீட்டில் யாரும் இருக்கவில்லை. அவர்கள் ஏற்கனவே பயத்தின் காரணமாக வெளி இடங்களில் தங்கியிருந்தனர். (தீவைத்தவர் முஸ்லிம்கள் மிகவுமே செறிந்து வாழும் பகுதியில் சில்லறைக் கடை மற்றும் பழக்கடை வியாபாரம் செய்து முற்றுமுழுதாக முஸ்லிம்களையே வாடிக்கையாளராகக் கொண்ட ஒரு வியாபாரி என்பது இப்பொழுது தெரிய வந்துள்ளது.)

அத்தோடு ஒரு ஜம்ஆ பள்ளிக்கு பெற்றோல் குண்டு வீசப்பட்டிருந்தது. ஆனால் பாதிப்புக்கள் ஏற்படவில்லை. பக்கத்து ஊரான ஹிரிம்புற ஜும்ஆப் பள்ளிவாயலுக்கும் கல்வீச்சு மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, கட்டுகொடை என்ற முஸ்லிம்கள் அதிகமாக செறிந்து வாழும் முஸ்லிம் ஊரிலுள்ள ஒரு தும்புத் தொழிற்சாலையொன்றும் எரியூட்டப்பட்டுள்ளது.

வியாழக்கிழமை இடம்பெற்ற சம்பவத்தின் பின்னால் வெள்ளிக்கிழமை கா/ கிந்தோட்டை மகா வித்தியாலயம் என்ற சிங்களப் பாடசாலைகளில் கல்வி கற்கும் முஸ்லிம் மாணவர்களை அப்பாடசாலையைச் சேர்ந்த சிங்கள மாணவர்களே மிக மோசமாக இனவாத சொற்கணைகளால் திட்டி பல்கலைக்கழகங்களில் பகிடிவதை செய்வது போன்று கண்ணையும், கையையும் கட்டி முகங்களை தாக்கியுள்ளனர். சிங்கள இளைஞர்கள் மட்டுமல்லாது சிறுவர்களுக்கு மத்தியிலும் கூட மிக மோசமான இன வெறி ஊட்டப்பட்டு வருகின்றது என்பதனையே இது வெளிப்படையாக எடுத்துக் காட்டுகின்றது.

சம்பவங்களோடு எந்தவிதத் தொடர்பும் அற்ற, பரீட்சைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய அப்பாவி முஸ்லிம் மாணவர்கள் சகபாடி மாணவர்களாலேயே தாக்கப்படுவது எந்தவிதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாதவொன்று என்பதும் சகவாழ்வு, சகிப்புத்தன்மை, பன்மைத்துவத்தினை அங்கீகரித்தல் என்பன எந்தளவு தூரம் மாணவர்கள் மத்தியிலிருந்தே அற்றுப் போயுள்ளது என்பது ஆழமாக விவாதிக்கப்பட வேண்டிய தொன்றாகும். நாட்டின் எதிர்காலத் தலைவர்களாக வர வேண்டிய இந்த சிறுவர்கள் சிறு வயதிலேயே மிக மோசமான இனவாதிகளாக மாறிக் கொண்டிருப்பதற்கு யார் காரணம் என்பதும் தேடப்பட வேண்டிய ஒரு விடயம்.

இந்தக் கலவரத்தினால் இம்முறை க.பொ.த. சாதாரணப் பரீட்சை எழுதவுள்ள முஸ்லிம் மாணவர்கள் உளவியல் ரீதியாக மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதோடு அவர்கள் கற்றல் நடவடிக்கைகளையும் முற்றாகக் கைவிட்டு விட்டு ஊர் வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பது மிகவும் துரதிஷ்டமான ஒரு நிகழ்வாகும்.

இங்கு இன்னொரு விடயத்தையும் சுட்டிக்காட்ட வேண்டும். முஸ்லிம்கள் மத்தியில் வியாபாரத் தளங்களை நிறுவி முஸ்லிம்களையே 90 வீத வாடிக்கையாளர்களாகக் கொண்ட சிங்கள வியாபாரிகளும் இத்தாக்குதல் நடவடிக்கைளில் ஈடுபட்டிருந்தனர். கிந்தோட்டை முஸ்லிம்கள் தம்மோடு இணைந்து வாழும் சிங்களவர்களை என்றுமே ஒதுக்கிப் பார்த்ததில்லை. பல சிங்கள மேசன் மற்றும் தச்சர்கள், சில்லறைக் கடை வியாபாரிகள், மரக்கறி மற்றும் பழ வியாபாரிகள், (பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய ஆங்கில தின போட்டியில் முதலிடம் வென்ற 'ஸைனப்'

• அனஸ் அப்பாஸ்

வியாபாரியான எம்.என்.எம். ஹஸன் எம்.எப்.எப். ஸஹ்ரா தம்பதிகளின் செல்வப் புதல்வி எம்.எச்.எப். ஸைனப் அண்மையில் தேசிய மட்ட ஆங்கில தினப் போட்டியில் பங்கு பற்றி கட்டுரை படைத்தல் (Creative Writing) போட்டியில் அகில இலங்கை மட்டத்தில் முதலிடம் பெற்றார். இம்மாணவி பலாங்கொடை ஜெய்லானி தேசிய பாடசாலையில் தரம் 06 இல் கற்று வருகின்றார்.

பாடசாலையில் தன் அதிவிஷேட திறமையினை கல்வி மற்றும் இணைப் பாடவிதான செயற்பாடுகளில் காட்டி வரும் இம்மாணவி, தரம் நான்கு வரை சர்வதேச பாடசாலை ஒன்றில் ஆங்கில மொழி மூலம் தன் கல்வியை தொடர்ந்ததுடன் தரம் ஐந்தில் தமிழ் மொழி மூல பாடசாலையான பலாங்கொடை அல் மினாரா வித்தியாலயத்தில் இணைந்துள்ளார். கடந்த 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தமிழ் மொழியில் கல்விப் பயணத்தைத் தொடர்ந்த இம்மாணவி அவ்வருடம் ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சைக்கும் சிறப்பாக முகம் கொடுத்து 163 புள்ளிகளை பெற்று சித்தி பெற்றமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

தற்போது பலாங்கொடை ஜெய்லானி தேசிய பாடசாலையில் தரம் ஆறில் கல்வி கற்று வரும் இம்மாணவி இங்கும் தன் திறமைகளை மிக உயர்ந்த மட்டத்தில் காட்டி வருகின்றமையை காணக் கூடியதாக உள்ளது.

''முதலில் இப்போட்டி குறித்து எமது பாட ஆசிரியை எமக்கு அறிவுறுத்தினார். பாடசாலை மட்டத்தில் போட்டிகள் வைக்கப்பட்டு அதில் நான் இப்போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டேன். பின் வலய, மாகாண மட்டங்களில் கலந்து முதலிடம் பெற்று இறுதியில் கொழும்பு தேஸ்டன் கல்லூரியில் நடைபெற்ற அகில இலங்கை மட்டப் போட்டியில் கலந்து கொண்டு முதலிடம் பெற்றேன். அல்ஹம்துலில்லாஹ்!

எனது வாசிப்பு பழக்கமும், முயற்சியுமே இந்த வெற்றிக்கான ரகசியம் எனலாம். எனக்கு கிடைக்கும் ஓய்வு நேரங்களில் அதிகம் புத்தகங்கள் வாசிப்பேன். எனது வகுப்பு தோழிகள் நான் பாடசாலை இடைவேளையின் போது உண்ண மறந்தாலும் புத்தகம் வாசிக்க தவறுவதில்லை என கேலிசெய்வார்கள்.

நான் ஆங்கில கதைப் புத்தகங்கள், சிறிய நாவல்களை விரும்பி வாசிப்பேன். மேலும் ஆசிரியர்களின் உதவியுடன் நிறைய பயிற்சிகள் பெற்றேன் என தனது வெற்றிப்படிகளின் மூலக் கூற்றை கூறுகின்றார் ஸைனப்.



வீட்டில் 2 தங்கைகளுக்கும் 3 தம்பிகளுக்கும் முன்னுதாரணமாகத் திகழும் இச்சிறிய மாணவி, தான் கடந்து வந்த பாதையில் எதிர்கொண்ட சவால்களை குறித்து கேட்டதற்கு, ''எனக்கு வேகமாக எழுத முடியாமல் இருந்தது. எனது ஆசிரியர்களால் எனக்குக் கிடைத்த அதிகமான பயிற்சிகள் மூலம் அதனை சீராக்கிக் கொண்டேன். என் ஆசிரியர்கள் என்னை ஊக்குவித்தனர். என்னால் முடியும் என்பதை அடிக்கடி நினைவுபடுத்தினார்கள். தமக்குக் கிடைக்கும் ஓய்வுகளின் போது என்னை அழைத்து பயிற்சிகளும், ஆலோசனைகளும் தந்தனர். இதனால் சவால்களை இலகுவாக தன்னால் முறியடிக்க முடிந்தது'' எனச் சொல்கின்றார்.

''இவ்வெற்றிக்கு அருள் புரிந்த வல்ல நாயன் அல்லாஹ்விற்கு என் முதற்கண் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். அதேபோல் இவ்வெற்றிப் பாதையில் எனக்கு நிழலாய் நின்ற அன்பின் பெற்றோருக்கும், வழிகாட்டிய அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கும், ஊக்குவித்த நண்பர்களிற்கும் உதவி புரிந்த அனைவருக்கும் என் நன்றிகளை இவ்விடத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன். குறிப்பாக எனது வகுப்பாசிரியையும், பாட ஆசிரியையுமான பஸீஹா ஆசிரியையிற்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்'' என்று நன்றி மறவாத இம்மாணவி வாய் மலர சொல்கின்றார்.

''புத்தகங்கள் வாசிப்பதே எனக்கு மிகவும் விருப்பமானதும், நான் அதிக நேரம் செலவழிக்கும் பொழுதுபோக்கும் ஆகும்.''

''வரைதல், பேச்சு, கட்டுரை போன்ற பல போட்டிகளிலும் கலந்து கொண்டுள்ளேன். வெற்றி தோல்வியை பொருட்டாகக் கொள்ளாமல், நிறைய போட்டிகளில் பங்கு கொள்ளுங்கள், முயற்சி செய்யுங்கள், வெற்றி பெறுவீர்கள் என்பதே என் சக மாணவர்களுக்கு நான் சொல்லும் ஆலோசனை. Try and try one day you can fly...''

சிறந்த ஒரு வைத்தியராக உருவாக வேண்டும் எனும் இலட்சியத்திலுள்ள மாணவி ஸைனப், இது போன்ற பல போட்டிகளில் வெற்றி பெற்று, தன் திறமைகளை மேன்மேலும் வளர்த்து கல்வியில் முன் செல்ல வேண்டும் என்று தொடர்ந்து முயற்சிக்கின்றார்.

''ஸைனப் மென்மேலும் சாதனைகள் படைத்து தன் இலட்சியங்களை சிறப்புற அடைந்து கொள்வதற்கு நாமும் பிராத்திக்கின்றோம். பாடசாலை காலம் வெறும் ஏட்டுக் கல்வியை மட்டும் பெறுவதற்கல்ல.. மாறாக கிடைக்கும் வாய்ப்புக்களை உரிய முறையில் பயன்படுத்தி இணைப்பாடவிதான செயற்பாடுகள் போன்றவற்றினூடாக மாணவர்களின் திறமைகளை வளர்த்து விடுவது பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் கடமையாகவும் உள்ளது'' என தகவல் தந்து உதவிய ஆசிரியை சிபானா ஸமீர் இலங்கையிலுள்ள இதர பாடசாலை ஆசிரிய, ஆசிரியைகளையும், பெற்றோரையும் கேட்டுக் கொள்கின்றார்.

இவரைப் போன்ற இலட்சிய வேட்கையுடைய மாணவ, மாணவிகள் இம்மை, மறுமை வாழ்வில் உயர் வெற்றிகள் பெற மனமார்ந்த வாழ்த்துக்கள். பாடசாலைக்கும், ஊருக்கும், சமூகத்திற்கும் பெருமை தேடித் தந்துள்ள இம்மாணவியின் முயற்சிகளும், திறமைகளும் மற்ற மாணவர்களுக்கும் முன்மாதிரியாக அமையட்டும்.

# பலஸ்தீன் மக்களின் துன்பங்களுக்கும் நிலையற்ற தன்மைக்கும் காரணமான பெல்போர் பிரகடனத்திற்காக பிரித்தானியா மன்னிப்புக் கோர கடமைப்பட்டிருக்கின்றது

**பெல்போர் பிரகடனத்தின் நூறு வருடங்கள் பூர்த்தியை நினைவுகூரும் நிகழ்வில் மஹ்மூத் அப்பாஸ் ஆற்றிய உரை**

இவ்வருடம் பெல்பர் பிரகடனத்திற்கு நூறு வருடங்கள் பூர்த்தியடைகின்றது. பிரித்தானியாவின் வெளிநாடுகளுக்கான செயலாளராக இருந்த ஆர்தர் பெல்போரினால் பலஸ்தீனத்தின் தலைவிதியும், அடையாளமும் மாற்றப்பட்டது. பலஸ்தீன மக்களின் வரலாற்றை மாற்றியமைத்து சியோனிஸ அமைப்புக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் மூலம் அது நிறைவேறியது. துயரம் நிறைந்ததொரு நூற்றாண்டு நினைவுகளுடன் அநீதிக்கான விடியலையும் சமாதானத்தையும் அடைவதற்காக பலஸ்தீனத்தின் துன்பியல் வரலாற்றை ஒருமுறை மீள்பார்வைக்குட்படுத்துவது அவசியமாகும்.



ஐக்கிய இராச்சியமானது அதனது நெறிமுறை தவறிய ஆட்சியாளர்களினால் அத்துமீறிய ஆக்கிரமிப்புக்குள்ளான ஒரு சமூகத்தின் பொறுப்புக்கூறலிலிருந்து இலாவகமாகவே நழுவிக் கொள்கிறது. பெருமைக்குரிய கலாசார பாரம்பரியத்தையும் வரலாற்றையும் கொண்ட பலஸ்தீனமானது, 1947 காலப்பகுதியில் 70,000 மக்கள் தொகையையும் 28,000 சதுர கி.மீற்றர் நிலப்பரப்பையும் கொண்ட நாடாகக் காணப்பட்டது. சகவாழ்வும் விட்டுக்கொடுப்பும் அம்மக்களிடம் இயல்பாகவே ஒன்றிணைந்திருந்தது.

ஜெயஸ்திய, கனானிய கோத்திரங்களினால் உருவாக்கப்பட்ட ஜெரூஸலம், ஹய்பா, ஜப்பா போன்ற துறைமுகங்களும் விவலிய நகரங்களான காஸா, பெத்லஹேம், நப்லஸ், ஹெப்ரோன், நஸ்றத் போன்றனவும் உலகிலேயே பண்டைய நகரமான ஜெரிகோயும் சாக்கடல் மற்றும் பசுமை நிறைந்த ஜோர்தானிய வெளிகளும் பலஸ்தீனத்தின் நாகரிகத் தோற்றத்தை பரைசாற்றுகின்றன. கல்வி, கலாசார நிறுவனங்களையும், ஏற்றுமதி வியாபாரத்தையும், சுற்றுலா துறையையும் தன்னகத்தே கொண்ட பலஸ்தீனமானது அரபிகளைக் கொண்டே பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது. குறிப்பாக பெரும்பான்மை முஸ்லிம், கிறிஸ்தவர்களையும் மற்றும் மிகச் சிறுபான்மை யூதர்களையும் கொண்டிருந்தது.

ஆனால் பெல்போர் பிரகடனம் ஒட்டுமொத்த பலஸ்தீன் பாரம்பரிய சுதேச மக்களின் அரசியல் அபிலாஷைகளை குழிதோண்டிப் புதைத்தது. சுதேச பெரும்பான்மை முஸ்லிம், கிறிஸ்தவ அரபுகள் யூதரல்லாத சமூகம் என அப்பிரகடனத்தில் சுட்டிக்காட்டப்பட்டார்கள்.

மேலும் காலனித்துவமே உருவான பெல்போர் அங்கு வாழ்ந்த சுதேச அரபுகளின் உரிமைகளை மறுத்தது மட்டுமல்லாமல், 1922 இல் சியோனிசம் பற்றி அவர் குறிப்பிடுகையில், ''சியோனிசம், சரியானாலும் பிழையானாலும் அது நல்லதாக இருந்தாலும் கெட்டதாக இருந்தாலும் அது வேரூன்றிப் போன ஒரு பாரம்பரியமாகும். மேலும் அது தற்காலத் தேவையையும், எதிர்காலத்திற்கான நம்பிக்கையுமாகும். இங்கு வாழும் 700,000 அரபுகளினது எதிர்பார்ப்பு மற்றும் ஓரவஞ்சனைகளை விடவும் ஆழமானதாகும்.''

பலஸ்தீன மக்களின் வெளியேற்றம், 1948 இல் நக்பாவில் ஏற்பட்ட நிகழ்வு மற்றும் பலஸ்தீன் பற்றிய சர்வதேசத்தின் நிலைப்பாடுகளை பெல்போர் பிரகடனத்தினூடாக அனுமானித்துக் கொள்ள முடியும். ஓர் நூற்றாண்டு கடந்த பின்பும் பலஸ்தீன் மக்களின் உரிமைகளைப் பெற்றுத் தரும் ஓர் பிரகடனமாக சர்வதேச சமூகம் இதனைக் கருதுகின்றது. சர்வதேச சமூகத்தின் நிலைப்பாட்டையும் அதன் நம்பகத் தன்மையையும் இது கேள்விக்குள்ளாகின்றது.

**பெல்போரின் கசப்பான வரலாறு**

பெல்போர் பிரகடனம் எமது தலைவிதியை மாற்றிவிட்ட ஒரு பெரும் நிகழ்வாகக் கருதப்பட்டாலும் அது பிரித்தானிய அரசியல்வாதிகளின் ஏகோபித்த ஒரு கருத்தாகக் காணப்படவில்லை. பலஸ்தீனத்திற்கான பிரித்தானிய ஆணையகத்தினூடாக பெல்போர் பிரகடனம் நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும் பிரித்தானியாவானது பெல்போரினுடைய மடமை நிறைந்த கருத்தியலுக்கும் பலஸ்தீனத்தின் யதார்த்தத்திற்கும் இடையில் சமநிலை பேணுவதில் பாரிய சிக்கல்களை எதிர்கொண்டது. பலஸ்தீனத்தை நிர்வகித்த பல பிரித்தானிய ஆணைக்குழுக்கள் பலஸ்தீன பூர்வீகக் குடிகள் பற்றிய உண்மைத் தன்மையை லண்டனுக்கு தெரியப்படுத்திக் கொண்டிருந்தது.

அதன் பிரதிபலனாக 1922 ஆம் ஆண்டு பெல்போர் பிரகடனத்தை ஒரு பகுதியாகக் கொண்ட பலஸ்தீனத்திற்கான பிரித்தானிய ஆணையகத்தை பிரித்தானிய பாராளுமன்றம் நிராகரித்தது. பிரித்தானிய அமைச்சரவையின் ஒரேயொரு யூத அமைச்சராகவிருந்த சேர் எட்வின் மோண்டே தனது ஆதரவை இவ்வாறு வெளிப்படுத்தியிருந்தார்.

''நான் யூத குடியேற்றத்தை பலஸ்தீனில் ஆதரித்த போதிலும் ஒரு இனக்குழு மாத்திரம் மதவெறியுடன் உரிமை கோருவதற்கும் குறுகிய சிந்தனையுடன் பலஸ்தீனத்தை யூத பூமியாக கோருவதற்கும் ஒரு இனக்குழுவிற்கு மாத்திரம் உரிமை இல்லை.''

பெல்போர் பிரகடனத்தின் பிரதிபலனாக உருவான இஸ்ரேலின் தோற்றம் சர்வதேச சமூகத்தினால் ஒரு மரியாதைக் குறைவான செயற்பாடாகப் பார்க்கப்பட்டது. ஆனால் 30 வருடங்களின் பிறகு 1947.11.29 இல் ஐ.நா. சபையினால் வரையப்பட்ட 181(2) என்ற தீர்மானமானது பலஸ்தீனத்தை இரட்டை தேசங்களாக பிளவுபடுத்தி மீண்டும் பலஸ்தீன மக்களின் அபிலாஷைகளுக்கும் உரிமைகளுக்கும் விருப்புக்களுக்கும் எதிராக ஓர் அழைப்பை விடுத்தது. அதைத் தொடர்ந்து பலஸ்தீன தலைவர்களினால் முன்வைக்கப்பட்ட நியாயபூர்வமான கோரிக்கைகள் பிரித்தானிய அரசினால் முற்று முழுதாக நிராகரிக்கப்பட்டன.

சியோனிசத்தை ஆதரித்து யூத தேசமொன்றை பலஸ்தீன மண்ணில் உருவாக்கியது மாத்திரமல்லாமல் அதற்கு பிற்பாடு காணப்பட்ட அசமந்தப் போக்கானது நக்பா இன அழிப்பிற்கு வித்திட்டது. மேலும் மூன்றில் இரண்டு பங்கான பலஸ்தீனர்களின் அகதி வாழ்வுக்கு காரணமானது. இதன் மூலம் குறைந்தது 418 பலஸ்தீன் கிராமங்கள் அழிக்கப்பட்டன. ஐ.நா.வின் 181ஆம் இலக்க தீர்மானமானது பலஸ்தீன மக்களின் கட்டாய இடப்பெயர்வுக்கு அனுமதிக்காதபோதும் அதனை நடைமுறைப்படுத்துவதில் தோல்வி கண்டுள்ளது. அதேபோன்று பலஸ்தீன் மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பிலும் சர்வதேச சமூகமும், ஐ.நா. சபையின் பராமுகமாக இருந்து வருகின்றது.

**பெல்போர் முதல் 2017 வரை**

இஸ்ரேல் 1967ஆம் ஆண்டு முதல் ஆரம்பித்த ஆக்கிரமிப்பு மீதமிருக்கும் 22 வீதமான பலஸ்தீன் பூமியும் காவுகொண்டு வருகிறது. பல கோணங்களில் முன்னெடுக்கப்பட்ட ஆக்கிரமிப்புக்களால் கிழக்கு ஜெரூஸலம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. பலஸ்தீன விடுதலை இயக்கம் முடியுமான அளவிற்கு விட்டுக்கொடுப்புக்களை மேற்கொண்ட போதிலும் ஐ.நா. சபையின் தீர்வுத் திட்டத்தில் அங்கீகரித்த 22 வீத பலஸ்தீன் பூமியைக் கூட ஏற்றுக்கொள்ள இஸ்ரேல் மறுக்கிறது. தொடர்ந்தேர்ச்சியான இஸ்ரேலிய குடியிருப்புக்கள் ஐ.நா. சபையின் இரு நாட்டுத் தீர்வையும் கேள்விக்குள்ளாக்கியுள்ளதோடு இஸ்ரேலிய அரசின் உள்நோக்கத்தையும் தெளிவாகப் பறைசாற்றுகின்றது.

பலஸ்தீன் விடுதலை இயக்கம் இஸ்ரேலினுடைய இருப்பையும் அதன் உரிமைகளையும் அங்கீகரித்த போதிலும் மத்திய கிழக்கு சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றிய போதிலும் சமாதானத்தை அடைவதற்காக முழுமையான விட்டுக்கொடுப்புடன் நடந்துகொண்ட போதிலும் இஸ்ரேலின் அசிரத்தையான தன்மை சமாதானத்தில் அது நாட்டங்கொள்ளவில்லை என்பதற்கு எடுத்துக் காட்டாகும். மேலும் பேச்சுவார்த்தைகளையும் விட்டுக்கொடுப்புக்களையும் இஸ்ரேல் பலஸ்தீன் நிலங்களை சுரண்டுவதற்கும் மேலும் ஆக்கிரமிக்களை மேற்கொள்ளும் உத்தியாகவும் கண்துடைப்பபகவும் பயன்படுத்துகின்றது.

இஸ்ரேலியப் பிரதமர் பென்ஜமின் நெடன்யாஹுவின் கொள்கைகள் பலஸ்தீனர்களுக்கான நாடொன்றை அங்கீகரிப்பதற்கான குறைந்தபட்ச சாத்தியப்பாடுகளையும் மறுதலிப்பதாய் உள்ளது. அது மட்டுமல்லாமல், இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்களின் கண்மூடித்தனமான, வெறித்தனமான பலஸ்தீன் மக்களுக்கெதிரான தாக்குதல்கள் சகவாழ்வையும் அரசியல் பேச்சுவார்த்தைக்கான வாயப்புகளையும் மேலும் பலவீனப்படுகின்றன.

இஸ்ரேலின் தனிநாட்டுக் கொள்கையின் யதார்த்தமானது சர்வதேச சமூகத்தினால் திணிக்கப்படும் தண்டனையில் இருந்து தப்பித்துக் கொள்வதில் இருந்து சாத்தியமற்றதாக்குகின்றது. சட்டவிரோத குடியேற்றக்காரர்களின் வியாபார நிறுவனங்களின் வெற்றியானது திறந்த சர்வதேச பொருளாதார சந்தையினதும் நிறுவனங்களினதும் திறந்த வர்த்தக ஒப்பந்தங்களின் மூலம் ஏற்றுக் கொள்வதினூடாகவே சாத்தியமாகின்றது. ஆகவே சர்வதேச பொருளாதார சந்தையின் உடன்பாட்டை எட்டாமல் சட்டவிரோத குடியேற்றக்கார இஸ்ரேலிய நிறுவனங்களின் வர்த்தகமானது வெற்றியீட்ட முடியாது. ஆனால் இஸ்ரேல் பலஸ்தீன மக்களின் விவகாரத்தை கவனமாகக் கையாள்வதன் மூலம் அதிகமான நாடுகளின் தலையீடுகளின்றி குற்றங்களையும் அத்துமீறல்களையும் அரங்கேற்றுகின்றது.

பலஸ்தீன மக்கள் பெல்போர் ஒப்பந்தத்திலிருந்து நிறையவே பாடங்களைக் கற்றிருக்கின்றனர். கிழக்கு ஜெரூசலத்தில் அல் அக்ஸா புனிதப் பள்ளிவாயலின் வரலாற்றுச் சுலோகங்களை மாற்றியமைப்பதற்கு இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு முயன்ற வேளையில் கிறிஸ்தவனோ முஸ்லிமோ, வயோதிபரோ, சிறுவர்களோ, ஆணோ, பெண்ணோ என்று பாராமல் ஆக்கிரமிப்பை எதிர்த்து இஸ்ரேலிய முயற்சிகளை முடிறியடிக்க முன்வந்தமை இதற்கு சிறந்த சான்றாகும். அனைத்து அரசியல் சக்திகளும் சமூகத்தின் அங்கத்தவர்களும் ஒன்றித்து அந்த எதிர்ப்பைக் காட்டிய பாங்கானது உலகத்திற்கு பறைசாற்றிய விடயம் யாதெனில், ஒரு இராணுவ ஆக்கிரமிப்பிற்கு மத்தியில் சகவாழ்வையும் சமத்துவத்தையும் எவ்வாறு கட்டமைத்துக் கொள்ள முடியும் என்பதாகும். மேலும் ஓர் சமூகத்தின் சுயாதீனத் தன்மையை இராணுவ ஆக்கிரமிப்பொன்றினால் பலவீனப்படுத்த முடியாது என்பதனை பறைசாற்றுகின்றது.

**நீதிக்கும் நீண்டகால சமாதானத்துக்குமான எமது நோக்குகள்**

உறுதியும் விட்டுக் கொடுப்பும் கொண்ட பலஸ்தீன் மக்களின் சாத்வீகப் போராட்டமானது இவ்வுலகிற்கு -குறிப்பாக இஸ்ரேலுக்குச் சொல்வதெல்லாம் பிராந்தியத்தில் ஏற்படும் சமாதான வெளிச்சமானது பலஸ்தீன மக்களுக்கான நிலையான பாரபட்சமற்ற நீதியை பெற்றுக் கொடுப்பதினால் மாத்திரமே சாத்தியமாகும். அது சர்வதேச சட்டங்களைக் கடைப்பிடித்து, ஐ.நா. சபையின் தீர்வுத் திட்டத்திற்கு செவிசாய்த்து 1967 இல் ஆரம்பித்த ஆக்கிரமிப்புகளை முற்றாக முடிவுக்குக் கொண்டு வருவதினூடாகவே நிலைநிறுத்தப்பட முடியும்.

கிழக்கு ஜெரூசலத்தை தலைநகராக கொண்டு நாட்டின் வளங்களை கட்டுப்படுத்துவதற்கும், வான் மற்றும் கடல்சார் எல்லைகளை கையாள்வதற்கும் (பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாஸித் தேடல்கள் (6)



# மகாஸித் என்பது உயர் விழுமியங்கள் மாத்திரமா?



ஷெய்க் அக்ரம் அப்துல் ஸமத்

மகாஸித் என்றால் என்ன என்ற கேள்விக்கான மற்றொரு பதிலாகத்தான் உண்மையில் இந்தப் பத்தியும் அமைகிறது. இங்கு குறிப்பாக மகாஸிதுஷ் ஷரீஆ என்பது உயர் விழுமியங்கள் என்ற எல்லையில் மாத்திரம் அடையாளப்படுத்தப்படக்கூடிய ஒன்றா அல்லது அதனை விடவும் வித்தியாசமானதா என்ற விடயம் அலசப்படுகிறது.

சிலர் 'மகாஸிதுஷ் ஷரீஆ' என்பதை 'ஷரீஆவின் உயர் இலக்குகள்' என்று மொழிமாற்றம் செய்கின்றனர். இந்த மொழிபெயர்ப்பு நுணுக்கமானது அல்ல என்று நான் நினைக்கிறேன். ஏனெனில் அந்த மொழி பெயர்ப்பு மகாஸிதை சில உயர் விழுமியங்களுடன் மாத்திரம் சுருக்கி விடுகிறது. உண்மையில் பிரச்சினை இருப்பது மொழிபெயர்ப்பில் மாத்திரமல்ல, மாற்றமாக சிலரது புரிதலும் கூட, மகாஸிதுஷ் ஷரீஆ என்றால் நீதி, பாதுகாப்பு, சமத்துவம் போன்ற உயர் விழுமியங்கள் மாத்திரம்தான் என்றிருக்கிறது. இதன் விளைவாக, இவை போன்ற உயர் விழுமியங்களை அடையாளம் கண்டு கொண்டுவிட்டால், இனி நாம் அல்குர்ஆன், சுன்னாவினது சட்ட வசனங்களில் பெரியளவு தங்கியிருக்க வேண்டிய அவசியமில்லை. அந்த உயர் விழுமியங்களை மையப்படுத்தி, எமது முன்னோக்கிய, அடுத்தகட்ட சிந்தனைகளை வடிவமைத்து விடலாம். எதிர்கொள்ளும் புதிய சவால்களுக்குத் தீர்வு கண்டுவிடலாம். புதிய இஜ்திஹாத்களை மேற்கொள்ளலாம் என்று நினைக்கின்றனர். புதிய இஜ்திஹாத்களுக்கும் உயர் விழுமியங்களுக்கும் சம்பந்தம் இருக்கிறது என்பதில் மாற்றுக் கருத்து இல்லை - இது தனித்துப் பேசப்பட வேண்டிய ஒரு தலைப்பு. அதாவது மகாஸிதின் பணி என்ன என்பது தனித்து ஆராயப்பட வேண்டிய ஒரு தலைப்பு. மகாஸிதைப் பயன்படுத்தி ஒரு புதிய இஜ்திஹாதை மேற்கொள்வதன் வரையறைகள் குறித்து மகாஸித் அறிஞர்கள் மத்தியில் நீண்ட விவாதம் இருக்கிறது - ஆனால் மகாஸிதுஷ் ஷரீஆ என்பதை உயர்விழுமியங்களாக மாத்திரம் வரையறை செய்யும் பார்வை தவறானது.

இந்தக் கருத்தை, மகாஸிதின் நவீன ஜாம்பவான்கள் சிலரது கருத்துக்களை மையமாக வைத்து விளக்கலாம் என்று நினைக்கிறேன்.

முதலாவது கலாநிதி தாஹா அப்துர் ரஹ்மான் அவர்களது பார்வை.[1] இவர் மகாஸித் என்ற சொல் அடிப்படையில் மூன்று கருத்துக்களைத் தருகிறது என்று விளக்குகிறார். முதலாவது கருத்து, ஒரு புனித வசனம் என்ன கருத்தைக் குறித்து நிற்கிறது. என்பது மகாஸித் என்ற வட்டத்தில் உள்ளடங்குகிறது. அதாவது, பொதுவாக மொழியில் நேரடியான வார்த்தைகளை விளங்கிக் கொள்வதற்கும், அந்த வார்த்தைகளைப் பேசியவனின் எதிர்பார்ப்பு என்ன என்பதை விளங்கிக் கொள்வதற்கும் இடையில் வேறுபாடு இருக்கிறது. அந்தவகையில் அல்குர் ஆனினதும் சரி, ஹதீஸினதும் சரி, நேரடியான வார்த்தைகளை விளங்கிக் கொள்வதை விடவும் அந்த வார்த்தைகளின் மூலம் நாடப்படுவது எது என்பதைப் புரிந்து கொள்வது, மகாஸித் என்ற சொல் உணர்த்தும் முதலாவது கருத்து. இதே கருத்தை கலாநிதி அஹ்மத் அர்ரைஸூனி அவர்களும் மகாஸிதை இரண்டு படித்தரங்களாக வகுத்து விளங்கப்படுத்தும்போது முன்வைக்கிறார்.[2] மகாஸிதுல் கலிமா - புனித வசனங்களின் மகாஸித், மகாஸிதுல் அஹ்காம் - சட்டங்களின் மகாஸித் என இரு படித்தரங்களைக் குறிப்பிட்டு, மகாஸிதுல் கலாம் என்பது, குறித்த வசனத்தின் மூலம் நாடப்படுவது எது? என்று விளங்கப்படுத்துகிறார். ஏனெனில், பொது வழக்கில், ஒருவர் ஒரு கருத்தைச் சொல்லும்போது, குறிப்பாகப் பேசலாம், பொதுவாகப் பேசலாம், நேரடியாகப் பேசலாம், சிலேடையாகப் பேசலாம். இந்த எல்லா நிலைகளிலும் அவரது மொழியைத் தாண்டி, அவரது நாட்டத்தைப் புரிந்து கொள்வது மகாஸிதுல் கலாம் எனப்படுகிறது.

இரண்டாவது கருத்து, ஒருவனது எண்ணம் அல்லது நிய்யத் எது என்பதும் மகாஸித் என்ற வட்டத்தில் உள்ளடங்குகிறது. இதனைத்தான் இமாம் ஷாதிபி அவர்கள் 'மகாஸிதுல் முகல்லப்' என்று அடையாளப்படுத்தினார்கள்.[3] அதாவது, ஒரு செயலைச் செய்கின்ற பொழுது, அதனைச் செய்கின்றவனின் உளநிலை எவ்வாறு காணப்படுகின்றது? அவன் அதன் மூலம் என்ன விளைவை எதிர்பார்க்கின்றான்? இந்த எதிர்பார்க்கப்படும் விளைவும் மகாஸித் என்ற வட்டத்தில் அடங்குகிறது. இதனை விளங்கப்படுத்தும் வகையிலேயே இமாம்கள் "விடயங்கள் அதன் நோக்கத்தைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும்" என்ற ஒரு சட்ட விதியை முன்வைத்தார்கள். அந்த வகையில் மகாஸித் என்பது, செய்கின்றவனது எண்ணம், நாட்டம் போன்றவற்றையும் பிரதிபலிக்கின்றது.

மூன்றாவது கருத்து, ஒரு விடயத்தின் நோக்கம் என்ன? அதன் நியாயம் என்ன? என்ற தேடலும் மகாஸித் என்ற வட்டத்தில் உள்ளடங்குகிறது. தற்போதைய புழக்கத்தில் மகாஸிதின் இந்த மூன்றாவது கருத்து தான் அதிகமாகப் பேசப்படுகிறது. இமாம் ஷாதிபி அவர்கள், இவ்வகை மகாஸிதுகளை 'ஷரீஆ இறக்கப்பட்டமைக்கான நேரடி மகாஸிதுகள்' என்ற தலைப்பின் கீழ் விளங்கப்படுத்துகிறார்கள்.[4]

மகாஸித் என்ற சொல் மேற்சொன்ன மூன்று கருத்துக்களையும் உணர்த்துவதாக கலாநிதி தாஹா அப்துர் ரஹ்மான் அவர்கள் கருதுகிறார்கள். அதாவது மகாஸித் என்பது மூன்று உள்ளடக்கங்களைக் கொண்டது, மகாஸிதின் பொருள் கோடல் உள்ளடக்கம், மகாஸிதின் உணர்வு அல்லது நாட்ட உள்ளடக்கம், மகாஸிதின் விழுமிய உள்ளடக்கம் என்ற சொல்லாடல்கள் மூலம் அதனைத் தெளிவுபடுத்துகிறார்கள்.

கலாநிதி தாஹா அப்துல் ரஹ்மான் அவர்களது இந்த விளக்கத்திலிருந்து பார்க்கும் பொழுது, மகாஸித் என்பதை, தனித்து உயர்ந்த இலக்குகள் அல்லது விழுமியங்கள் என்ற எல்லையில் மாத்திரம் புரிந்து கொள்ள முடியாது. மாற்றமாக அது பரந்த ஒரு பொருளை உள்ளடக்கியிருக்கிறது. ஒரு வசனத்தின் பொருள் என்ன? என்பதிலிருந்து ஷரீஆவின் உயர் விழுமியங்கள் வரை நீண்டு செல்லக் கூடியது என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

இரண்டாவது ஷெய்க் அப்துல்லாஹ் பின் பய்யாஹ் அவர்களது பார்வை.[5] இவர் மகாஸித் என்பது பல்வேறு வடிவங்களில் காணப்பட முடியும் என்கிறார். அந்தவகையில், முதலில் நேரடியான ஒரு சட்ட வடிவிலும் மகாஸித் காணப்பட முடியும். அதாவது சட்டத்தின் நோக்கம் மட்டுமன்றி நேரடியாக சட்டமே மகாஸிதாகவும் அமையும். ஒரு குறித்த சட்டம் அல்லது செயற்பாடு மனித வாழ்வில் என்றும் நிலைத்து இருக்க வேண்டும் என்று அல்லாஹுத்தஆலா கருதக்கூடியவை இந்த வகையில் அடங்கும். இவற்றை இல்லாது செய்யவோ அல்லது விட்டுக் கொடுப்பு செய்யவோ எவருக்கும் அதிகாரம் கிடையாது. வணக்க வழிபாடுகளை இவ்வகைக்கு உதாரணமாகக் கூறலாம்.

இரண்டாவது வடிவம், நோக்கங்கள், விழுமியங்கள் என்ற வடிவம். இவை நேரடியாக புனித வசனங்கள் மூலமாகவோ அல்லது அவற்றின் காரணங்கள் மீது மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் மூலமாகவோ அடையாளம்காணப்பட முடியும். இவ்வகை நேரடியாக சட்டங்களையோ அல்லது செயற்பாடுகளையோ குறிக்காமல் அவற்றின் நோக்கங்கள்எவை என்பதைக் குறிப்பவையாகும். தற்போதைய ஆய்வுகளில் மகாஸிதின் இந்த வடிவமே அதிகமாக வெளிக் கொண்டு வரப்படுகிறது.

மூன்றாவது வடிவம், எண்ணம், நிய்யத் என்ற வடிவம். கலாநிதி தாஹா அப்துல் ரஹ்மான் அவர்கள் பேசிய இரண்டாவது கருத்து இதுதான். குறித்த செயலை மேற்கொள்பவனது எண்ணம் எவ்வாறு இருக்கிறது என்பது மகாஸிதின் மற்றொரு வடிவம்.

ஷெய்க் அப்துல்லாஹ் பின் பய்யாஹ் அவர்களது விளக்கத்தில் நின்று பார்க்கின்ற பொழுது, அவர், மகாஸித் என்பதை ஒரு இலக்கு நிலையாக மாத்திரம் விளங்கப்படுத்தவில்லை. மாற்றமாக மகாஸித் என்பது ஒரு செயற்பாட்டு நிலையிலும் காணப்படக்கூடியது என்கிறார். அவர் இந்த சிந்தனையை இமாம் கஸ்ஸாலி, இமாம் கராபி, இமாம் ஷாதிபி போன்றவர்களை மேற்கோள்காட்டி விளங்கப்படுத்துவது குறிப்பிடத்தக்கது.



மூன்றாவது, கலாநிதி ஜாஸிர் அவ்தா அவர்களது பார்வை.[6] இவர் மகாஸிதை பல்வேறு வித்தியாசமான மட்டங்களில் காணப்படக்கூடிய ஒன்று என்கிறார். மகாஸித் என்பது இலக்கு நிலை என்ற மட்டத்திற்குரியது மாத்திரமன்றி, அதனைத் தாண்டி வேறுபட்ட மட்டங்களிலும் அமைகிறது என்கிறார். அதாவது குறித்ததொரு விடயத்தின் மகாஸித் எது என்பதை அடையாளம் காண்பதற்கு ஏன்? என்ற கேள்வி முக்கியமானது. இந்தக் கேள்விக்கான பதில் ஒவ்வொரு மட்டத்திலும் வித்தியாசமான வெவ்வேறு பதில்களாகவே அமைகின்றன. உதாரணமாக ரமழானில் ஏன் நோன்பு நோற்க வேண்டும்? என்ற கேள்விக்கு ஐந்து மட்டங்களில் வெவ்வேறான பதில்கள் வழங்கப்பட முடியும்.

முதலில் அடையாளம் என்ற மட்டம்: ரமழானில் ஏன் நோன்பு நோற்க வேண்டும்? என்ற கேள்விக்கான முதல் பதில் 'பிறை தென்பட்டமை' என்று அமைய முடியும். பிறை தென்படுதல் என்பது ஒரு அடையாளம். அதாவது மாதம் ஆரம்பிக்கின்றது என்பதற்கான அடையாளம். அந்தவகையில் பிறை தோன்ற முன்னர் மாதம் ஒன்று ஆரம்பிக்கப்பட முடியாது என்ற வகையில் இதுவும் ஒரு மக்ஸதாக மாறுகிறது.

இரண்டாவது சட்டம் என்ற மட்டம். ரமழானில் பிறை தென்பட்டவுடன் ஏன் நோன்பு நோற்க வேண்டும்? என்று அடுத்து ஒரு கேள்வி எழுகின்ற போது, பிறை தென்பட்டவுடன் நோன்பு நோற்பது வாஜிப் என்பது பதிலாக அமைய முடியும். இங்கு வாஜிப் என்பது ஒரு சட்டம். இது இரண்டாவது மட்டம். அடையாளம் என்ற மட்டத்தை விட உயர்ந்தது. இது கட்டாயம் கடைபிடிக்கப்பட வேண்டிய சட்டம் என்ற வகையில் இதுவும் ஒரு மக்ஸதாகிறது.

மூன்றாவது, பொது நலன்கள் என்ற மட்டம்: ரமழானில் நோன்பு ஏன் வாஜிபாகிறது? என்ற ஒரு கேள்வி அடுத்து கேட்கப்பட்டால், அதற்கான பதில் ஏழைகளது பசியை உணர்ந்து ஸதகா தூண்டப்படுதல், உணர்வுகள் கட்டுப்படுத்தப்பட்டு பாவங்கள் தடுக்கப்படுதல்' என்று அமைய முடியும். இந்தப் பதில்கள் ஒவ்வொன்றும் பரஸ்பரம் எல்லோரும் பயன்பெறக்கூடிய பொது நலன் சார்ந்தவை. இவை சமூக மட்டத்தில் என்றும் நடைபெற வேண்டியவை அல்லது சமூகத்தில் நிரந்தரமாக இருக்க வேண்டியவை என்ற வகையில் இவையும் மகாஸித்களில் ஒன்றாக மாறுகின்றன.

நான்காவது, விழுமியங்கள் என்ற மட்டம் : ரமழானில் ஏன் ஸதகா தூண்டப்பட்டு, பாவங்கள் தடுக்கப்படல் வேண்டும்? என்ற கேள்வியை அடுத்ததாகக் கேட்டுப் பார்த்தால், தக்வாவை ஏற்படுத்துதல், மனிதர்கள் மத்தியில் சமத்துவத்தைப் பேணல் என்று அதற்குப் பதிலளிக்கப்பட முடியும். தக்வா, சமத்துவம் என்பன இஸ்லாம் நிலை நாட்ட விரும்பும் உயர் விழுமியங்கள். சமத்துவம் ஒரு உயர் விழுமியம் என்பது தெளிவானது. தக்வா என்பதன் பொருள் என்ன? உண்மையில் தக்வா என்பது எந்த விதப் புறத் தூண்டுதலும் இன்றி சுயமாகச் செயற்படும் நிலையைக் குறிக்கிறது. இது ஒரு உளநிலை. அந்த வகையில் இது ஒவ்வொரு தனி மனிதனிலும் வாழ வேண்டிய ஒரு விழுமியமாகிறது. இந்தப் பண்புகள் சமூக வாழ்வில் இன்றியமையாதவை என்ற வகையில் இவை மகாஸித்களில் ஒன்றாக மாறுகின்றன.

ஐந்தாவது, அகீதா என்ற மட்டம்: நோன்பின் மூலம் தக்வாவும், சமத்துவமும் ஏன் ஏற்படுத்தப்படல் வேண்டும்? என்று அடுத்து ஒரு கேள்வி கேட்கப்பட முடியும். அதற்கான பதில் "ஏனெனில் அல்லாஹ் நீதியானவன், அருளாளன்' என்றமைய முடியும். அல்லாஹ் நீதியாளன், அருளாளன் என்பது எமது அகீதா, நம்பிக்கை. இந்த நம்பிக்கைகளின் சமூக வடிவமாகத்தான் தக்வாவும் சமத்துவமும் உலகில் நடைமுறையாகின்றது. அல்லாஹ் நீதியாளன், அருளாளன் என்று ஒரு மனிதன் நம்பிக்கை கொள்வதன் சமூக விளைவு என்ன? அல்லது நீதியினதும், அருளினதும் சமூக நடைமுறை வடிவம் என்ன? அது தான் தக்வாவாகவும் சமத்துவமாகவும் சமூக வாழ்வில் பிரதிபலிக்கிறது. அல்லாஹ் பற்றிய இந்த நம்பிக்கைகள் நிலையானவை என்ற வகையில் அவை மக்ஸதாக மாறுகின்றன.

இந்த ஐந்தாவது மட்டத்தைத் தான் பலர் 'மகாஸிதுல் அகீதா' என்று பேசுகிறார்கள். கலாநிதி அஹ்மத் அர்ரைஸூனி அவர்கள் கூறுவது போல்[7] மகாஸிதுஷ் ஷரீஆ என்று பேசப்படுவது போல் மகாஸிதுல் அகீதா என்ற பகுதியும் கட்டாயம் பேசப்பட வேண்டியிருக்கிறது. ஏனெனில், இஸ்லாம் கூறும் நம்பிக்கைகள் தனித்து மறுமை முக்கியத்தை மாத்திரம் கொண்டவை அல்ல. அவற்றிற்கு நிச்சயமாக உலக வாழ்வு முக்கியத்துவம் ஒன்றும் இருக்கிறது. உலக வாழ்வில் ஒரு மனிதனுடைய நம்பிக்கைகளாக, இவை காணப்படல் வேண்டும் என்று சொல்வதற்கு அப்பொழுதுதான் ஒரு அர்த்தம் கிடைக்கிறது. அந்த வகையில் 'மகாஸிதுல் அகீதா' என்ற பகுதியும் மகாஸித் ஆய்வுப் பரப்பில் மிகுந்த முக்கியத்துவம் பெறும் ஒரு பகுதியாகும்.

கலாநிதி ஜாஸிர் அவ்தா அவர்களது மேற்கூறப்பட்ட மகாஸித் அணுகுமுறையில், ஒரே தலைப்பின் கீழ் மகாஸித் என்பதை பல மட்டங்களில் அடையாளம் காண முடியும் என்பது விளக்கப்படுகிறது. இங்கு ஒரு புதிய இஜ்திஹாத் மேற்கொள்ளப்படும்போது, மகாஸிதின் இந்த எல்லா மட்டங்களும் கவனத்தில் எடுக்கப்படல் வேண்டும். இவற்றுக்கிடையில் முதல் நிலைப்படுத்தல் வேறுபாடுகள் நிகழ முடியும். ஆனால் எந்த ஒன்றும் புறக்கணிக்கப்படும் நிலைக்குச் செல்ல முடியாது.

கலாநிதி ஜாஸிர் அவ்தாவுடைய மகாஸித் பற்றிய பார்வையின் மூலமும் நாம் புரிந்து கொள்ளும் உண்மை என்னவெனின், மகாஸித் என்பதை நாம் வெறுமனே உயர் விழுமியங்களாகவோ இலக்குகளாகவோ மாத்திரம் நோக்கக் கூடாது. அது உயர்மட்டத்திலிருந்து கீழ் இறங்கி இன்னும் பல மட்டங்களிலும் காணப்பட முடியுமானது என்பது புரிந்து கொள்ளப்படுகிறது.

இறுதியாக, நிறைவு செய்ய முன்னர், இரண்டு விடயங்களை தொட்டுக் காட்டிச் செல்ல நினைக்கிறேன். முதலாவது, மேற்சொல்லப்பட்ட மூன்று மகாஸித் சிந்தனையாளர்களினதும் ஆய்வணுகுமுறை வித்தியாசப்பட்டிருக்கிறது. பாரிய வேறுபாடுகள் இல்லை என்றிருந்தாலும் மகாஸித் என்பது எது என்பதை வரையறை செய்வதற்கான முறைமையில் மூவரும் வித்தியாசப்படுகின்றனர். இந்த அணுகுமுறை வேறுபாடு மகாஸித் கலைக்குள்ளே மிகவும் பொதுவான ஒரு உண்மையாகும்.

ஏனெனில், மகாஸித் கலையின் உண்மையான எழுச்சி நவீன காலத்தில்தான் நிகழ்ந்துள்ளது. ஒன்றின் எழுச்சிக் காலப் பகுதியில் பல்வேறு வித்தியாசப்பட்ட அணுகுமுறைகள் காணப்படுவது இயல்பானது. அந்த வேறுபட்ட அணுகுமுறைகளுக்கிடையிலான வாதப் பிரதிவாதங்கள் செழுமையாக நடைபெறுகின்ற போது, அவை தமக்கிடையே முட்டி மோதி சில சமநிலைகளைக் கண்டடைந்து கொள்கின்றன. இஸ்லாமிய வரலாற்றில் எந்தக் கலையை எடுத்தாலும் இந்த உண்மையை நாம் அவதானிக்கலாம். உஸூலுல் பிக்ஹ், உஸூலுல் ஹதீஸ் போன்ற எந்தக் கலையிலும் ஆரம்பத்தில் பலத்த வாதப் பிரதிவாதங்களின் பின்னர்தான் நீண்ட காலத்தில் எல்லோரும் உடன்படக்கூடிய பொது உடன்பாட்டுப் புள்ளிகளை இனம் கண்டார்கள். இந்த நிலை மகாஸித் கலையிலும் யதார்த்தமானது. எனவே, இங்கு அவதானிக்கக் கூடிய வேறுபாடுகள் எதிர்மறையாகவன்றி சாதகமாகவே நோக்கப்படல் வேண்டும். மகாஸித் கலையின் நீடித்த வளர்ச்சிக்கான அஸ்திவாரமாகவே புரிந்து கொள்ளப்படல் வேண்டும்.

இரண்டாவது, இந்த மூன்று மகாஸித் சிந்தனையாளர்களது அணுகுமுறையும் சரி, அதனூடாக மகாஸித் எது என்று இனம் கண்ட முடிவுகளிலும் சரி, சில வித்தியாசங்கள் இருந்த போதிலும் மூவரும் உடன்படுகின்ற ஒரு விடயம் இருக்கின்றது. அது தான் மகாஸித் என்பது இலக்கு நிலையை மாத்திரம் குறிக்க மாட்டாது. அது மூலோபாய நிலையையும் செயற்பாட்டு நிலையும் கூட குறிக்கக் கூடியது. அதுபோல் மகாஸித் என்பது தனித்து உயர் விழுமிய நிலையை மாத்திரம் குறிக்க மாட்டாது. அதனை விடவும் தாழ்ந்த பல்வேறு மட்டங்களிலும் அது பிரதிபலிக்க முடியும் என்பதில் மூவரும் உடன்படுகின்றனர். அந்தவகையில் மகாஸித் என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்வதில் இந்த வரையறையும் மிகவும் முக்கியமானது.

அல்லாஹ் எம்மை அங்கீகரிப்பானாக!


1. கலாநிதி தாஹா அப்துல் ரஹ்மான், தஜ்தீதுல் மன்ஹஜ் பீ தக்வீமித் துராஸ். பதிப்பகம் : மர்கஸூல் தகாபி அல் அரபி, இரண்டாம் பதிப்பு, பக்கம் 93 - 102.
2. கலாநிதி அஹ்மத் அப்துல் ஸலாம் அர்ரைஸூனி, முஹாழராத் பீ மகாஸிதிஷ் ஷரீஆ, பதிப்பகம் : தாருல் கலிமா, கெய்ரோ. இரண்டாம் பதிப்பு 2013, பக்கம் 9 - 20.
3. அபூ இஸ்ஹாக் அஷ்ஷாதிபி, அல் முவாபகாத் பீ உஸூலிஷ் ஷரீஆ, பதிப்பகம் : தாருல் பிக்ரில் அரபி, இரண்டாம் பாகம், பக்கம் 333.
4. முன்னைய அதே நூல், அல்முவாபகாத், பக்கம் 8 - 62.
5. ஷெய்க் அப்துல்லாஹ் இப்னுஷ் ஷெய்க் அல் மஹ்பூல் பின் பய்யாஹ், மஷாஹித் மினல் மகாஸித், தாருல் வுஜூஹ் - ரியாத், சவூதி அரேபியா, இரண்டாம் பதிப்பு 2012, பக்கம் 13 - 33.
6. கலாநிதி ஜாஸிர் அவ்தா, முகர்ரர் திராஸாத் உல்யா ஹௌலல் மகாஸித் வல் இஜ்திஹாத், யூடியூப் தொடர் உரைகள் 2012, உரை இல - 01, 02.
7. கலாநிதி அஹ்மத் அர்ரைஸூனி, அத்தரீஆ இலா மகாஸிதிஷ்ஷரீஆ, பதிப்பகம் தாருல் கலிமா, முதலாம் பதிப்பு 2016, பக்கம் 41 - 76.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பீரப் பாடசாலைகள்
# The Smart School



இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எகிப்தின் அலெக்சாந்திரியா நகரில் பாடசாலைக் கல்வி முறை தொடங்கியதிலிருந்து இன்று வரை கல்விச் சீர்திருத்தங்களும் யோசனைகளும் முன்வைக்கப்பட்டு வந்துள்ளன. மாற்றமடையும் சமூகப் பொருளாதார தேவைகளுக்கு ஏற்ப கல்வியிலும் மாற்றங்கள் கோரப்பட்டு வந்தன. காலாகாலம் பாடசாலைக் கல்வி குறித்த சீர்திருத்தங்களை சர்வதேச நாடுகள் நடைமுறைப்படுத்தி வந்துள்ளன.

ஒரு காலத்தில் பாடசாலை முறைமை நாம் எதிர்பார்க்கும் ஆளுமைகளை உருவாக்கும் திறனற்றவை. எனவே, அவை மூடப்பட வேண்டும் அல்லது நீக்கப்பட வேண்டும் என்ற சிந்தனை முன்வைக்கப்பட்டது. இதனை பள்ளி நீக்கக் கொள்கை (Concept of De schooling) என்பர். ஐவன் இலிச் என்ற கல்வியியலாளர் இவ்வெண்ணக்கருவை முன்வைத்த போது அவரைச் சுற்றி விமர்சனங்கள் எழுந்தன.

இன்னொரு காலத்தில் திறந்த பாடசாலை எண்ணக்கரு முன்வைக்கப்பட்டது. வரண்முறையான சட்டதிட்டங்கள் மற்றும் கட்டடங்களிலான வரையறுப்புகள் ஏதும் இல்லாமல், மாணவர்கள் திறந்த இடங்களிலிருந்து சுதந்திரமாகக் கற்க வேண்டும் என்பதே திறந்த வெளிப் பாடசாலை எண்ணக்கருவின் நோக்கமாகும்.

பாடப் புத்தகங்களை முதன்மைப்படுத்துவதை விட எழுத்து, கணிதம், ஆய்வு, அறிவியல் போன்ற துறைசார் திறன்களை வளர்ப்பதற்கு திறந்த பாடசாலைக் கல்வி முறை வழிகோலும் என பரிந்துரைக்கப்பட்டது. தற்போது கம்பீரப் பாடசாலை (Smart School) எண்ணக்கரு விரிவாகப் பேசப்படுகின்றது.

20 ஆம் நூற்றாண்டின் முதல் கூறுகளிலிருந்து அறிவியலுக்கு நிகராக பாரிய தொழில்நுட்ப வளர்ச்சி முழு வேகத்துடன் நிகழ்வதை நாம் அறிவோம். தொழில்நுட்பம் ஊடுருவாத எந்தவோர் துறையும் இல்லை எனும் அளவுக்கு மனித குலத்தை பிரம்மிக்கச் செய்யும் அளவு தொழில்நுட்ப சாதானங்கள் அபரிமிதமாக வளர்ச்சியடைந்துள்ளன.

பாடசாலைக் கல்வியிலும் அதிகபட்சம் தொழில்நுட்பத்தைக் கையாள வேண்டும் என்பதே கம்பீரப் பாடசாலை எண்ணக்கருவின் பின்புலமாகும். வகுப்பறைக் கற்றல்-கற்பித்தல் நடவடிக்கைகளில் மரபு வழிமுறைமைகளை கைவிட்டு, புத்தம் புது தொழில்நுட்ப சாதனங்களை அதிகபட்சம் பயன்படுத்த வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது.

அதன்படி, கணினி, இணையம், மின்னஞ்சல், குறுந்தட்டு, இறுவட்டு, பென்ட்ரைவ் போன்றவற்றை வகுப்பறைக் கற்றல் கற்பித்தலில் கையாள்வதன் மூலம் பாடநூல்கள், கரும்பலகை, வெண்பலகை, பேனை, பென்சில், பயிற்சிப் புத்தகங்கள் விடைப்பெற்று விடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பொருளாதார வளர்ச்சியின் மூல விசையாக கல்வியும் அறிவும் மாற்றப்பட வேண்டும் என்று அபிவிருத்திக் கோட்பாட்டாளர்கள் வலியுறுத்தி வருகின்றனர். உலக மயமாதல் சூழ்நிலையில் பேசப்படும் அறிவுப் பொருளாதாரம் (Knowledge Economy) ஒரு நாட்டின் கல்வித் திட்டம் பொருளாதார அபிவிருத்தியை மூல இலக்காகக் கொள்ள வேண்டும் என்று பரிந்துரை செய்கின்றது.

கல்வித் துறையில் காணப்படும் குறைபாடுகள், பிரச்சினைகள், சவால்களைத் தாண்டிச் செல்வதற்கான வழிகளில் ஒன்று, கல்வியை தொழில்நுட்பமயமாக்குவதும், இன்னொரு புறம் தொழில்நுட்ப சாதனங்களின் வளர்ச்சிக்கு கல்வியை முதலீடாகக் கொள்ள வேண்டும் என்றும் கம்பீரப் பாடசாலை எண்ணக்கரு வலியுறுத்துகின்றது.

சமகாலத்தில் மலேசியா, சீனா, சிங்கப்பூர், ஜப்பான் ஆகிய நாடுகள் கம்பீரப் பாடசாலை எண்ணக்கருவை சிறப்பாக முன்னெடுத்து எதிர்பார்த்த சாதனைகளையும் எட்டியுள்ளது. இந்தியாவில் தகவல் தொழில்நுட்ப வேலைத் திட்டத்தின் கீழ் கம்பீரப் பாடசாலை முறைமை முன்னெடுக்கப்படுகின்றது.

ஆரம்ப நிலை வகுப்பறைகளில் கம்பீரப் பாடசாலை எண்ணக்கரு எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதை கல்வியியலாளர்கள் விளக்கியுள்ளனர். பாரம்பரிய முறைகளுக்கு மாற்றமாக ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கு திறந்த கல்விச் சூழலை உருவாக்குவதே இதன் நோக்கமாகும். பிள்ளைகள் தமக்கு வழங்கப்படும் வகுப்பறை வேலைகளைச் செய்துகொள்ள சாதனங்களையும் கருவிகளையும் அதிகம் பயன்படுத்துவதற்குத் தூண்டப்படுவர். அதன் மூலம் பொருட்கள், எண்கள், எழுத்துக்கள் என்பவற்றுக் கிடையிலான வேறுபாடுகளை அறிவர். பொருட்களை சொற்களோடும், சொற்களை ஒலியோடும் இணைத்துக் கொள்வர். ஆரம்ப நிலை மாணவர்கள் தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்துவதன் மூலம் பின்வரும் ஆற்றல்களைப் பெறுவர்.

1. மேற்கூறப்பட்ட வேலைகளைச் செய்வதற்குத் தேவையான முறையில் கணினிகளைப் பயன்படுத்தல்.

2. சிறுபிள்ளைகளுக்குப் பொருத்தமான விஷேட உள்ளீட்டுக் கருவிகளை இயக்குதல். கணினி, எழுத்துப் பலகை (KeyBoad), இயக்கி (Mouse), Headphone.

3. சுயாதீனமாகக் கற்போருக்கான திறன்களையும் மனப்பாங்குகளையும் பெறுவர்.

இடைநிலை மாணவர்கள் வழமையான பாடங்களையே கற்பர். ஆயினும் அவர்கள் கற்பதற்கு சில புத்தாக்க முறைகளைக் கையாள்வர். அவற்றைப் பின்வருமாறு விளக்கலாம்.

1. ஆக்கபூர்வமான எழுத்துக்கள், சுவரொட்டித் தயாரிப்பு போன்றவற்றை ஏற்படுத்துவர்.

2. இணையத்தள பக்கங்களை உருவாக்கி, தமது சிந்தனைகளைப் பரப்புவர்.



இத்தகைய புத்தாக்க வழிமுறைகள் மூலம் இடைநிலை மாணவர்கள் சிற்சில திறன்களைப் பெற்றுக் கொள்வர்.

இணையத்தளங்களைத் திறந்து பார்த்தல், இலத்திரனியல் அஞ்சல்களை அனுப்புதல், அட்டவணைகளையும் வரைபடங்களையும் உருவாக்குதல், சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும் ஆற்றல் பெறல் என்பன அதில் அடங்கும்.

உயர் இடைநிலை மாணவர்களைப் பொறுத்தவரை இத்தகைய அனைத்துத் தொழில்நுட்பத்தையும் அவர்கள் சிறப்பாகப் பயன்படுத்துவர். புத்தாக்கத்தையும் தலைமைத்துவத்தையும் வழங்குவர். கிடைக்கத் தக்க அனைத்து தகவல் தொழில்நுட்ப வசதிகளையும் பயன்படுத்துவர். தமது பாடத் திட்டம் தொடர்பான மேலதிகக் கட்டுரைகளை இணையத் தளங்களிலிருந்து பதிவிறக்கம் செய்வர். இணையங்களில் புதுப் புது கற்றல் மூலாதாரங்களைக் கண்டுபிடிப்பர். அவற்றை பதவிறக்கம் செய்து பாடப் புத்தகங்களோடு சேர்த்துக் கற்பர்.

கம்பீரப் பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களும் சாதாரண பாடசாலை ஆசிரியர்கள் போன்றவர்கள் அல்லர். அவர்கள் பல்வேறு கற்றல் தொழில்நுட்பங்களை அறிந்திருக்க வேண்டும். வகுப்பறைக் கற்பித்தலில் புதுப் புது நுட்பங்களையும் முறைமைகளையும் புகுத்தும் ஆற்றல் பெற்றிருக்க வேண்டும். மாணவர்களுக்குரிய ஏராளமான கற்றல் சாதனங்களை இணையங்களில் காண்பிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

மாணவர்களுக்கு வழங்கப்படும் செயற் திட்டங்களுக்கு (Projects) வழிகாட்டும்போது தொழில்நுட்ப சாதனங்களைக் கையாள்வதற்கு ஊக்கமளிக்க வேண்டும்.

கம்பீரப் பாடசாலை எண்ணக்கரு 1990 இன் ஆரம்பத்திலேயே மலேசியாவில் அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது இவ்வேலைத் திட்டம் அந்நாட்டில் பூரணப்படுத்தப்படும் நிலையில் உள்ளது. ஜப்பான் சிங்கப்பூர் ஆகியன கம்பீரப் பாடசாலைத் திட்டத்தில் வெற்றி பெற்றுள்ளன.

கொழும்பில் ஒரு தனியார் வணிக வங்கியின் அனுசரணையொடு 65 பாடசாலைகள் கம்பீரப் பாடசாலைத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இலங்கையிலுள்ள 10200 அரச பாடசாலைகளும் கம்பீரப் பாடசாலைத் திட்டத்திற்கு உள்வாங்கப்பட இன்னும் எத்தனை ஆண்டுகள் செல்லுமோ தெரியவில்லை.




உளநலம் கொண்ட ஒருவன் எத்தகைய பண்புகளோடு இருக்கின்றான் என்பதை உள மருத்துவர்களும் உளவியலாளர்களும் அடையாளப்படுத்தியுள்ளனர். இத்தகைய பண்புகள் நிரம்பப் பெற்றவர்கள் முழு நிறைவான உளநலத்தோடு வாழ்கின்றனர். இப்பண்புகள் குறைவாகக் காணப்படுபவர் அல்லது இதற்கு மாற்றமான பண்புகள் கொண்டோர் உளநலக் குறைபாடு உள்ளவர்கள் என்று அடையாளப்படுத்தப்படுகின்றனர்.

இந்தவகையில் உளநலம் கொண்டவர்களின் பண்புகளை பின்வருமாறு பட்டியல்படுத்தலாம்.

**1. உணர்ச்சிச் சமநிலை (Emotional Balance)**

உளநலம் கொண்டோர் தமது உணர்ச்சிகளை முறையாக வெளிப்படுத்துவர். ஏனையோரின் உணர்வுகளையும் மதித்துச் செயல்படுவர். அசாதாரண உணர்ச்சிக் கொந்தளிப்புக்கு உள்ளாக மாட்டார்கள்.

**2. பொறுப்பேற்றல் (Responsible Sense)**

தன்னுடைய பொறுப்புக்களை ஏற்று, சொந்தமாகச் செயலாற்றுவர். பொறுப்புக்களை தட்டிக் கழிக்காமை, அவற்றை நிறைவேற்றுவதற்கு ஏனையவர்களை நம்பியிருக்காமை, இவர்களிடம் காணப்படும் முக்கிய பண்புகளாகும்.

**3. தனக்கேற்ற இலட்சியம்**

தனது திறமைகளை அறிந்து, அவற்றுக்கேற்றவாறு இலட்சியங்களையும் அபிலாசைகளையும் வளர்த்துக் கொள்வர்.

**4. தாங்கும் ஆற்றல்**

மனக்கவலை, ஏமாற்றம், மன அழுத்தத்தின் போது அசாதாரண எதிர்வினைகளை ஆற்றாமல் அவற்றைக் கவனமாக எதிர்கொண்டு தாங்கும் ஆற்றல் இவர்களிடம் இருக்கும்.

**5. பிரச்சினை தீர்க்கும் திறன்**

வாழ்க்கையில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து தானே முடிவெடுத்து அவற்றைக் கட்டுப்படுத்தும் ஆற்றலைக் கொண்டிருப்பர். பிரச்சினைகளிலிருந்து தப்பிக்கவோ தற்காப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவோ மாட்டார்கள்.

**6. சமூக உறவு**

பிறரோடு நன்கு பழகும் தன்மை உள்ளவர்களாகவும் இணங்கிச் செல்லும் தன்மை உள்ளவர்களாகவும் இருப்பர்.

**7. சுய அறிவு (Self Awareness)**

தனது பலம், பலவீனம், வாய்ப்புகள், அச்சுறுத்தல்கள் என தன்னைப் பற்றிய முழுமையான அறிவு கொண்டிருப்பர். அதில் தனது மனவெழுச்சி மட்டம், இயலாமைகள், இயலுமைகள் பற்றிய அறிவும் உள்ளடங்கும்.

**8. நெகிழும் தன்மை**

எந்த சூழ்நிலையிலும் அதன் மாறுபாடுகளுக்கு ஏற்ப நல்ல கருத்துக்களை இயல்பாகவே ஏற்றுக் கொண்டு, நற்பண்புகளுக்கு தகுந்தாட் போல தன்னை மாற்றிக் கொள்ளக் கூடியவராக இருப்பார்.

**9. நுண்ணறிவு**

தனது செயல்பாடுகளின் சரி-பிழை, நியாயம்-நியாயமின்மைகள் குறித்த உள்ளார்ந்த தெளிவும் அறிவும் இருக்கும்.

**10. இயல்பான வாழ்வு**

செயற்கை மற்றும் போலிகளற்ற மெய்யான வாழ்க்கையொன்றை வாழ்பவராக இருப்பார். வினோதமான கற்பனைகள், இலட்சியவாதங்களிலிருந்து விலகியிருப்பார்.

**11. போதிய நினைவாற்றல்**

[illegible] போதிய நினைவாற்றல் உள்ளவராக இருப்பார். அசாதாரண நினைவிழப்பு, உளநலக் கோளாறின் அறிகுறிகளில் ஒன்றாகும்.

**12. நேர்முகமான சிந்தனை**

உளநலம் கொண்ட ஒருவர் வாழ்வின் அநேக அனுபவங்களிலும் சந்தர்ப்ப சூழ்நிலைகளிலும் நேர்முகமான சிந்தனை கொண்டவராக இயங்குவார்.

**13. சுயகட்டுப்பாடு**

அசாதாரணம், எதிர்பாராத சூழ்நிலைகளில் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் ஆற்றல் உள்ளவராக விளங்குவார். குறிப்பாக பாவச் செயல்கள், குற்றச் செயல்களில் ஈடுபடும் தருணங்களில் அவற்றிலிருந்து விலகி, தன்னைக் கட்டுப்படுத்தும் இயலுமையைக் கொண்டிருப்பார்.

**14. வாழ்க்கைத் தத்துவம்**

தனக்கொரு வாழ்க்கைத் தத்துவத்தை வரித்துக் கொண்டு, அதன்படி செயல்படுவர். தனது நடத்தைகளையும் செயல்பாடுகளையும் அதற்கேற்ப அமைத்துக் கொள்வர்.

**15. நியம சிந்தனை**

சாதாரண சிந்தனைப் போக்குள்ளவர்களாக இருப்பர். சூழவுள்ள மனிதர்கள் வித்தியாசமாக நோக்கும் சிந்தனைப் பாங்கைக் கொண்டிருக்க மாட்டார்கள்.

**16. சட்டத்தையும் ஒழுங்கையும் மதித்தல்**

தான் வாழும் நாட்டின் சட்டத்தையும் ஒழுங்கையும் மதித்துச் செயல்படுவது உளநலம் கொண்ட ஒருவரின் முக்கிய பண்பாகும். சட்டங்களை மீறிச் செயல்பட வேண்டும் என்ற எண்ணம் மனநலம் பாதிக்கப்பட்ட ஒருவரின் அடையாளமாகும்.

**17. அக்கறையும் ஆர்வமும்**

வாழ்க்கையில் மிகுந்த பற்றுள்ளவராகவும் ஆர்வமுள்ளவராகவும் இருப்பர். ஒவ்வொரு நிகழ்வையும் ஆர்வத்துடன் எதிர்கொள்வர்.

இவற்றுக்குப் புறம்பான பண்புகளான சுயவிழிப்பின்மை, நேர்-எதிர் சிந்தனை, நித்திரையில் குழப்பம், சமூக உறவுகளிலிருந்து விலகல், அதிகம் தனிமையை நாடல், எதிலும் திருப்தியின்மை, பிறரில் தங்கியிருத்தல், எதிர்பார்ப்பின்மை, அசாதாரண நினைவிழப்பு, மாயப் புலன்கள், யதார்த்த உலகிலிருந்து விலகுதல், உளநெருக்கீடு, மனச் சோர்வு, தற்கொலை உணர்வு, சமநிலையற்ற மனவெழுச்சி, பசியார்வத்தை இழத்தல் என்பவை ஒருவர் உள ஆரோக்கியத்தை முழுமையாகவோ பகுதியாக இழந்திருக்கிறார் என்பதற்கான பிரதான அடையாளங்களாகக் கொள்ளப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுநலவாய... (01 ஆம் பக்கத் தொடர்)

முறைகள் தொடர்பில் இன்று வரையில் எவ்வித தகவல்களும் திரட்டப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ குறித்த வங்கிக் கணக்கு குறித்து பாராளுமன்றில் கேள்வி எழுப்பிய போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில், பொதுநலவாய விளையாட்டு விழா (Commonwelth Game) தொர்பில் தற்போது இலங்கை வங்கியில் கணக்கொன்றில்லை என்பதுடன், ''சீ.டபிள்யு. பீ. ஹம்பாந்தோட்டை 2018 பிரைவட் லிமிடட்'' எனும் பெயரில் நடைமுறைக் கணக்கொன்றும் 11 மில்லியன் ரூபா வைப்பில் நிலையான கணக்கொன்றும் முன்னெடுத்துச் செல்லப்பட்டுள்ளது. பொதுநலவாய விளையாட்டுப் போட்டியை 2018 ஆம் ஆண்டில் ஹம்பாந்தோட்டையில் நடாத்தும் உரிமையை பெறுவதற்கான விலை மனுக்கோரல் இணைப்பை தயாரிப்பதே இக்கணக்கின் நோக்காக இருந்துள்ளது.

இதன் நடைமுறைக்கணக்கு 2010.11.24 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், நிறுவனத்தின் ஆலோசனைப்படி அக்கணக்கு 2015.05.29 ஆம் திகதி மூடப்பட்டுள்ளது. 2012.06.06 ஆம் திகதி 11 மில்லியன் ரூபாவினால் நிலையான கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அது 7 நாட்களுக்குள் மூடப்பட்டுள்ளது. இக்கணக்கிற்கு அரசாங்கம் மற்றும் அரசாங்க நிறுவனங்களினால் 190.38 மில்லியன் ரூபா நிதி வைப்பிடப்பட்டுள்ளது. நடைமுறைக் கணக்கிற்கு வைப்புச்செய்யப்பட்டுள்ள மொத்தப் பணத்தொகை 708.62 மில்லியன்களாகும்.

ஒரு சில பண வைப்பாளர்கள் தமது வைப்புக்களின் பெயரை குறிப்பிடவில்லை எனவும், காசுக்கட்டளையினூடாக செலுத்தப்பட்டுள்ள வைப்புக்களின் பெறுமதி தொடர்பிலான தகவல்களை நீதி மன்ற உத்தரவின்றி பெற்றுக்கொள்ள முடியாதென்றும் அவர் தெரிவித்தார்.

இக்கணக்கில் ஸ்ரீ லங்கா டெலிகொம் நிறுவனம் 10 மில்லியன் ரூபாவையும், மொபிடெல் நிறுவனம் 5 மில்லியன் ரூபாயையும், கடற்படை விளையாட்டு நிதியம் 297350 ரூபாவையும், பீபல்ஸ் மர்சன்ட் நிறுவனம் 5 மில்லியன் ரூபாவையும், விளையாட்டு அமைச்சு 10 மில்லயன் ரூபாயையும் மற்றும் இன்னும் பல நிறுவனங்கள் அதிகூடிய நிதித்தொகையை காசோலை மூலம் வைப்புச்செய்துள்ளன. விளையாட்டு அமைச்சு மேற்கொள்ள வேண்டியிருந்த விடயத்தை சீ.டபிள்+.பீ ஹம்பாந்தோட்டை 2018 எனும் தனியார் கம்பனியொன்றின் மூலம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனத்திற்கு 200 மில்லியன் ரூபா அரச நிதியும் பல்வேறு நிறுவனங்களிலிலிருந்து 700 மில்லியன் ரூபா பணமும் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. எனினும் செலவு செய்யப்பட்ட விபரங்கள் பற்றிய தகவல்கள் இன்றுவரையில் இல்லையென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## சுஜீவ முன்வைக்கும்... (01 ஆம் பக்கத் தொடர்)

தனது மனைவிக்கு ஜனாதிபதிப் பதவியை வழங்கப் பார்த்தார். மஹிந்த ராஜபக்ஷ இதைவிட வேறொரு வித்தியாசத்தையும் செய்ய முனையவில்லை. நாட்டை தமது குடும்பத்தின் சொத்தாக மாற்றி, நாமலுக்கு பட்டாபிஷேகம் செய்யப் பார்த்தார்.

தற்பொழுது ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள் பிணைமுறி ஆணைக் குழுவுக்கு எதிராக விமர்சனக் கருத்துக்களை முன்வைத்து வருகிறார்கள். இது விடயத்தில் அமைச்சர் சுஜீவ சேனசிங்க ஜனாதிபதியையும் குற்றஞ் சுமத்துகிறார். பிணைமுறி ஊழல் தொடர்பிலுள்ள ஆர்வம் ஏன் ஏனைய குற்றச் செயல்கள் தொடர்பில் இல்லையெனவும் கேள்வியெழுப்புகிறார். ஆணைக்குழுக்கள் அமைத்து குற்றங்கள் கண்டறியப்படுவதில்லை என நாம் அவருக்கு கூறுகிறோம். பொலிஸ், இரகசிய பொலிஸ் உள்ளடங்கும் சட்டம், ஒழுங்கு அமைச்சும் சட்டமா அதிபர் உள்ளடங்கும் நீதியமைச்சும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்களின் கீழ் உள்ளது. அப்படியென்றால் நீங்கள் குறிப்பிடும் குற்றங்களை கண்டறியுங்கள் எனக் குறிப்பிட்டார்.

ஏன் இந்தக் குற்றச்சாட்டுக்களை முன்னர் முன்வைக்கவில்லை? தனக்கு குற்றம் சுமத்தப்பட்டமையினாலேயே சுஜீவ சேனசிங்க இந்தக் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார். தம்பி, தம்பி என்று அவர் நாமலிடம் சட்டத்துறையுடன் தொடர்பான வினாக்களை தொடுக்கிறார். அண்ணன் தம்பிமார் ஒன்றாக இருக்கும்போது ஏன் இவற்றை கேட்கவில்லை? ஜனாதிபதிக்கு விடுக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கு அவரும் பதிலளிப்பார் என்று நினைக்கிறோம். இவ்வாறு எல்லோரையும் பாதுகாத்துக் கொண்டு முன் செல்வதா என்பது தொடர்பில் ஐ.தே.க. ஒரு முடிவை எடுக்க வேண்டும். முன்பு இவர்கள் ஊடகங்களின் முன்னிலையில் சிங்கம் போல் பேசினார்கள். ஆனால் தற்போது பேச்சளவில் மாத்திமே, செயலில் இல்லை என்பதை அவர்கள் நிரூபித்துக் கொண்டுள்ளார்கள் எனவும் தெரிவித்தார்.

## மொழி ஒரு ஆயுதம்... (07 ஆம் பக்கத் தொடர்)

இஸ்லாத்தில் வன்முறை கிடையாது. அது யாரையும் ஒதுக்கி விடும் மார்க்கமல்ல. இது வன்முறை படைத்த மார்க்கமல்ல என்பதை நாம் உரக்கச் சொல்ல வேண்டும். இஸ்லாம் என்றால் என்ன? அதன் சட்ட திட்டங்கள் என்ன என்பதை பகிரங்கமாகச் சொல்ல வேண்டும்.

குறிப்பாக மாற்று மொழிகளில் இஸ்லாமிய விடயங்கள் சொல்லப்பட வேண்டும். பத்திரிகையாளர் மாநாடு நடாத்தப்படுவது போன்று சிங்கள மொழியில் இஸ்லாமிய விடயங்கள் சொல்லப்பட வேண்டும். சிங்கள மொழியில் புத்தரைப் பற்றியும் முஸ்லிம் கவிஞர்கள் காப்பியங்களை எழுத வேண்டும். அவர்களுடைய இலக்கிய மரபுகளையும் எமது கவிஞர்கள் பாட வேண்டும். நாம் அடுத்த இன மக்களுடன் ஒன்றித்து போக வேண்டும். அவர்களுடைய விவகாரங்களில் நுழைவதற்கான பாதைகளையே நாம் தேட வேண்டும். அதுவல்லாமல், அவர்களை விட்டு விலகுவதற்கான வழிகளை தேடக் கூடாது. மதங்களை ஒப்பிட்டுப் பார்த்தால் பெரும்பாலான விடயங்கள் ஒன்றாகவே இருக்கும். அவை ரயில் தண்டவாளங்களை போன்றிருக்கும். சிங்கள மக்களில் சரித்திரம் படைத்த சிலர் இருப்பார்கள். அவர்கள் தொடர்பில் கவிதை, காப்பியங்களை வடியுங்கள். இலங்கையிலுள்ள அறிஞர்கள் நெருக்கத்திற்கான வழியை ஏற்படுத்த வேண்டும். அது மொழியின் மூலமாகவும் இலக்கியத்தின் மூலமாகவும் வர வேண்டும். அதுவே புரட்சிகரமான மாற்றத்திற்கு வழிவகுக்கும்.

- **தற்போது இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியில் எத்தனை எம்.பிக்கள் உள்ளார்கள்?**

எமது கட்சியில் 3 எம்பிக்கள் உள்ளார்கள். தமிழ் நாட்டில் ஒருவரும் இல்லை. ராஜ்ய சபாவில் ஒருவரும் லோக சபாவில் இருவரும் உள்ளார்கள். ஏனையவர்கள் முன்னாள் எம்பிக்கள். தேசிய ரீதியில் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்துள்ளோம்.

## 382 ஆவது இதழில்.... (03 ஆம் பக்கத் தொடர்)

அல்லாஹ்வின் உயர்ந்த உதவியுட னேயே நாம் இந்த வளர்ச்சியை அடைந்திருக்கிறோம். அல்ஹம்து லில்லாஹ். இந்த சந்தர்ப்பத்தில் எமக்கு என்றும் ஆதரவாக இருந்து வரும் வாசகர்கள், பத்திரிகையை வீடு வீடாகச் சுமந்து சென்று விற்பனை செய்கிற நமது சகோதரர்கள், விற்பனை முகவர்கள், அச்சக உரிமையாளர்கள், நெருக்கடியான நேரங்களில் நிதியுதவி வழங்கியோர், வெளிநாடுகளில் வசிக் கும் நமது அபிமானிகள், ஆசிரிய பீடத்திலும் வெளியீட்டுப் பிரிவிலும் பணிபுரிந்த நண்பர்கள், பத்தி எழுத்தாளர்கள்... என்று ஒவ்வொரு தனிநபரது உழைப்பையும் ஈடுபாட்டையும் மிகுந்த நன்றியுடன் மனங்கொள்கிறோம். இறைவன் உங்கள் அனைவருக்கும் அருள் புரிந்து, உயர்ந்த நற்கூலிகளைச் சொரிவானாக.

இந்த வகையில் இது ஒரு கூட்டு முயற்சியாகும். பலரது உழைப்பின்றி இது ஒருபோதுமே சாத்தியப்பட்டிருக் காது. இந்தப் பாதையில் எதிர்கொண்ட இழப்புகளையும் வலிகளையும் சகிப்புணர்வோடு பொறுத்துக் கொண்ட உங்கள் அனைவரையும் நாம் மிக மேலாய் மதிக்கிறோம்.

ஆயினும், போதும் என்று திருப்தியடைவது பின்னடைவுக்கே இட்டுச் செல்லும். நமது பாதை மிகவும் நீண்டது, துயரங்கள் நிறைந்தது. நாம் ஆற்ற வேண்டிய பணிகள், அடைய வேண்டிய இலக்குகள் இன்னும் மீதமிருக்கின்றன.

நமது கனவுகளைக் காரிய சாத்தியப்படுத்துவதற்காய்த் தொடர்ந்தும் உழைப்போம்.

## பலஸ்தீன.... (11 ஆம் பக்கத் தொடர்)

கட்டுப்படுத்துவதற்குமான பூரண உரிமையைப் பெறுவதும் எமது இலக்குகளில் ஒன்றாகும். மேலும் 1967 இல் இருந்து சிறைப்பிடிக்கப்பட்ட 10 இலட்சத்திற்கும் அதிகமான அரசியல் கைதிகளின் விடயத்திலும் அவர்களின் விடுதலையும் எமது திண்ணமான கோரிக்கைகளாகும். ஏழு இலட்சத்திற்கும் அதிகமான அகதிகளினது சுயாதீன போக்கிற்கு இஸ்ரேல் தீர்வுத் திட்டங்களை முன்வைக்க வேண்டும் என்பதனை மீண்டும் வலியுறுத்தும் விடயமாகும்.

இனவெறியை உள்ளடக்கிய இஸ்ரேலிய பிரஜாவுரிமைச் சட்டங்களின் மூலம் எமது குடும்பங்கள் பிரித்தாளப்படுவதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. எமது இளம் சமுதாயத்தின் ஆளுமைகளை விருத்தி செய்வதன் மூலம் பல்வேறு துறைசார் விடயங்களில் அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட பலஸ்தீன நாடொன்றை உருவாக்குவதே எமது இறுதி இலக்காகும்.

**பலஸ்தீனர்களின் உரிமைகளை ஏற்றுக் கொள்ளலும் மன்னிப்புக் கோரலும்**

பெல்போர் பிரகடனத்திற்கான ஒரு பரிகாரமாக, பலஸ்தீனத்தை குறைந்தது ஒரு மானில அரசாக ஏற்றுக் கொண்டுள்ளமையும் ஐ.நா. சபையின் அங்கத்துவமற்ற அரசாகவும் 2012.11.29 இல் அங்கீகரித்தமை பலஸ்தீனமானது உலகின் பல ஒப்பந்தங்களில் பங்குகொள்வதற்கும், சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நீதி கோருவதற்கும் வழிவகுத்துள்ளது. இஸ்ரேலின் நூற்றாண்டு அடக்குமுறைகளினூடாக நாம் வீழ்ந்து விடவில்லை. மாறாக உத்வேகத்துடன் எழுந்து நிற்கின்றோம் என்பதனை இது காட்டுகின்றது. தொடர்ச்சியாக எமது உரிமைகளை 1967 இல் இஸ்ரேல் கொண்டு எல்லைகளினூடாக நிறுவுவதன் மூலம் வென்றெடுப்போம்.

இச்செயற்பாடுகள் ஓர் தொடர்ச்சியாக அமைய வேண்டும். மேலும் அது இரு தரப்புகளிடையேயும் பாதுகாப்பான அங்கீகாரத்தினூடாக நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். ஒரு சமாதானப் பொறிமுறையோ அல்லது இணக்கப்பாடோ ஒரு சமூகத்தைப் பாதிப்பதாக எவ்வாறு அமைய முடியும்?

சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் சுலோகமான 'Ergo Omnes' அதாவது ''அனைவருக்கும் உறுதி செய்தல்'' என்ற வாசகத்திற்கிணங்க சர்வதேச சமூகமானது எங்களுடைய உரிமைகளை உறுதி செய்வது அதன் தலையாய கடப்பாடாகும். ஆகவே நாங்கள் இரு நாட்டுக் கோரிக்கைக்காக ஆதரவு வழங்கிய நாடுகளை அவர்களின் போலிக் கோஷங்களை நிறைவேறுவதற்காக அழைக்கின்றோம். இவ்வேளையில் பிரான்சின் சமாதான மாநாட்டின் மூலம் சந்தித்த ரஷ்ய, சீன மற்றும் அமெரிக்க தலைவர்களின் சமாதானத்திற்கான முனைப்பை நாங்கள் பாராட்டுகின்றோம். குறிப்பாக அமெரிக்கா ஜனாதிபதியின் கூற்றான 'Ultimate Deal' ஐ நாங்கள் வரவேற்கின்றோம். அது சர்வதேச சட்டங்களையும் மக்களின் அபிலாஷைகளையும் மதிக்கும் விதத்தில் அமைந்தால் எமக்கு எந்த முரண்பாடும் கிடையாது.

பலஸ்தீனத்தின் அபாயகரமான நிலையையும் அது ஒரு காத்திரமான தீர்வுத் திட்டத்தை உடனடியாக வேண்டி நிற்கின்ற நிலையில், சர்வதேச சமூகம் எமக்கு வழங்குகின்ற பாதுகாப்பையும் இஸ்ரேலுக்கான சர்வதேச தண்டனைப் பொறிமுறையில் இருந்து தப்பித்துக் கொள்ளும் இஸ்ரேலின் திட்டங்களை முறியடிப்பதற்கு ஒன்றுபட்டு செயற்படுத்துவதற்கான முக்கியத்துவத்தையும் வேண்டி நிற்கின்றோம். ஒரு சுயாதீன பலஸ்தீன அரசை நிறுவுவதற்கான அனைத்து வழிமுறைகளையும் அசாத்தியப்படுதும் இஸ்ரேலின் முயற்சிகளை முறியடித்து ஓர் அர்த்த புஷ்டியான முன்னெடுப்புகளை மேற்கொள்வதற்கு சர்வதேச சமூகம் சர்வதேச சட்டங்களும் முன்வர வேண்டும்.

நான் கடந்த ஐ.நா. சபையின் பொதுக் குழு விவாதத்தில் கூறியது போன்று, ஆக்கிரமிப்பின் முற்றுப் புள்ளியுடன் சுதந்திரத்திற்கான விடியலைக் காண முடியும். பலஸ்தீனும் இஸ்ரேலும் சமாதானத்துடனும் பாதுகாப்புடனும் வாழ்வதானது, பலஸ்தீன மக்களுக்கான முழுமை பெறத்தக்கதான சமஉரிமையை பெற்றுக் கொடுப்பதன் மூலமே சாத்தியமாகும். அது ஜோர்தான் நதியில் இருந்து மத்திய தரைக் கடலுக்கிடையில் வாழும் பூர்வீக மக்களின் அபிலாஷைகளிலே முற்றுப் பெறும். எந்தவொரு மக்கள் குழுமமும் பிரிவினைவாத, அடிமைத்துவ வாழ்க்கையை ஏற்றுக் கொள்ளாது என்பதுதான் வரலாறு கூறும் படிப்பினையாகும்.

துன்பகர நூற்றாண்டு நினைவுகளை ஏற்படுத்திய பெல்போர் பிரகடனத்தின் படுமோசமான பலஸ்தீன இனப்படுகொலைக்கும் இனச் சுத்திகரிப்புக்கும் வழிகோலியதற்காக ஐக்கிய இராச்சியம் மன்னிப்பும் பொறுப்பும் கோர வேண்டியது காலத்தின் தேவையாகும். மாறாக அது பிரித்தானிய காலனித்துவத்தின் இருண்ட பக்கங்களை மீண்டும் நினைவுபடுத்துவதாக அமைந்து விடக் கூடாது.

இத்தருணமானது பலஸ்தீன எல்லைகளை சர்வதேசமும், சர்வதேச சட்டங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதத்தில் கோடிட்டுக் காட்டுவதன் மூலமும் ஏனைய பலஸ்தீனத்தின் நியாயபூர்வமான கோரிக்கைகளை நிறைவேற்றுவதன் மூலமும் பெல்போர் பிரகடனத்தின் நூற்றாண்டுத் தவறை நிவர்த்திக்க முடியும்.

பலஸதீனத்திற்கு நிகழ்ந்த நிகழ்வுகளானது ஏனைய நாடுகளுக்கான படிப்பினையும் அனுபவமும் ஆகும். ஆகவே, அனைத்து நாடுகளும் தங்களது பலஸ்தீன் சார்பான பொறுப்புக்கூறலை கொண்டிருக்கின்றது. அதன் மூலம்தான் ஒரு நிலையான உண்மைத் தன்மையுள்ள, சமாதானத்தை பலஸ்தீன்-இஸ்ரேல் நாடுகளுக்கிடையில் உருவாக்குவதன் மூலம் மத்திய கிழக்கில் ஒரு சிறந்த எதிர்காலத்தையும் தலைமுறையையும் தோற்றுவிக்க முடியும்.

## தொகுதி... (04 ஆம் பக்கத் தொடர்)

எனவே, இவற்றையெல்லாம் முஸ்லிம் மக்களும் முஸ்லிம் கட்சித் தலைவர்கள் மற்றும் அரசியல் பிரதிநிதிகளும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். மக்கள் தொகையையும் பிரதிநிதித்துவத்தையும் ஊர்வாதத்தையும் முன்னிலைப்படுத்தி மட்டும் தொகுதிகளைப் பிரிக்காமல், அங்கு வாழும் மக்களுக்குரிய காணிகள் மற்றும் வளங்களும் உள்ளடங்கும் விதத்தில் தொகுதி நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

அத்துடன், எல்லை நிர்ணயக் குழுவுக்கு கருத்துகளைச் சமர்ப்பிப்பதன் ஊடாகவும் ஏனைய அரசியல் அழுத்தங்களைக் கொடுப்பதன் ஊடாகவும், புதிதாக நிர்ணயிக்கப்படவுள்ள தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டு, மாகாண சபைக்கும் நாடாளுமன்றத்துக்கும் தெரிவு செய்யப்படும் முஸ்லிம் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்காவிட்டாலும் குறையாமலாவது பாதுகாக்க வேண்டிய ஒரு கால சூழலில் முஸ்லிம் மக்கள் இருக்கின்றனர்.

ஆனால், முஸ்லிம் கட்சித் தலைவர்களும் அமைச்சர்களும் வழக்கம் போல, தமது பொறுப் பற்ற தனத்தை இதிலும் வெளிப்படுத்தி நிற்கின்றனர். குறிப்பாக, எல்லை நிர்ணய ஆணைக்குழுவுக்கு முன்மொழிவுகளை சமர்ப்பித்த சில அரசியல்வாதிகள், மேற்சொன்ன விடயங்களை எல்லாம் கவனிக்காமல், தமது வெற்றிக்கு வாக்களிக்கக் கூடிய ஊர்களை ஒன்றாகச் சேர்த்தும் ஒரு பிரதேச சபைக்குள் வரும் வட்டாரங்களை இரண்டு வெவ்வேறு தொகுதிகளுக்குள் உள்ளடங்கும் விதத்திலும் முன்மொழிவுகளை முன்வைத் திருப்பது, இன்னும் இவர்கள் திருந்தவில் லையே என்ற கவலையை ஏற்படுத்துகின்றது.

## கிந்தோட்டை... (10 ஆம் பக்கத் தொடர்)

முச்சக்கர வண்டிச் சாரதிகள், சலூன் காரர்கள் மற்றும் வைத்தியர்களின் முழுமையான வாடிக்கையாளர்கள் முஸ்லிம்களே. என்றுமே சிங்களவர்களை கிந்தோட்டை முஸ்லிம்கள் இனவாதக் கண்ணோட்டத்தோடு பார்த்ததில்லை.

பேசித் தீர்க்கப்பட வேண்டிய ஒரு சிறிய சம்பவம் இனவாதத்தினை விதைப்பதையே முழு நேரத் தொழிலாகக் கொண்ட பொளத்த காவி நாய்களாலும், செய்வதற்கு உருப்படியான ஒரு வேலை இல்லாமல் முகநூலில் குந்திக் கொண்டு இனவாதத்தைப் பரப்பிக் கொண்டிருக்கும் சிங்கள இளைஞர்களாலும், அரசியல் உள்நோக்கம் கொண்ட அரசியல்வாதிகளாலும் ஒரு பெரிய கலவரத்துக்கே வித்திடப்பட்டது இலங்கையின் ஒரு சாபக் கேடாகும்.

இலங்கை போன்ற வளங்கள் நிறைந்த ஒரு மிகச் சிறிய நாட்டை திட்டமிட்டு முன்னேற்ற வக்கில்லாத ஒரு கேவலமான, லாயக்கே அற்ற அரசியல் தலைவர்களையும், மதத் தலைவர்களையும் கொண்ட ஒரு நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். யுத்தத்தின் பின் கண்ட அபிவிருத்திக் கனவு, கனவாகவே யுக முடிவு வரை இருக்கப் போகின்றது. பிராந்தியத்திலுள்ள மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து போன்ற நாடுகள் பொருளாதாரத்தில் எங்கோ சென்று கொண்டிருக்க, வெறுமனே 20% முஸ்லிம்களை சனத்தொகையாகக் கொண்ட சிங்கப்பூர் நாட்டில் பர்தா அணியும் ஒரு முஸ்லிம் பெண் ஜனாதிபதியாகும் அளவுக்கு மிகவுமே பக்குவப்பட்ட மக்களையும், அரசியல் சாசனத்தினையும் கொண்டிருக்க, வளங்கள் நிறைந்த இச்சிறு நாடோ சுடுகாடாகிக் கொண்டு செல்கின்றது. அடுத்த சோமாலியாவாக மாறுவதற்குரிய அனைத்துத் தகுதிகளும் இலங்கைக்கு உண்டு.

இனி எந்தவொரு ஜென்மத்திலாவது இலங்கை அபிவிருத்தி அடையும் என்பதனை கனவிலும் எதிர்பார்க்க முடியாது.

'இலங்கைக்கு அபஸரண'


மீள்பார்வை **உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்**

| | | | | |
|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி - ரூபா 40.00 | இந்தியா | | மத்திய கிழக்கு நாடுகள் - 4000.00 | ஐக்கிய இராச்சியம் - 5500.00 |
| 12 இதழ்கள் - ரூபா 600.00 | தனிப் பிரதி | - ரூபா 100.00 | மலேசியா - 4000.00 | அமெரிக்கா - 6500.00 |
| 24 இதழ்கள் - ரூபா 1200.00 | ஒரு வருடம் | - ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் - 4000.00 | அவுஸ்திரேலியா - 4700.00 |
| | | | | சீனா - 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 0777 581 661 People's Bank A/c: 056100153078164 (Branch: Sri Sangaraja Mawatha)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கையை விடவே விடாதே!



ஒரு வேடனுக்கு யானை வளர்ப்பதென்றால் கொள்ளை ஆசை. அவன் பல இடங்களில் குழிவெட்டி உள்ளே விழும் குட்டி யானைகளைப் பிடித்து, இரும்புச் சங்கிலியில் பிணைத்து, பெரிய மரங்களில் கட்டி விடுவான். அவை பிளிறிப் பார்க்கும், தப்பிக்க முயற்சிக்கும். ஆனால், காலப் போக்கில் அவ்வாறு முயற்சிப்பதில் எந்த பலனும் இல்லையென நம்பிக்கையை இழந்து விடும்.

மேலும், அவற்றுக்கு அவ்வப்போது சாப்பாடு வந்து விடும். அதை விரும்பி சாப்பிடும் குட்டிகள் கொஞ்ச நாளில் சமாதானமாகி விடும். வளர்ந்து பெரிதாகி விடவும் செய்யும். இதன் பிறகு, வேடன் அவற்றை சங்கிலியில் இருந்து விடுவித்து கயிற்றில் கட்டி விடுவான். யானைகளும் இனி தப்பித்து என்னாகப் போகிறது என அங்கேயே நின்றுவிடும்.

ஒருமுறை, தன் மகனுடன் வேட்டைக்கு வந்த ஒரு அரசன், ''குட்டி யானைகளை சங்கிலியிலும், பெரிய யானைகளைக் கயிற்றிலும் பிணைத்துள்ளாயே! பெரிய யானைகள் கயிற்றை எளிதாக அறுத்து விடுமே!'' என்று வேடனிடம் கேட்டான்.

''மன்னா! கயிற்றில் பிணைக்கப்பட்ட இந்த யானைகள், குட்டியாக இருந்த போது சங்கிலியில் தான் பிணைக்கப்பட்டிருந்தன. இப்போது அவற்றுக்கு இவ்விடம் பழகி விட்டதால், பெரிதான பிறகும், வேறிடத்துக்குப் போய் என்ன செய்யப் போகிறோம் என நம்பிக்கையை இழந்து விட்டன. எனவே, கயிற்றில் பிணைத்துள்ளேன்'' என்றான்.

இந்த யானைகளைப் போல், நம்பிக்கையை மட்டும் இழந்து விடவே கூடாது. இலக்கை எட்ட ஆரம்பத்தில் என்ன முயற்சி எடுத்தோமோ, அதை விட அதிக முயற்சி எடுக்க வேண்டும்.

மீள்பார்வை

தொகுப்பு: அஸாருதீன்

## 500 ரூபாய்



200 பேர்கள் கூடியிருந்த அரங்கத்தில் ஒரு பேச்சாளார் ஒரு 500 ரூபாய் நோட்டைக் காட்டி

''யாருக்கு இது பிடிக்கும்?'' எனக் கேட்டார்.

கூடியிருந்த அனைவரும் தனக்கு பிடிக்குமென கையைத் தூக்கினர்.

பேச்சாளார் ''உங்களில் ஒருவருக்கு இந்த 500 ரூபாயைத் தருகிறேன். ஆனால் அதற்கு முன்'' எனச் சொல்லி

அந்த 500 ரூபாயைக் கசக்கி சுருட்டினார். பிறகு அதை சரி செய்து ''இப்போதும் இதன் மீது உங்களுக்கு இன்னும் விருப்பம் இருக்கிறதா?'' என்றார்கள்.

அனைவரும் கையைத் தூக்கினர்.

அவர் அந்த ரூபாய் நோட்டை தரையில் போட்டு காலால் நசுக்கி அந்த அழுக்கான நோட்டை காட்டி ''இன்னும் இதன் மேல் உங்களுக்கு விருப்பம் இருக்கிறதா? என்றார்

அனைவரும் இப்போதும் கைகளை தூக்கினர்.

அவர் தொடர்ந்தார் ''கேவலம் ஒரு 500 ரூபாய் தாள் பல முறை கசங்கியும் மிதிப்பட்டும் அழுக்கடைந்தும் அதன் மதிப்பை இழக்கவில்லை. ஆனால் மனிதர்களாகிய நாம் அவமானப்படும் போதும், தோல்விகளை சந்திக்கும் போதும் மனமுடைந்து போய் நம்மை நாமே தாழ்த்தி கொள்கிறோம்.

நம்முடைய மதிப்பு என்றைக்கும் குறைவதில்லை. நீங்கள் தனித்துவமானவர். இவ்வுலகில் உள்ள ஒவ்வொருவருக்கும் ஒவ்வொர்ருத் தனித் தன்மை இருக்கும். அதன் மதிப்பு என்றைக்கும் குறைவதில்லை.

வாழ்க்கை என்ற பயிர்க்கு தைரியமும் தன்னம்பிக்கையும் தான் உரமும் பூச்சிக்கொல்லிகளும். ஆகையால் தன்னம்பிக்கையை இழக்காமல் வாழப் பழகிக் கொள்வோம்.

## இரத்தச் சேமிப்பு



விபத்து அல்லது வியாதியால் ரத்தம் இழந்தவருக்கு ரத்தம் ஏற்றிக் காப்பாற்றுவது இன்று சாதாரண வழக்கமாக உள்ளது. இந்த நடைமுறை, பல ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கிவிட்டது. ஆனால் அப்போதெல்லாம் ரத்தம் ஏற்றுவதால் சில சமயங்களில் நன்மை விளைந்தது, சில சமயங்களில் தீமை ஏற்பட்டது. விஞ்ஞானிகளுக்கு அது புதிராக இருந்தது. அதன் பின்பே, எல்லா மனித இரத்தமும் ஒரே தன்மை உடையதல்ல என்று விஞ்ஞானிகள் உணர்ந்தனர்.

இரத்தம் ஏற்ற வேண்டுமென்றால் இரத்தத்தைச் சேமிக்க வேண்டும். ஆனால் உடலிலிருந்து வெளியேற்றப் படும் இரத்தம் உடனே உறைந்து விடுகிறது. 1914 இல்தான் சோடியம் சிட்ரேட் என்ற இரசாயனப் பொருளை ரத்தத்தில் சேர்ப்பதன் மூலம் அதன் உறைவைத் தடுக்க முடியும் என்று கண்டுபிடித்தார்கள்.

ஆனால் நீண்ட காலத்துக்கு இரத்தத்தைச் சேமித்து வைப்பது எப்படி? இரத்தத்தில் மிதக்கும் செல்கள் சீக்கிரத்தில் இறந்து விடுவதைத் தடுப்பது எப்படி? 1932 இல் இதற்கு சோவியத் மருத்துவர்கள் வழி கண்டனர். குளிரூட்டும் பெட்டியில் இரத்தத்தைப் பாதுகாத்தால், அந்த செல்களை அழியாமல் காக்கலாம் என்று கண்டுபிடித்தனர். அதன் பிறகு இரத்தச் சேமிப்பு நிலையங்கள் என்ற இரத்த வங்கிகளை அமைத்து மக்களிடம் இருந்து இரத்த தானம் பெறும் வழக்கத்தை ரஷ்யர்கள் தொடங்கினர். அது உலகெங்கும் பரவியது.

1936 ஆம் ஆண்டு ஸ்பெயினில் பிராங்கே கலகக் கூட்டத்துக்கு எதிராக குடியரசுப் போராட்டம் நடந்தபோது டாக்டர் நார்மன் பிதின், ரத்தச் சேமிப்பு முறையைப் பயன்படுத்தி போர்க் களத்தில் பல வீரர்களுக்கு மறு உயிர் கொடுத்தார்.

பிதின் கனடா நாட்டுக்காரர். அவர் சோவியத் யூனியனின் ரத்தச் சேமிப்பு ஏற்பாடுகளைக் கற்றறிந்திருந்தார். இறுதியாக அமெரிக்க மருத்துவர்கள் பிளாஸ்மா தயாரிப்பில் வெற்றி கண்டனர். மிதக்கும் அணுக்கள் உள்ளிட்ட முழுமையான இரத்தம் தேவைப்படாத நோயாளிகளுக்கு பிளாஸ்மா கொடுக்கலாம். பிளாஸ்மாவைச் சேமித்துப் பாதுகாப்பதும், நோயாளிக்குக் கொடுப்பதும் எளிது. மேலும் இரத்தத்தில் பிரிவுகள் இருப்பதைப் போல பிளாஸ்மாவில் இல்லை. யாருடைய பிளாஸ்மாவையும் எவருக்கும் கொடுக்கலாம்.

## கத்தரிக்கோலும் ஊசியும்



ஒரு தையற்காரர் தனது கடையில் தைத்துக் கொண்டிருந்தார். அவரது மகன் அவர் வேலை செய்வதைப் பார்த்துக் கொண்டிருந்தான். தையற்காரர் ஒரு புதுத் துணியை எடுத்து, அதை ஒரு அழகிய கத்திரிக் கோலால் துண்டுகளாக வெட்டினார். பின்னர் கத்திரிக் கோலைக் அவர் அமரும் இடம் அருகே வைத்து விட்டார். பிறகு ஊசியால் துணியை தைக்க தொடங்கினார்.

துணியை தைத்து முடிந்ததும் அந்த சிறிய ஊசியை எடுத்து தனது தலையிலிருந்த தொப்பியில் குத்தி பத்திரப்படுத்தினார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த அவரது மகன், அவரிடம் கேட்டான், 'கத்திரிக்கோல் விலை உயர்ந்தது. அதை உங்கள் காலடியில் போடுகிறீர்கள். ஊசி சிறியது மற்றும் மிகவும் மலிவானது. அதை உங்கள் தலை தொப்பியில் பாதுகாக்கிறீர்களே. அது ஏன்' என்று கேட்டான்.

அதற்குத் தந்தை, 'நீ சொல்வது உண்மைதான். கத்திரிக்கோல் அழகாகவும், மதிப்பு உள்ளதாகவும் இருந்தாலும் அதன் செயல் வெட்டுவது அதாவது, பிரிப்பது. ஆனால் ஊசி சிறியதாகவும் மலிவானதாகவும் இருந்தாலும் அதன் செயல் சேர்ப்பது' என்றார்.

## மாளிகாவத்தை மையவாடி

சட்டங்களே சட்டை செய்யாது
சண்டித்தனம் அரங்கேற
மாளிகாவத்தை மையவாடி
மௌத்தாகி விட்டது.

பலசேனாக்கள் உபயத்தில்
ஐயசிங்க கட்டிடம்
ஊனாசாக்களின் எச்சங்கள் மீது
ஜம்மென்று உட்கார்ந்து விட்டது.


கூட்டிக் கொடுத்தவர்களும்
கூப்பாடு போட்டவர்களும்
கட்டிக் காக்கத் துப்பின்றி
கழன்று கொண்டு விட்டார்கள்.

அடங்கப்பட்டவர்கள் எழும்பி
ஆர்ப்பாட்டம் செய்யட்டுமென்று
அரசியல்வாதிகளும்
அமைதியாக விட்டார்கள்.

மாண்ட பின்பும் கட்டிடமென்று
தோண்டியெடுத்து துவம்சிப்பதால்
மண்ணறையில் கூட
மைந்தர் எமக்கு நிம்மதியில்லை.

மையத்துக்கு அழாதவர் கூட
மையவாடிக்காக அழுகிறார்கள்
கையாலாகாத தலைமைகளை எண்ணி
கைசேதமடைகிறார்கள்.

சிவில் அமைப்புகளுக்கும் இது
சில்லறைச் சமாச்சாரம்
பொங்கியெழுவார்கள் என்றிருந்தோம்
பொசுக்கென்று அடங்கி விட்டார்கள்






## நோபல் பரிசு

கலங்கிக் கதறும் அடிமைகளாக
அலங்கோலமாய்ச் சிதைந்து போக
விலங்கின் வீரச் செயலுக்கா இந்த
துலங்கும் அரிய நோபல் பரிசு?

அநியாயக் காரியே ஆங்சாங் சூக்கி
அடைந்திடும் உன்னை அல்லாஹ்வின் சூழ்ச்சி
உன் அடிவருடிகளின் அடாவடித்தனத்தை
ஊக்குவிக்கவா ஒரு நோபல் பரிசு?

கல்நெஞ்சினளே ஆங்சாங் சூக்கி
கலங்கிடும் காலம் உன்புகழ் போக்கி
ஆர்ப்பாட்டமின்றியே அழிக்கும் கலையில்
அமைதி காக்கவா உனக்கு நோபல் பரிசு?

மனித அன்பையே அச்சாணியாக்கிய
புத்தனின் கொள்கை வண்டியை
குடை சாய நீ குப்புறத் தள்ளிய
கொலைக் களத்துக்காக நோபல் பரிசு?

சகோதரத்துவம் சாய்ந்து ஷஹீதாகிட
சஞ்சலத்துடன் நாம் அமைதி காத்திட
அவமானச் சின்னமே! ஆங்சாங் சூக்கி
உவமானத்துக்கொரு நோபல் பரிசு!

—அய்னா—

## கண்ணாடிகளை கலட்டிவிட்டு பாருங்கள்

பள்ளிகளில் மட்டுமல்ல
பல்கலைக்கழகங்களிலும்
ஆன்மீகம் வாழ்கிறது
இன்னமும்
பலருக்கும் புரியாததொன்று

பட்டங்கள் பெறுவோம்
மார்க்க சட்டங்களோடு தான் ...
ஆடைகள் உடுத்தியதும்
அவ்ரத்தை மூடித்தான்

கரைந்து போகாமல்
கலந்து வாழ்கிறோம்
கரைசேர வாழ்வினில்...

கசப்பான செய்திகள்
காதுகளை அடையலாம்
காரணமும் நீங்கள் தான்

கலைக்காதீர்
கற்புக்களையும்
கபடமற்ற எங்களையும்
கற்பனைகளால்........

நீங்களாய் மாட்டிக்கொண்ட
கண்ணாடிகளை
கழற்றிவிட்டுப் பாருங்கள்

கஷ்டங்கள் புரியும்
காயங்கள் தெரியும்
கல்விதனை
கற்றிட
காகுக்காய்
கருகும்
கால்களின்....

உண்ணாத நாட்கள்
உரமாகிய நொடிகள்
உறங்காத இரவுகள்
டயரியின் பக்கங்களில்

நான்கு வருடங்கள்
நாங்கள் படிப்பது
நமக்காக மட்டுமல்ல
நாளைய சந்ததிக்கும் தான்....



வீட்டிற்கும் போகாமல்
ரோட்டிற்கும் இறங்காமல்
ஆர்பாட்டம் செய்கிறோம்
ஈமானோடு
ஆளுக்காள் நீங்கள்
அலப்பறைகள் விடுவதால்..

பல்கலைக்கழக
மாணவிகள் எல்லோரும்
கசங்கிய காகிதங்களல்ல
களங்கமில்லாத ஆயிஷாக்களும் தான்...

பின்த் அக்ரம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

## தலை நிமிர்ந்து நிற்க...

வென்று வந்த பின்பு
சென்று வாருங்கள் என்று
டாடா காட்டுகிறார்கள்.

நோட்டையும் இறைத்து
வோட்டையும் போட்டவர்களின்
கோட்டையே கழற்றும்
கைங்கரியம் தொடர்கின்றது.

எதிர்க்கட்சியிலிருந்தால்
ஆட்டலாம் அரசாங்கத்தை,
அரசாங்கத்திலிருந்தால்
ஆட்டம் காணும்
சமூகம்

கெடுபிடி
கூடிய பின்னரும்
எடுபிடி
வேலையா?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Z.N. Traders

T.P 0756953536
0777478768
0759478767

High Quality Wedding Gold Purse, Leather Belts, Fancy Items, Cosmetic Items, and Concert Items.

No: 141/1,London Suiting Market, Main Street, Colombo-11

# விளையாட்டில் 720 கோடி சம்பாதித்த வீரர்!



சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த ரோஜர் பெடரர் டென்னிஸ் விளையாட்டில் ஜாம்பவானாக திகழ்ந்து வருகிறார். டென்னிஸின் உயரிய தொடரான கிராண்ட் ஸலாம் பட்டத்தை 19 முறை கைப்பற்றிய ஒரே வீரர் என்ற சாதனையைப் படைத்துள்ளார். 2016-ம் ஆண்டு காயத்தால் அவதிப்பட்ட ரோஜர் பெடரர், இந்த ஆண்டு ஆஸ்திரேலிய ஓபன் மற்றும் விம்பிள்டன் பட்டத்தை வென்று அசத்தினார். தற்போது வரை 95 பட்டங்கள் வென்றுள்ள பெடரர், பரிசுத் தொகை மூலம் பலகோடி ரூபாய் சம்பாதித்துள்ளார்.

உலகில் உள்ள பிரபலங்களின் வருமானம், அவர்களின் சொத்து மதிப்புகளை வெளியிடும் போர்ப்ஸ் பத்திரிகை விளையாட்டில் கிடைக்கும் பரிசுத் தொகை மூலம் அதிகம் சம்பாதித்தவர்கள் பட்டியலை வெளியிட்டது. இதுவரை உலகின் பணக்கார விளையாட்டாக கருதப்படும் கோல்ப் விளையாட்டின் மன்னனாக கருதப்பட்ட அமெரிக்காவின் டைகர் வூட்ஸ் முதல் இடத்தில் இருந்தார். தற்போது டைகர் வூட்ஸை பின்னுக்குத் தள்ளி ரோஜர் பெடரர் முதல் இடத்தை பிடித்துள்ளார்.

ரோஜர் பெடரர் இதுவரை 720 கோடி ரூபாய் சம்பாதித்து முதல் இடத்தில் உள்ளார். டைகர் வூட்ஸ் 718 கோடி ரூபாய் சம்பாதித்து 2-வது இடத்தில் உள்ளார்.

# இந்திய - இலங்கை ஒருநாள் போட்டிகளின் நேரம் மாற்றம்!

இலங்கை அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. தற்போது மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. இந்த தொடர் முடிந்தவுடன் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடர் நடைபெறுகிறது.

முதல் போட்டி டிசம்பர் 10 ஆம் திகதி தரம்சாலாவிலும், 2 ஆவது போட்டி டிசம்பர் 13 ஆம் திகதி மொகாலியிலும், 3 ஆவது மற்றும் கடைசி போட்டி டிசம்பர் 17 ஆம் திகதி விசாகப்பட்டினத்திலும் நடக்கிறது. பகல் - இரவு போட்டி என்பதால் அனைத்தும் மதியம் 1.30 மணிக்கு தொடங்கும் வகையில் அட்டவணை தயாரிக்கப்பட்டிருந்தது. டிசம்பர் மாதம் வட மாநிலங்களில் அதிக அளவில் குளிர் நிலவும். இதனைக் காரணம் காட்டி தரம்சாலா மற்றும் மொகாலி ஆட்டங்களில் தொடங்கும் நேரத்தை பிசிசிஐ மாற்றியுள்ளது.

முதலில் 1.30 மணி என்றிருந்த தொடக்க நேரத்தை தற்போது 11.30 மணியாக மாற்றியுள்ளது. 11.30 மணிக்கு போட்டி தொடங்கினால், இரவு 7.30 மணியளவில் போட்டி முடிந்துவிடும். குளிர் தாக்கம் அதிகமாக இருக்காது. இதனால் பிசிசிஐ இந்த முடிவை எடுத்துள்ளது.

இமாச்சல பிரதேசம் மற்றும் பஞ்சாப் மாநில கிரிக்கெட் சங்கத்துடன் ஆலோசனை நடத்தப்பட்டது. அப்போது அவர்கள் வைத்த கோரிக்கையின் அடிப்படையில் இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது என பிசிசிஐ தெரிவித்துள்ளது.

# விஷேட தேவையுள்ளோருக்கான விளையாட்டுப் போட்டியில் சம்மாந்துறை மாணவன் சாதனை

-சாஜித் அலி

விசேட தேவையுள்ள மாணவர்களுக்கான அகில இலங்கை ரீதியிலான நடைபெற்ற விளையாட்டுப்போட்டியில் சம்மாந்துறை, அல்-அர்சத் மகா வித்தியாலய மாணவன், எம்.ஐ.எம்.முஜீப் பங்கேற்றிருந்தார்.

அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற விளையாட்டு போட்டி கடந்த 17 ஆம் திகதி ஹோமாகம மஹிந்த ராஜபக்ஷ மைதானத்தில் நடைபெற்றது. இதில் உயரம் பாய்தல் போட்டியில் அகில இலங்கை மட்டத்தில் 2ம் இடத்தினையும் தட்டறிதல் (பரிதிவட்டம்) போட்டியில் அகில இலங்கை மட்டத்தில் 3 ஆம் இடத்தையும் எம். முஜீப் பெற்றுள்ளார். 2ம் இடத்திற்காக 15,000 ரூபா பரிசும் 3 ஆம் இடத்திற்காக 10,000 ரூபா பரிசும் காசோலைகளாக வழங்கப்பட்டன. இதற்கு முன்னரும் முஜீப் பரிதிவட்டம் 200m, மற்றும் உயரம் பாய்தல் நிகழ்ச்சிகளில் மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



இவரைப் பயிற்றுவித்து ஊக்குவித்த விஷேட தேவையுள்ள மாணவ பிரிவுப் பொறுப்பாளரனான ஆசிரியர் எம்.ஐ.எம். றியாத் ஆசிரியருக்கும் மற்றும் ஒத்துழைப்புக்களை வழங்கிய ஏ.எல். அப்துல் மஜீட் அதிபர் அவர்களுக்கும் சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்.

2017

## Education and Knowledge Development Centre

ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழி மூலம் தரம் 06 இல் கற்பதற்கு கடந்த 2017 ஆகஸ்ட் 05 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 130 இற்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற ஆண் மாணவர்களிடமிருந்து நாடளாவிய ரீதியில் விண்ணப்பம் கோரப்படுகின்றது.

- அரச பாடசாலையில் இணைந்து கற்பதுடன் சிறந்த ஆசிரியர் குழாத்தினால் பகுதி நேர வகுப்புகள் இடம்பெறும்.
- கற்றலுக்குப் பொருத்தமான அமைதியான சூழலில் விடுதி வசதி.
- சுத்தமான, ஹலாலான உணவு வசதி.
- அல்குர்ஆன், ஹதீஸ் விளக்கமுடன் தஜ்வீத், பிக்ஹு வகுப்புகள் துறைசார் அறிஞர்களால் நடாத்தப்படும்.
- தலைமைத்துவப் பயிற்சி மற்றும் உடற்பயிற்சி

இந்நிறுவனத்தில் இணைந்து கற்க விரும்பும் மாணவர்கள் தங்கள் பெயர். தொலைபேசி இலக்கம், விலாசம் மற்றும் 2017 புலமைப் பரிசில் பரீட்சையில் பெற்ற புள்ளிகளைக் குறிப்பிட்டு 15-12-2017 இற்கு முன்

The Director
EKDC,
523/6, Pahalagama Road, Thihariya, (11875) Kalagedihena.

என்ற விலாசத்திற்கு விண்ணப்பத்தை பதிவுத் தபாலில் அனுப்பவும்

*கட்டணம் மற்றும் மேலதிக தகவல்களுக்கு - 0770161415*




Printed and Published by Focus Media (Pvt) Ltd, 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org